
726

REGD. No. M-3660

# கிருஹலக்ஷ்மி


ஸ்திரிகள் சித்திர மாதப் பத்திரிகை

1st AUGUST 1937



# GRIHALAKSHMI

ILLUSTRATED LADIES' MAGAZINE






# கிரஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை

பிரசுரிப்பவர்

டாக்டர் கே. என். கேசரி.

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ., (ஆனர்ஸ்)

மலர் 1] ஆகஸ்ட் 1937 [இதழ் 8

PRINTED AT THE LODHRA PRESS, EGMORE, MADRAS.



159943
5-AUG 193

# கி ர ஹ ல க்ஷ் மி

## சந்தா விவரம்

வருடசந்தா ரூ. 3, ஆறு மாதம் 1-8-0. 6 மாதத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 4-8-0. தனிப்பிரதி விலை அணா 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாரராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணா போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. யின் அதிகச் செலவுதான்.

## விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு 12½% கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## ஏஜண்டுகள்

பிறிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினுல் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனுவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

## பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெருத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

## சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோருகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

## குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே.என். கேசரி, பிரசுரிப்பவர், தபால் பெட்டி நெ. 752, எழும்பூர், சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும்.




போலிகளைக் கண்டு உஷார்!!!


அமிர்தாஞ்சனம்

கேவலம் "கிரஹலக்ஷ்மி"

சகல வலிகளையும் போக்கும்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்,

பம்பாய், மதருஸ், கல்கத்தா.




பிரகாசம் ரோல்ட் கோல்ட் நகைகள்

பத்து வருஷம் உத்தரவாதம்

மலிவானது! நீடித்துழைப்பது!!

நிறம் மாருது!!!

நீங்கள் மலிவாக பேரம்செய்து பணம் சேமிக்க விரும்புகிறீர்களா?

"அணிவதற்கு அழகு, மங்கையரையும், மதலைகளையும் மாண்புறச் செய்வது."

சிகப்பு, பச்சை, நீலம், வானவில் கலர் சின்தெடிக் கற்கள் இழைக்கப்பட்ட பிரகாசம் கல் சங்கிலியை வாங்குங்கள். ஒரு கலர் அல்லது இரு கலர் அல்லது பல கலர் கற்கள் பதித்த சங்கிலிகள் உங்கள் தேவைக்குத் தகுந்தபடி செய்து தருகிறோம்.

எங்களிடம் பலரக வளையல்கள் கழுத்துச் சங்கிலிகள், ஒட்டியாணம் முதலியன கிடைக்கும்.

(1937-ம் வருஷத்திய கேட்லாக் இனும்.)

ஆர். எஸ். பிரகாசம் & கோ.,
அலாய் கோல்ட் நகை வியாபாரிகள்,
187, சைனு பஜார் ரோட், மதருஸ்.

# பொருளடக்கம்


1. வாடியமலர் வருத்தம் .... .... .... 513
2. புதிய அரசியலும், ஸ்திரீகளும் .... .... .... 517
3. கல்யாணரங்கன் தற்கொலை — திரு. ஸி.எஸ். இராமன், எம்.ஏ.எல்.டி. .... 520
4. பராசக்தி — ஸ்ரீமதி எஸ். கமலா .... .... 524
5. பாதாம் ஹல்வாவும், பாயஸமும் — "ஸரோஜா" .... .... 528
6. முத்து — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் .... .... 529
7. பதிவிரதைகளின் சிறப்பு — திரு. டி. கே. கோவிந்தய்யர் .... 534
8. பொல்லாத காசுமாலை — ஸ்ரீமதி கே. கமலா .... .... 536
9. ஸ்ரீபுவனேஸ்வரி மாதா— திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை, டர்பன் .... 540
10. மான்டினீக்ரோ — ஸ்ரீமதி ஜி. கிரிஜா .... .... 544
11. மாதொருபாகனுர் — ஸ்ரீமதி ச. அன்னபூரணி .... .... 548
12. பங்கஜம் திருந்திய விதம் — ஸ்ரீமதி பத்மாசனி .... .... 551
13. பூஞ்சோலை — 'சந்திரிகா' .... .... 555
14. ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி — "கண்ணன்" .... .... 556
15. ஆத்மகௌரவம் — ஸ்ரீமதி எஸ். நாகலக்ஷ்மி .... .... 561
16. ஸ்திரீ வித்யா — ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயலக்ஷ்மி .... .... 563
17. பாலின் சிறப்பு — திரு. இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை .... 566
18. விடுகதை வினு — திரு. ஸி. எஸ். ஜகதீச சுந்தரம் .... .... 568
19. தஞ்சாவூர் — திரு. எஸ். ஆர். வெங்கோபராவ் .... .... 569
20. ஜகாபாய் — 'மைதிலி' .... .... .... 571
21. செய்தித்திரட்டு .... .... .... 574
22. விசித்திரம் ஆனுல் வாஸ்தவம் .... .... .... 576
23. கதம்பம் .... .... .... 578
24. சினிமா குறிப்புகள் .... .... .... 580
25. ஆசிரியர் குறிப்புகள் .... .... .... 581
26. பஞ்சாங்கம் .... ... .... 583
27. பிரசவ அட்டவணை .... ... .... 584

மூவர்ணப்படங்கள்

1. வாடியமலர் வருத்தம்
2. ரஜபுத்ர மங்கை




# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

**பெங்களூர் :** மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மெண்ட்.

**கோலார் கோல்ட் பீல்ஸ் :** திரு. எம். ஏ. தாஸ், கண்ணபிரான் தெரு, ராபர்ட்ஸன் பேட்டை, கோலார் கோல்ட் பீல்ட்ஸ்.

**சேலம் :** எம். எஸ். ராஜகோபால், கோபால்ஸ் நியூஸ் மார்ட், சின்னக்கடைத் [தெரு.

**பொள்ளாச்சி :** திரு. கே. ஆறுமுகம், நியூஸ் ஏஜன்ட்.

**மதனபள்ளி :** என். ராதாகிருஷ்ணய்ய செட்டி, நியூஸ் ஏஜன்ட்.

**திண்டிவனம் :** திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.

**சித்தூர் :** திரு. வி. வெங்கடரமணய்ய செட்டி, 163, பஜார் ரோட், சித்தூர்.

**வேலூர் :** திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.

**திருச்சிக்கோட்டை :** திரு. எஸ். அஜீபா சாஹிப், நியூஸ் ஏஜண்டு, வைரவன் கோவில் தெருவு.

**மதுரை :** திரு. ஜீ. வெங்கட நாராயண அய்யர், ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர், 248, மேலமாசி வீதி.

**திருநெல்வேலி டவுன் :** திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழரத வீதி.

**தூத்துக்குடி :** மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட்.

**பீமாவரம் :** திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார் பார்மஸி.

**நிடதவோல் :** திரு. கே. ஸி. சென்ன கேசவய்யர், வியாபாரி.

**ஹனுமகொண்டா :** திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.

**சென்னை :** மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.

**கொழும்பு :** திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, நார்ரிஸ் ரோட்.

**யாழ்பாணம் :** திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.

**ரங்கூன் :** திரு. வி. பகவதி சாஸ்திரி, 244, பேர் தெரு.

**கோலாலம்பூர் :** திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் *F.M.S.*


ஹிக்கின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**கிரஹலக்ஷ்மி காரியாலயம்,**
தபால் பெட்டி நெ. 752,
**எழும்பூர், : : சென்னை.**



வாடிய மலர் வருத்தம்



## வாடியமலர் வருத்தம்

நம் மூதாதையர்களும், முன்னோர்களும் உண்மையான ஞானத்தை அடைய ஒவ்வொருவரும் முயற்சி செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையான ஞானம் எப்படிக் கிடைக்கும்? கல்வி, கேள்விகளை ஆராய்ந்து கற்று அதன்படி நடப்பதினாலேயே கிடைக்கும். ஞானத்தை அடைவதற்கு கல்வியே மார்க்கம். சரியான முறையில் கல்வியைக் கற்று ஞானத்தையும் அடைந்து அம்மார்க்கத்தின் மூலம் தெய்வசன்னிதானத்தை அடைதலே மோக்ஷத்துக்கும் முக்திக்கும் மார்க்கமாகும். "கற்றதனாலாய பயனென் கொல், வாலறிவன் நற்றாள் தொழா ரெனின்" என்று பொய்யில் புலவர் திருவள்ளுவ நாயனாரும் திருக்குறளில் கூறியிருக்கிறார். நற்கல்வியை அடைந்தவர்கள் கர்வம் சற்று மின்றி தன்னடக்கம் மிகுந்து இருப்பார்கள். 'தான்' என்ற அகந்தை குடிகொண்டிருப்போர் என்ன கற்றறிந்தபோதிலும் கல்வியினாலாயபயனை அவர்கள் எய்த வில்லை யென்றே கூற வேண்டும். தற்காலக் கல்விமுறை யாதொரு லட்சியமும் கொண்டது அல்ல. எவ்வளவோ பேர்கள் அதை வெறுக்கிறார்கள். எத்தனையோ நிபுணர்கள் இந்தக் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால் நடப்பது என்ன? வெள்ளாடுகள் போல் எல்லோரும் இந்தப் பயனற்ற கல்வி கற்பதிலேயே தங்கள் காலத்தையும், பணத்தையும், சக்தியையும் செலவு செய்து வருகிறார்கள். தன்னடக்கம், பணிவு, பெரியாரிடத்து அன்பு முதலிய நற்குண நற்செய்கைகளை மக்களிடத்து வளர்க்கும் தூய கல்வியை எல்லோரும் அடையவேண்டும். உண்மை ஞானம் பெற நூல்கள் மட்டு மன்றி பகவானால் சிருஷ்டி செய்யப்பட்ட புல்பூண்டுகள், விருக்ஷங்கள், பக்ஷி ஜாலங்கள் முதலியவும் உதவி செய்கின்றன. அறியாமை

என்ற அந்தகாரத்தினின்றும் நீங்க அறிவென்னும் ஒளியை தாவரவர்க்கங்களும் மக்களுக்கு போதிக்கின்றன.

முதல் படத்தில் காணப்படும் யுவதியும் உப்புக்குதவாத இந்தக் கல்வியையே கற்றவள். ராஜவம்சத்து ரஜினி. எழில் மிகு நல்லாள். பார்ப்பவர் தம் மனதைக் கொள்ளை கொள்ளும் வதன விலாஸமுடைய நாரீமணி. பெயரும் பத்மாவதி. ஆனால் தன் அழகும், அறிவும் மிக உயர்ந்தவை என்றும், தனக்கு நிகர் இவ்வுலகில் யாருமில்லை யென்னும் 'தான்' என்ற அகந்தையான இருள்மாயை அவளிடம் குடிகொண்டிருந்தது. கர்வம் என்ற மாயையால் மூடப்பட்டிருந்த அக்கன்னியை மணம் செய்து கொள்ள எத்தனையோ ராஜகுமாரர்கள் முன்வந்தார்கள். ஆனால் பத்மாவோ வந்தவர்களை "இது சொள்ளை, அது சொட்டை" என்று ஏதாவது குற்றம் கண்டுபிடித்து அவர்களை எல்லாம் வந்த வழியே திரும்பிச் செல்லச் செய்தாள். எவ்வளவு உயர்ந்த பொருள்களானாலும் "தூ, என்ன பிரமாதம்" என்று இடதுகாலால் உதைத்துத்தள்ளி விடுவாள். எவருடனும் இன்சொல் இயம்பமாட்டாள். வாய் திறந்து பேசிவிட்டால் முத்து உதிர்ந்து விடுவதுபோல் அவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாள். யார்வந்தாலும் அவர்கள் படிப்பு என்ன; அந்தஸ்து என்ன; தான் அவர்களுடன் பேசத்தகுந்தவர்களா என்றெல்லாம் ஏகமாக யோசனை செய்து பின்னர் ஓரிரு மொழிகள் உதிர்ப்பாள். இப்படி உலகிலேயே தனக்கு நிகர் வேறு யாருமில்லை என்ற கர்வத்துடன் இருந்தால் யார்தான் அவளிடம் அன்பாக இருப்பார்கள்? நாளாவட்டத்தில் ஈன்றெடுத்த தாய் தந்தையருக்குக்கூட அவள் மீது வெறுப்பு ஏற்பட ஆரம்பித்து விட்டது. "சீ" என்ற மனப்பான்மை உண்டாய் விட்டது. எவ்வளவுக் கென்றுதான் அவர்கள் கஷ்டப்படுவார்கள். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டல்லவா? எவ்வளவு நேர்த்தியான விலையுயர்ந்த சிங்கார ஆடை ஆபரணங்களை அவர்கள் பொறுக்கி எடுத்து அவளுக்குக் கொடுத்தாலும் அவைகள் தான் அணிந்து கொள்ளுவதற்கு லாயக்கற்றவை, தன்மனதுக்குப் பிடிக்கவில்லை யென்று வெறுத்துத் தள்ளி வந்தாள். பெற்றோர்களும் விதியை நொந்து கொண்டு "அவள் கர்வம் எப்படி அடங்கவேண்டுமோ அப்படி அடங்கட்டும்" என்று சலிப்பினால் ஒருவாறு வாளாவிருந்துவிட்டனர். பத்மாவுக்கு வயது பதினாறு ஆயிற்று; பதினேழும் சென்றது. பதினெட்டும் நடந்தது.

ஆனால் திடீரென ஒரு சம்பவம் அவள் வாழ்க்கையில் நேரிட்டது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு சமயம் ஏதாவது ஒரு சம்பவம் நேரிடுகிறது. அதனால் அவர்களின் ஜன்மமே ஒரு பெரிய மாறுதலை யடைகிறது. வாழ்க்கை முறையிலேயே பெரும்புரட்சி உண்டாகி விடுகிறது. துயரம் என்றால் என்னவென்று துளிக்கூட அறியாது வளர்க்கப்பட்டு வந்த சித்தார்த்தர் (புத்தர்) கிழவன், பிணம் இவற்றைக் கண்டவுடன் மனம்மாறி உலகவாழ்வை வெறுத்து சன்யாசியாக மாறிவிடவில்லையா? பில்வமங்கள்கூட ஒரு சிறு சம்பவத்துக்குப்பின் பரமபக்தனாய் மாறிவிடவில்லையா? "பத்மாவும் அதுபோல்





தானா?" என்று கேட்கிறாயா? சொல்லுகிறேன்; கேள்.

முன்பு ஒரு நாள் பத்மா உத்தியான வனத்துள் பிரவேசித்தாள். அன்றலர்ந்த செந்தாமரை புஷ்பம் ஒன்று தண்ணீர்த் தடாகத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதைப்பறித்துக் கொண்டு உலாவினாள். பங்கஜமலர்களைப் பார்த்தபின் அரண்மனை புகுந்து கண்ணாடியில் தன்னழகை மறுமுறையும் பார்த்தாள். மனதில் ஆத்திரம் மூண்டது. "என்ன நம்முடைய அழகுக்கும் பத்மங்களின் வனப்புக்கும் எவ்வளவு தூரம்! சீ, எனக்கு 'பத்மா' என்று எப்படித்தான் என் பெற்றோர்கள் பெயரிடத் துணிந்தார்களோ! என் எழிலில் நூறிலொரு பங்குகூட இல்லாத பத்மத்தின் பெயர் எனக்கு வேண்டவே வேண்டாம். இந்தப் பெயரை வைத்துக்கொள்ளுவதை விட நான் பேரே இல்லாமல் இருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டாள். என்ன அகம்பாவம்! பத்மத்தைப் பழிக்கும் அழகுடையாளாம் அவள்!

மற்றொரு தினம் பத்மா தாமரைத் தடாகத்தை அடைந்தாள். கதிரவன் ஒளியின் பரிதியைக்கண்டு மலர்ந்து விளங்கிய ஒரு கமல புஷ்பத்தைக் கொய்தாள். அதன்தேனை அருந்த மூண்டிருந்த தேனீக்களையும், வண்டினங்களையும் துரத்திவிட்டு தன் மென்கரங்களில் வைத்துக்கொண்டாள். ஏனோ தெரியவில்லை. எதற்கோ பாபம்! அரண்மனைக்குத் திரும்பியதும் வாயிலிலேயே அம்மலரை எறிந்துவிட்டாள். உள்ளே சென்றதும் வழக்கப்பிரகாரம் கண்ணாடிமுன் சென்றாள். தன்னழகைப்பார்த்துக் கொண்டாள்; சிரித்துக் கொண்டாள்; அழகு காட்டினாள்—இன்னும் என்னமோ "விஷமங்கள்" நிலைக்கண்ணாடிமுன் செய்தாள். என்றாலும் அன்று அவளுக்கு இதற்கு முன்னிருந்த உற்சாகமும், தன்னம்பிக்கையும் இல்லை. இதற்கு முன் கண்ணாடியைப் பார்க்கும் போதெல்லாம் உண்டாகும் சந்தோஷமும் குதூஹலமும் இப்போது ஏற்படவில்லை. ஏதோ மனதில் சற்று திகில் ஏற்பட்டிருக்கும் போலிருக்கிறது. உடனே போய் படுக்கையில் படுத்தவள் மறுநாள் விடியும் வரை எழுந்திருக்கவேயில்லை; ஒரே தூக்கம், ராத்திரி சாப்பாட்டிற்கும் ஒருவரும் எழுப்பவில்லை; எழுப்பினால் கோபித்துக் கொண்டால் என்ன செய்வது என்ற பயம்! பொழுதும் புலர்ந்தது, நங்கையும் எழுந்து வாசலுக்கு வந்தாள். நேற்று அவளால் வீசியெறிந்த பங்கஜமலர் அவள் கண்முன் தென்பட்டது. உடனே அவ்விடத்திலேயே சோர்ந்து அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

சகோதரிகளே! யௌவனமும், கௌமாரமும், எழிலும் நிலையானவையல்ல. காலச்சக்கிரமானது நாமும் அறியாமலே நம்வதன பிம்பங்களில் மாறுதல்களைச் செய்கிறது. குழந்தைப் பருவபுன் முறுவல்கள் எங்கே? வாலிபப்பருவ வதன விலாஸம் எங்கே? வயது ஏற ஏற அவைகள் மறைந்து விடுகின்றன. இளமையும், எழிலும் என்று மிருப்பனவல்ல. காலச்சக்கிரம் சுழலும்போது எத்தனையோ விசித்திரங்கள் எல்லாம் நிகழ்கின்றன.

பத்மா மனச்சோர்வு தெளிந்து தான் எறிந்த பத்மத்தைக் கையில் எடுத்தாள். உடனே இதழ்கள் 'பொல பொல' வென்று உதிர்ந்தன. அதன் கண்கவர் நிறம் மாறிக் கறுமையாக இருந்தது. "ஒரு

காளில் அதன் பிரகாசம் என்னவாயிற்று" எனபத்மா நினைத்தாள். இதுதான் மாயை எனப்படுவது. உலகப்பொருள்கள் யாவுமே இத்தன்மை வாய்ந்தனவல்லவா? நாமும் பொது விதிக்கு விலக்கானவர்கள் அல்ல. இந்த அஞ்ஞானத்தைப் போக்கப் பரமன் மீது பக்தி செலுத்தி வருவதே சிறந்த வழி.

பங்கஜ மலர் வாடி வதங்கி கேட்பாரற்றுக் கிடந்த காட்சி பத்மாவின் உள்ளத்தில் ஒரு பெரும் கிளர்ச்சியை உண்டாக்கியது. மனம் உண்மையை உணர்ந்தது. அகந்தை என்ற அகங்கார இருள் ஓடியது. தன்னை அவள் அறிந்தாள். அவளுடைய மனப்பான்மை அடியோடு மாறிவிட்டது. தான் மிகவும் உயர்ந்தவள், மற்றவர்கள் எல்லோரும் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணத்தைக் கைவிட்டாள். குணம் பொருந்திய ஒரு மணாளனை மனப்பூர்வமாய் காதலித்து அவனை மணம்புரிந்தாள். பெற்ற தாய்தந்தையர்கள் மனம் குளிர்ந்தது. ஜென்மம் எடுத்ததன் லட்சியம் ஸ்திரீயானவள் கிரஹலக்ஷ்மியாய் விளங்குவதன்னியில் தேசசேவையும் செய்து தம்மினும் தாழ்ந்தோரை உயர்த்தும் பணியும் செய்வதே என்று பத்மா உணர்ந்தாள். அவ்வாறே தன் கணவனுடனும், தந்தையுடனும் சமூகசேவையில் ஈடுபட்டு எல்லோராலும் புகழப்பட்டு தெய்வப் பணியாகிய "ஏழைகளின் தொண்டில்" ஈடுபட்டு மனநிம்மதியாய் இல்லற விளக்காய் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாள்.





# புதிய அரசியலும், ஸ்திரீகளும்

பிரிட்டிஷ் சர்க்காரால் வழங்கப்பட்ட புதிய அரசியல் சீர்திருத்தம் 1937ம் வருஷம் ஏப்ரல்மீ 1உ அமுலுக்கு வர வேண்டியது. ஆனால் அத்தேதியில் காங்கிரஸ் மெஜாரிட்டியாகவுள்ள ஆறு முக்கிய மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியார் மந்திரி பதவி ஏற்க மறுத்தனர். கவர்னர்கள் மந்திரிகளின் சட்ட ரீதியான நடவடிக்கைகளில் தலையிடக்கூடாதென உறுதி கொடுத்தால், காங்கிரஸ் கட்சியினர் பதவி ஏற்றுக்கொள்ளலாம் என மஹாத்மா காந்தியடிகளின் யோசனையைத்தழுவி காங்கிரஸ் காரியக்கமிட்டியார் தீர்மானித்திருந்தனர். ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் அதற்கு இணங்கவில்லை. சட்டம் எப்படி அமுலிலிருந்து வரும் என்பதைப்பற்றி இந்தியா மந்திரி, உப மந்திரி, வைசிராய் பிரபு, கவர்னர்கள் யாவரும் தேன் ஒழுகப்பேசிப் பிரலாபித்தார்கள். தங்கள் எண்ணம் தூயமானது என்று அலறினார்கள். தேசம் இருக்கும் நிலையை உணர்ந்த மஹாத்மா மந்திரி பதவி ஏற்றுக் கொள்ளலாம் என அனுமதித்தார். ஏதோ ஒரு வழியாய் அரசியல் நெருக்கடி தீர்ந்தது. 1935ம் வருஷத்து இந்தியா சட்டத்தை ஒழிக்கவும், காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் காணப்படும் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கவும் மேற்படி ஆறு மாகாணங்களிலும் காங்கிரஸ் கட்சியார் மந்திரி பதவி ஏற்று வெகு மும்மரமாய் தங்கள் வேலையில் ஈடுபட்டுவிட்டார்கள். நம் மாகாணத்திலும் ஸ்ரீயுத ஸி. ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் காங்கிரஸ் மந்திரி சபை அமைக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியாரும் ஆக்க வேலையில் ஈடுபட முன் வந்துள்ளார்கள்.

இச்சமயத்தில் காங்கிரசும் காங்கிரஸின் சார்பாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட ஸ்திரீ சட்டசபைப் பிரதிநிதிகளும் ஜனத்தொகையில் பாதியினராகிய ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்கான முக்கிய காரியங்களை நிறைவேற்றிவைக்க வேண்டியது அத்தியாவசியம் என்று நாம் எடுத்துக் கூற வேண்டியதில்லை. நம் மாதர் சிகாமணிகள் மஹாத்மா காந்தியடிகளின் சத்யாக்ரஹப்போரில் தலையிட்டு பட்ட இன்னல்களும், இடுக்கண்களும் சொல்லத்தரமன்று. தன்னலமற்று 'தேச விடுதலை' என்ற ஒரே லட்சியத்துடன் தடியடி பூஜை, சாக்கடை தீர்த்தாபிஷேகம், சிறைவாசவிருந்து முதலியவற்றைச் சந்தோஷமாக வலிய ஏற்று அனுபவித்தனர். தலைவர்களும் அவர்களின் ஒப்பற்ற தியாகத்தை மெச்சிப் புகழ்ந்தார்கள். சர்க்காரும் மாதர்களிடை உண்டான எழுச்சியைக்கண்டு திகைத்து திக்குமுக்காடினார்கள். அவர்களின் தியாகமே காங்கிரஸின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்று கூறுதல் மிகையாகாது.

இது சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் கட்சி மாதருலகத்தின் தியாகத்தைச் சரியானபடி கௌரவிக்கவில்லை என்பதை நாம் சொல்ல வேண்டியதிருப்பதற்குப் பெரிதும் வருந்துகிறோம். காங்கிரஸ் கட்சி சர்க்காரால் ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்கள் தவிர பொதுத் தொகுதிகளில் ஸ்திரீகளை போதிய அளவு நிறுத்திவைக்கவில்லை. தேர்தல் நடைபெற்ற பின்னும்

மந்திரி சபை நியமித்ததிலும் மாதர்களின் உரிமை அலட்சியம் செய்யப்பட்டது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அரசியல் வாதிகள் அதற்குப் பலகாரணங்கள் கூறலாம். ஆனால் மாதர் சமூகம் அச்சமாதானங்களைக் கண்டு திருப்தி அடைய முடியாது. சில மாகாணங்களில் ஸ்திரீகளை சட்டசபை (Lower House) உப அக்கிராசனராகத் தேர்ந்து எடுத்திருக்கிறார்கள். சந்தோஷம். மிகவும் வந்தனம். ஆனால் பண்டித ஜவஹர் மாகாணமாகிய ஐக்கிய மாகாணத்தைத் தவிர மற்ற ஐந்து மகாணங்களிலும் ஒரு ஸ்திரீ மந்திரியாவது கிடையாது. ஐக்கிய மாகாணத்தில் ஜவஹரின் ஸகோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் மந்திரிபதவி அளிக்கப்பட்டிருக்கிறார். இதர மாகாணங்கள் இது விஷயத்திலும் பிற்போக்காக நடந்து கொண்டது ரொம்பவும் வருந்தத்தக்கது. ஏதோ போனது போகட்டும். இனியாவது காங்கிரஸ் மந்திரிசபை மாதர்களுக்கு அனுகூலமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

புதிய சட்டசபைகளில் எல்லாம் ஸ்திரீ பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அவர்கள் கடமை என்ன என்பது பற்றி நாம் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். அவர்கள் அரசியலில் மட்டும் கவனம் செலுத்தாது சமூக சீர்திருத்தத்தின் அவசியத்தையும் நன்குணர்ந்து கொள்ளல் வேண்டும். தங்கள் சகோதரிகளின் நிலைமையை அவர்கள் யாவரும் நன்குணர்ந்திருக்கிறார்கள். ஸ்திரீகள் குறைபாடுகள் அனந்தம். தேவைகள் எண்ணற்றவை.

மாதர்கள் இன்று இருந்துவரும் தாழ்ந்த நிலைக்குக் காரணம் அவர்களின் அறியாமையே. இந்த அறியாமை என்ற அந்தகாரத்துள் அவர்கள் அகப்பட்டுக் கொண்டு தங்களுக்கு நன்மை எது, தீமைகள் எது, தங்கள் தேவைகள் என்ன, அவைகளை எப்படிப் பெறலாம் என்பது கூடத் தெரியாமல் தத்தளித்து நிற்கிறார்கள். எழுதப்படிக்கத் தெரிந்த ஸ்திரீகள் 100க்கு இரண்டுபேர்கூட இல்லை. இந்தக் கேவலமான ஸ்திதியை அகற்ற வேண்டியது ஸ்திரீ சட்டசபை அங்கத்தினர்களின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். கட்டாய இலவச ஆரம்பக்கல்வி பள்ளிக்குப் போகக்கூடிய எல்லாச் சிறுமிகளுக்கும் அளிக்கும்படியான திட்டங்களையும், வசதிகளையும் சர்க்கார் கையாளும்படி மாதர் பிரதிநிதிகள் இடையறாது போராடவேண்டும். மங்கையர் சமூகத்துக்கு கலைமகளின் கடாட்சம் பரிபூரணமாகக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். கல்வியின் அவசியத்தைப்பற்றி நாம் அதிகம் எழுதத்தேவையில்லை. "எண்ணும் எழுத்துங் கண்ணெனத்தகும்" என்று நம் மூதாதையர் கூறியிருக்கின்றனர். திருவள்ளுவரும் கல்வியறிவே உண்மையான கண்கள், மற்றவை ஊனக்கண்கள், கல்வி அறிவு இல்லாதார் மாட்டு வெறும் புண்களே என்றும் கூறியுள்ளார். கல்வியே கண்கள். கல்வியற்றோர் கண்ணற்ற குருடர்கள்தான். எனவே நம் சகோதரிகள் யாவரும் உண்மைக் கண்களைப்பெற்று வாழும்படியான நிர்மாண வேலையில் ஸ்திரீ முன்னேற்றத்தைக் கருதும் ஒவ்வொரு பிரதிநிதியும் ஈடுபட வேண்டியது கடமையாகும்.





பால்ய விவாஹம், சிசு மரணங்கள், பிரசவமரணங்கள் இவற்றை ஒழிக்க வேண்டிய முறைகளைத் துரிதமாகக் கையாளும்படி சர்க்காரைத் தூண்ட வேண்டும். சிசுமரணம் என்ற அரக்கன் நம்மாகாணத்தில் தலைவிரிகோலமாய் நடனமாடி நம் அருமந்த மக்களைக் கவர்ந்து செல்லுகிறான். இவ்விரு கொடுமைகளுக்கும் ஒரு முக்கியகாரணம் பால்ய விவாஹம் என்பது யாவரும் உணர்ந்த விஷயம். இப்பொழுது இருந்துவரும் பால்ய விவாஹத்தடைச் சட்டம் ரொம்பவும் மிதமானது. சாரதா சட்டத்தில் அவசியமான மாறுதல்களைச் செய்து அச்சட்டம் உண்மையான பலனை அளிக்கும்படி செய்யவேண்டியது ஸ்திரீ சட்டசபை அங்கத்தினர்களின் மற்றொரு முக்கிய கைங்கர்யமாகும். பிரசவ உதவி எல்லா மாதர்கட்கும் எளிதில் இனமாகக் கிடைக்கும்படி ஸ்திரீ ஆஸ்பத்திரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும்படி சர்க்காரை வற்புறுத்தவேண்டும்.

சமூக சீர்திருத்த சம்பந்தப்பட்டவைகளான வரதக்ஷிணைக் கொடுமை, விவாஹரத்து, விதவாவிவாஹம், சம்பாத்தியம், ஸ்திரீதனம், பரம்பரை பாத்தியதைகள் முதலியவற்றுள் சட்டப்படி ஸ்திரீகளுக்கு இருந்து வரும் அசௌகர்யங்கள் அனந்தம். உத்தியோக விஷயங்களிலும் ஆண் பெண் என்ற வித்தியாசத்தை ஒழித்து அவர்கள் உரியயோக்கியதைகள் உடையவராயிருந்தால் எல்லா இலாகாகளிலும் அவர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கப்படும்படி செய்யவேண்டும். இன்னும் இது போன்ற குறைகள் எல்லாவற்றையும் கவனத்துடன் தெளிவாக ஆராய ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, எந்த எந்த விதங்களில் சட்டங்கள் சீர்திருத்தப்படவேண்டும், எவ்விதம் காலதேசவர்த்தமானங்களைக் கொண்டு திருத்தி அமைத்தால் மாதர்களின் முன்னேற்றத்துக்கு நிரந்தர நன்மை விளையும் என்று கண்டு, அவ்வித மாறுதல்களை சட்டரீதியாக நிறைவேற்றி விரைவில் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். சட்டமோ, மதமோ, சமூக பழக்க வழக்கங்களோ ஸ்திரீகளின் உண்மையான, நியாயமான முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடாதபடி செய்யவேண்டியது தங்கள் முக்கிய பணியென்பதை நம் ஸ்திரீ பிரதிநிதிகள் நன்றாக உணர்ந்து, அதற்கேற்ப தங்கள் வேலை முறையை அமைத்துக்கொள்ளவேண்டுமென்று நாம் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நம் சென்னை சட்டசபை ஆரம்ப விழாவில் முக்கிய சம்பவம் ஸ்ரீமதி லக்ஷ்மி சங்கரய்யர் தேசிய கீதம்பாடி சபைநடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தது. அன்னாரின் வீர ஒலி கேட்போர் மனதை உற்சாக மூட்டியது. நம் சட்டசபையில் அசெம்பிளியில் ஒன்பது மாதர்களிருக்கிறார்கள். கௌன்ஸிலில் ஒருவரை சர்க்கார் நியமித்துள்ளார்கள். இந்த பத்துப் பேர்களும் மனம் வைத்து நாம் மேற்குறிப்பிட்டுள்ள விஷயங்களில் ஒற்றுமையுடன் கவனம் செலுத்தி வேண்டியன செய்வரேல் நிச்சயம் சட்டசபையும், காங்கிரஸ் சர்க்காரும் அவர்களுக்கு உதவி புரியும். உலகமே பெரும் கொந்தளிப்பில் இன்று இருக்கிறது. நம் நாட்டில் ஒரு விதமாக சமாதானம் நிலவி வருகிறதென்று கூறலாம். அரசியல் புயல் தணிந்திருக்கும் சமயங்களில் இவ்வித ஆக்க வேலைகளைக்கவனித்துச் செய்தால்தான் மக்கள் க்ஷேம மடைவார்கள்; நாடு நலம் பெறும். நாட்டுக்கும், தங்கள் சகோதரிகளுக்கும் நலன் விளையக்கூடிய நற்காரியங்களைச் செய்து இந்திய மாதரின் மேன்மையையும், சிறப்பையும் நிலைநாட்டுவார்களாக. "சாத்திரங்கள் பலபலகற்று, சௌகர்யங்கள் பலபலசெய்து, மூத்த பொய்மைகள் யாவும் அழித்து, மூடக் கட்டுகள் யாவுந்தகர்த்து, காத்து மானிடர்கள் செய்கையனைத்தையும் கடவுளர்க்கினிதாகச் சமைத்து ஏத்தி உலகம் போற்றிட வாழ்வாராக."

# கல்யாணரங்கன் தற்கொலை

திரு. ஸி. எஸ். இராமன், எம். ஏ. எல். டி.

தனது காதற்கிளி சுந்தரவல்லி வேறொரு யௌவனப் புருஷனைக் காதலிப்பதாக அறிந்துகொண்ட கட்டழகன் கல்யாணரங்கன் மனத்தில் கலக்கமும் விசனமும் சமுத்திர அலைபோல் கரைபுரண்டன. அவன் தனது ஏமாற்றத்தைத் தாங்க மாட்டாதவனாய்த் தன் உயிரை மாய்த்துக்கொள்ள மனவுறுதி கொண்டு ஒரு நல்ல உரமான கயிற்றை எடுத்துக்கொண்டு இருளடர்ந்த வீட்டொன்றை நாடிச்சென்றான்.

கல்யாணரங்கன் கயிற்றை எடுத்துக்கொண்டு, எதிரில் யாராவது வந்து தன் கருத்தை நிறைவேற்ற வேண்டாம் என்று கூறுவார்களோ என எண்ணி, பயந்தவனாய் நிர்மானுஷ்யமாக இருந்த ஒரு வீதியில் ஒரு வீட்டையடைந்து, தான்கொண்டு வந்திருந்த சாவியால் அதனுடைய பூட்டைத் திறந்து, மெள்ள உள்ளே சென்றான். மாடிப்படிகள் வழியாக மேன்மாடியையடைந்து, ஓர் இருள் சூழ்ந்த அறையையடைந்தான். எங்கும் இருள் சூழ்ந்திருந்தமையால் சந்தோஷமுற்று—தற்கொலை செய்துகொள்ள வந்த இடத்திலும் சந்தோஷம்!—தான் கொணர்ந்த கயிற்றை மேற்கூரையைத் தாங்கிய பெரும் கட்டையில் கட்டி விட்டு அதைத் தன் கழுத்தில் சுருக்கிட்டுக்கொள்ளலாம் என்னும் எண்ணத்துடன் கயிற்றையெடுத்தான். தான் இறந்ததும் மறுநாள் காலை போலீஸ் அதிகாரிகளும் பத்திரிகை நிருபர்களும் அவ்விடம் வந்து பரிசோதனை செய்வதையெண்ணினான். பத்திரிகைகள் பெரிய எழுத்தில் பின்வருமாறு தற்கொலையைப் பற்றிப்பேசும் என்று கருதினான்:

"கல்யாணரங்கன் தற்கொலை!"

"ஐயோ! காதலின் பொருட்டுத் தற்கொலையா?" என்று மறுபடியும் சிந்தித்தான். "நான் ஏன் ஆத்திரமும் கோபமும் கொண்டு இப்பொழுதே தற்கொலை செய்துகொள்ளவேண்டும்? என் காதலி சுந்தரவல்லி யாரையோ நேசிப்பதாக பாங்கியில் இருப்பவன் சொல்லியதை மனதில் வைத்துக்கொண்டு தற்கொலை செய்துகொள்ளுவதா? நான் எதற்கும் எனது காதலி இந்நேரத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறாள் என்பதைக் கண்டபின் தற்கொலையைப்பற்றி யோசனை செய்யலாம்," என்று கருதினான்.

அங்கு நின்றும் அகன்றான். இரவு பத்துமணி. எங்கும் இருள். அதைப் பொருட்படுத்தாமல் காற்றினுங்கடிதாக கல்யாணரங்கன் தனது காதலியின் வீட்டை யடையந்தான். அங்கு அவன் வீட்டிற்குப் பின்புறத்தில் ஒரு யௌவன புருஷன் அவளுடன் நகைத்துப் பேசிக்கொண்டிருந்ததைக்கண்டு, கடுங்கோபங்கொண்டு, அங்கு நின்றும் அகன்று, தனது ஆபீசுக்கு ஓடினான்.

அவனிடம் "கிருஷ்ணவிலாஸ்" பாங்கியின் சாவிகள் இருந்தன. அக்கிதியின் மானேஜர் அவன் பால் மட்டற்ற அன்பும் வாத்ஸல்யமும் வைத்திருந்தாராதலின், பாங்கியின் சாவிகளை அவனிடம் கொடுத்திருந்தார்.

"எனது 'ஆபீஸ்' அறையில் 'ரிவால்வரை' வைத்திருக்கிறார் மானேஜர். அதை எடுத்துக்கொண்டு, என்னை சுட்டுக்கொண்டு இப்பொழுது உயிரையும் உடலையும் தொலைத்து விடுகிறேன்," என்று கல்யாணரங்கன் தன் மனத்தினுள் எண்ணமிட்டுக்கொண்டே கிருஷ்ணவிலாஸ் பாங்கியையடைந்தான்.

அங்கு காவற்காரன் ஒரு மூலையில் கண் அயர்ந்துகொண்டிருப்பதைக்கண்டு, மிகவும் சந்தோஷங்கொண்டு, மெதுவாகத் தனது அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். கதவை மூடுவதற்கு மறந்துவிடவில்லை. தாளிட்டுச் சென்றான்.

தனது மேஜையின் 'டிராயரைத்' திறந்தான். அதில் மானேஜருடைய ரிவால்வர் இருந்தது. எடுத்தான். சோதித்தான். சிலகுண்டுகள் இருந்தன. "இதுபோதும், என் உயிரைக்கொள்ள," என்று சொல்லிக் கொண்டான். அவனுடைய மனதில் ஒரு வகையான களிப்பு ஏற்பட்டது. அந்த யுவனுக்கு அது மட்டற்ற ஊக்கத்தையும் தைரியத்தையும் கொடுத்தது.

அதை யெடுத்துக்கொண்டு பக்திசிரத்தையோடு பாங்கியின் பணம் வைத்திருந்த கல்லறையை யடைந்தான். அவனுக்குப் பின் யாரோ மெதுவாகக் கதவைத்திறந்தது போல் சப்தம் அவனுக்கு எட்டியதால் கல்யாணரங்கன் அச்சமுற்று சுற்றுமுற்றும் நோக்கினான். யாரையுங் கண்ணுற்றானில்லை. அங்கு தன்னை ரிவால்வரால் சுட்டுக்கொண்டால் ரிவால்வர் சப்தம் வெளியில் இருப்பவர்களுக்குக் கேட்காது என்று முடிவுசெய்தான்.

ரிவால்வரைத் தனது மார்புக்கு நேரே நீட்டிவைத்துக்கொண்டு பளபளப்பாக மின்னிக்கொண்டிருந்த ஒருகண்ணாடியைப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! யாரோ ஒரு அந்நியன் கையில் ரிவால்வர் ஒன்று வைத்துக்கொண்டிருந்ததையும் அவன் பின்புறம் இருந்ததையும் கண்டான். வந்தவன் பாங்கியின் பொன்னையும் மணியையும் களவாட வந்திருப்பதாகவே நினைத்திட்ட கல்யாணரங்கன் தனது காரியத்தை மறந்து, அவனைச் சுடுவதற்குத் தனது கைத்துப்பாக்கியை நீட்டினான். அதை எதிர்நோக்கியிருந்த அந்நியன் தனது ரிவால்வரால் கல்யாணரங்கனைச் சுட்டுவிட்டான். கல்யாணரங்கன் கீழே விழுந்துவிட்டான்.

மறுநாட்காலை பாங்கியில் கல்யாணரங்கன் கொல்லப்பட்டதாக எழுந்த பேச்சு திருப்பத்தூர் முழுதும் பரவிவிட்டது. யாரோ ஒரு கள்வன் அவனைச் சுட்டுவிட்டதாக ஜனங்கள் பேசிக்கொண்டனர். போலீஸ் அதிகாரிகள் ஆராய்ச்சி செய்வதாகவும் பேசினர். அப்பொழுது காலை ஒன்பது மணி இருக்கும்.

கிருஷ்ண விலாஸில் களவுபோனதைப் பற்றிப் போலீஸ் புலிகள் விசாரணை செய்ய ஆரம்பித்தார்கள். பாங்கியின் வேலைக்காரன் கணபதி, திருடன் வெளியில் வந்தபோது அவனைச் சுட்டதாகவும், கல்யாணரங்கன் தான் உள்ளே போயிருந்த திருடனைச் சுட்டதாகவும் விஷயம் போலீசுக்குக் கிடைத்தது.

பிரதம போலீஸ் அதிகாரி நமது கதாநாயகனைப் பார்த்து, "ஐயா, நீர் திருடனை எப்படிக் கண்டு பிடித்தீர்?" என்று கேட்டார்.

"நான் என் வீட்டிலிருந்தும் தூக்கம் வாராமையால் பாங்கி இருக்கும் இடத்திற்குப் போனேன். யாரோ ஒருவன் கதவைத்திறந்து உள்ளே நுழைந்ததைக் கண்டு நானும் ஒரு வழியாக என் அறையின் உள்ளே சென்றேன். திருடன் பொன்னும் மணியும் இருக்கும் இடத்தில் இருந்தான். மானேஜருடைய ரிவால்வரால் சுட்டேன். திருடன் என்னைச் சுட்டு விட்டு வீதி வழியாக ஓடிவிட்டான். எனக்கு ஏதோ ஒருவகையான மயக்கம் ஏற்பட்டதால் கீழே விழுந்து விட்டேன். நான் மட்டும் அப்பொழுது அங்கே போயிராவிட்டால் கள்வன் பாங்கி முழுவதையும் காலி செய்திருப்பான் என நம்புகிறேன்," என்று கல்யாணரங்கன் தான் பாங்கியினுள் தற்கொலை செய்து கொள்ளச் சென்ற விஷயத்தை மறைத்துப் பேசினான்.

போலீஸ் அதிகாரி பின்னர் கணபதியையழைத்து விஷயத்தைக் கேட்டார்.

இவன், "துரைங்கோ கேளுங்கோ, நா வெளியே காவல் காத்திட்டுக்கிடந்தேன். அப்போ உள்ளே துப்பாக்கி சத்தங்கேட்டதுங்கோ. யாரோ ஒத்தன் ஓடியாந்தானுங்கோ. என் கையாலே அந்த நாயிக்கு ரெண்டடி கொடுத்தேனுங்கோ. அத்தாலே அவன் எழுந்து போக முடியலயுங்கோ. நா அவனே கயிறால் கட்டிடலாமென்று வெளியே போனேங்கோ. வந்து பாத்தா ஆளே காணங்கோ, பின்னுடி நா உள்ளே போயி பாத்தேனுங்கோ. நம்ம ரங்கரு கீழே கிடக்குறுங்கோ, மானேஜரு வீட்டுக்கு ஓடிப்பூட்டே. விசயத்தே சொன்னே. அவ்வளவு தா," என்று சொல்லி முடித்தான்.

மானேஜர் கடையியில் விசாரிக்கப்பட்டார். அவர், "நிதியில் மூவாயிரம் ரூபாய் தான் களவு போயிற்று. கல்யாணரங்கன் அங்கு இல்லாமல் இருந்திருந்தால் அத்திருடன் எல்லாப்பணத்தையும் கொண்டு போயிருக்கலாகும். பாங்கிசார்பில் நான் கல்யாணரங்கருடைய தைரியத்தை மெச்சுகிறேன். அவருக்கு உதவி மானேஜர் எனும் புதிய உத்தியோகத்தைக்கொடுக்கிறேன்," என்றார்.

விசாரணைக்குப்பின் போலீஸ் அதிகாரி கல்யாணரங்கனுடைய தைரியத்தை வியந்து பேசினார். "இவர் இல்லாமல் போயிருந்தால் பாங்கி முழுவதும் களவாடப்பட்டிருக்கும்," என்றார்.

சென்னை தினசரிகளில் கல்யாணரங்கனுடைய பெயர் பிரபலமாயிற்று. அவனுடைய படமும் பிரசுரிக்கப்பட்டது.

அவன் பாங்கியில் நல்ல உத்தியோக உயர்வு பெற்றதும், அவன் தான் செய்யவிருந்த தற்கொலையே அத்தகைய உயர்வைக் கொடுத்ததாக நினைந்து நினைந்து மனம் பூரித்தான். தனக்குத்தானேகவே சிரித்துக் கொண்டான். கடைசிமுறை தன்னுடைய காதலியைச் சந்தித்து அவளுடைய அன்பைப் பெறலாம் என யோசித்து, சுந்தரவல்லியின் வீட்டையடைந்தான்.





அப்பொழுது அவள் சொகுசான சோபாவில் சாய்ந்து, ஒய்யாரமான ஓவியம்போலும் விளங்கியவளாய், முன்பு கல்யாணரங்கன் பார்த்த யௌவனப் புருஷனுடன் தனது காதலனுடைய பிரதாபத்தைப் புகழ்ந்து கொண்டிருந்தாள். அதைக் கண்ட கல்யாணரங்கன் மனம் கோபமடைந்தான். அதைக்கண்ணுற்ற அக்கருங்குழலாள் குயிலினுமினிய குரலில், "காதலரே, ஏது கோபம்?" என்று கேட்டாள்.

"மனதாரக் காதலிக்கிறாயா நீ?" என்று வினவினான் கல்யாணரங்கன்.

"நீர் கேட்பது என்ன அதிசயமாக இருக்கிறது! இவரைக் கேளும் நான் உம்மைப்பற்றி என்ன நினைக்கிறேன் என்பதை. இவர் எனது சித்தப்பாவின் புதல்வர் கிருஷ்ணசிங்கர்," என்று அந்த யௌவனப் புருஷனை அறிமுகப் படுத்தினாள்.

"ஐயோ! கிருஷ்ணசிங்கனை இவளுடைய காதலன் எனக் கொண்டு தற்கொலை செய்து கொள்ள இருந்தேனே!" என்று மனம் புழுங்கினான் கல்யாணரங்கன்.

இரண்டு வாரங்களுக்குப்பின் காதலர் இருவரும் விவாகம் செய்துகொண்டனர். தற்கொலையின் அதிருஷ்டத்தைப் பாருங்கள்!

## பொக்கிஷதார்

ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய தேகக் கட்டையும் வனப்பையும் விருத்தி செய்ய வேண்டும். தங்களைப் பற்றித் தாங்களே பெருமை கொள்ள வேண்டும். நோயின்றி உற்சாகத்துடன் வாழவேண்டும். பலவித வியாதிகள் இருப்பதாக மனக்கிலேசம் அடையக்கூடாது. தேக வலிமையும், தைர்யமும் வாய்ந்த பெண்களாய் இருப்பாராயின் எதிர்காலத்தில் வீரம் மிக்க மக்களைப் பெற்று தேசத்துக்கும், சமூகத்துக்கும் அளித்து தாங்களும் இன்புறலாம். ஒருவள் எத்தகைய உணவை உட்கொண்டபோதிலும் மனச்சாந்தியும் உள்ளக் களிப்பும் இல்லாளாயில் அவளுடைய தேக ஆரோக்கியத்துக்கு பங்கமே ஏற்படும். "போதுமென்ற மனமே பொன் செய்யு மருந்து." பெண்கள் ஒவ்வொருவரும் சாமர்த்திய மிக்க பொக்கிஷ மெம்பர்கள். அவர்களுடைய பட்ஜட் திறமை மிகுந்த நிபுணர்களுடையவைகளைக் காட்டிலும் எவ்வளவோ மேன்மை என்று கூறலாம். அவர்கள் மிகுந்த பொறுமைசாலிகள்.

—ஜார்ஜ் லான்ஸ்பரி.

# பராசக்தி

ஸ்ரீமதி. எஸ். கமலா

சக்தி பூஜை என்பதைப்பற்றி நம் நாட்டில் ஒருவித தப்பபிப்பிராயம் நிலவி வருகிறது. சக்திபூஜை செய்பவர்கள் மந்திரவாதிகள் என்றும், தந்திரவாதிகள் என்றும், காமாதுரந்தரர்கள் என்றும் பலர் நினைக்கிறார்கள். சக்தி என்றால் அது ஒரு கொடூரமான கோரசொரூப பேய் தெய்வம் என்று எண்ணுகிறார்கள். அது சரியானதல்ல. காளி, மாரி, மகமாயி, சாமுண்டீஸ்வரி, முதலிய பெயர்கள் சக்தியின் அம்சங்களைக் குறிப்பனவே. "தேவி மகாத்மியம்." என்னும் புஸ்தகத்திலும் இதர சில நூல்களிலும் காளி தேவியைப் பற்றிக் கூறும்போது சில பயங்கரமான அம்சங்கள் சொல்லப்படுகின்றன. பல கரங்களையும், பயங்கரமான கண்களையும், கோபப்பொறி பரக்கும் கண்களும், விரிந்த சடையும், கோரப்பற்களும், தள்ளிய நாக்கும், முரட்டு மூக்கும், இரத்தம் கக்கும் வாயும், வேல், சூலம் முதலியன ஏந்திய கைகளும், மண்டை ஓட்டுமாலையும், புலித்தோல் ஆடையும், மாமிசதாரியும், திடுக்கிடும் சப்தத்தையும், இன்னோரன்ன இதர பயங்கரமான அம்சங்களையும் காளி மாதா பெற்றிலங்குகிறாள் என்று சில நூல்கள் கூறுகின்றன. இந்த மாதா பூஜையின் உண்மையை உணராத சிலர்கள் அசம்பாவிதமான பலவிதங்களில் காளியை பூஜித்து வருதலும் சக்தியின் உண்மை வேதாந்தத்தை அறியாமலிருக்க ஹேதுவாயிருக்கிறது. இந்த வழிபாட்டின் உண்மையான ஆழ்ந்த கருத்து யாது என்று அறிவாரும் இல்லை. ஆகையால் இதைப்பற்றி சில மேல்நாட்டார் பலவித தப்பபிப்பிராயங்களைப் பரப்பி வந்திருக்கிறார்கள். "காமப்பித்தர்கள் களியாட்டு" என தாய்த் தெய்வவழிபாட்டைக் கூறுவோரின் மதியை என்னென்று கூறுவது! ஜகஜ்ஜோதியாய் பிரகாசித்து மறைந்த ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பூஜித்த மாதா என்ன பிடாரியா? இன்று அரவிந்தர் தொழும் அன்னை அகங்கார சொரூபமா? அன்று சிவாஜி மன்னனுக்குக் குலவிளக்காகவும், பிரிய தெய்வமாயும் விளங்கிய பவானிதேவி பயங்கரரூபியா? அவளைத் தொழுத இவர்கள் காமப்பித்தர்களா? "எந்நாட்டு விடுதலைக்காக என் உயிரையும் தியாகம் செய்வேன்" என்று துர்கை யுருவச் சிலையின் முன் சத்தியம் செய்து அச்சத்தியத்தை முப்பது வருஷ சிறைவாசத்துக்குப் பின்னும் காப்பாற்றி வரும் ஸ்ரீயுத விநாயக தாமோதர சவர்க்கார் அறியாத மனிதரா? இவ்வளவு பெரிய ஞானிகளும், வீரர்களும், அரசியல் தீரர்களும் போற்றித்துதித்த 'மாதா' என்ன கேவலம் பெண்ணாசை பித்தர்கள் தொழும் துஷ்ட தேவதையா? இல்லை. அதைப்பற்றிச் சற்று ஆராய்வோம்.

மாதாவின், சக்தியின் அம்சங்களைப் பற்றிய உண்மைகளை ஆழ்ந்து ஊர்ந்து ஆராய்தல் வேண்டும். அன்னை பராசக்தியைப்பற்றிக் கூறுவது -"தேவி மஹாத்மியம்" என்ற நூலாகும். இதற்கு "சப்தஷதி" என்றொரு பெயரும் உண்டு. இது எழுநூறு பாடல்கள் கொண்ட ஒரு நூலாகும். இந்நூல் மார்க்கண்டேய புராணத்தில் ஒரு பாகமாகும். காளிமகத்துவத்தை மார்க்கண்டேய முனிவருக்கு பிரம்மாவே எடுத்துக் கூறியதாகச் சொல்லப்படுகிறது. தைர்யமும், வீரமும் நிறைந்து இம்மையிலும், மறுமையிலும் இன்பமும் புகழும் அடைய விரும்புவோர் வீரசக்தியைப் பூஜிக்கவேண்டுமென பிரம்மா கூறியிருக்கிறார். "மனித சமூகம் அவளைத் தொழுதால் எல்லாவித தீமைகளினின்றும் காப்பாற்றப்படும்" என்று படைப்புக் கடவுள் கூறுகிறாரென்றால் சக்தி பூஜையின் தத்துவம் தான் என்ன? காளி வழிபாட்டின் அடிப்படையான கொள்கை என்னவென்றால் நம்முடைய பஞ்சேந்திரியங்களும் ஒன்றுபட்டு பாபச் செயல்களை அடக்கி நசுக்குவதில் தயங்காதிருக்கவேண்டும் என்பதே. "தேவி மகாத்மியத்தை" மேலெழுந்தவாரியாக வாசிக்காமல் உட்கருத்துணர வேண்டுமென்று ஊன்றிப் படிப்போமேயானால் மேற்கூறிய உண்மை தெள்ளிதில் புலப்படும்.

பராசக்தியின் பராக்கிரமச் செயல்களை விவரிக்கும் சிலகதைகளையும் அறியலாம். சுரத மன்னனுக்கும், சமாதி என்ற வைசியனுக்கும் ஒரு ரிஷி காளியின் பெருமையை எடுத்துக் கூறும்போது "தாயே உலகப்படைப்புகள் யாவற்றுக்கும் ஆதிமாதா" என்று கூறி இருக்கிறார். அவளைப்போற்றி அவ்விருவரும் தங்கள் இஷ்டசித்தியடைந்தார்களெனச் சொல்லப்படுகிறது.

துர்கை, காளி, சக்தி, பவானி, மாதா என்ற பெயர்கள் எல்லாம் தயாபரி, திரிசூலி சங்கரியையே குறிக்கின்றன. சக்தி சில அரக்கர்களை மாய்த்த விவரங்கள் பதின்மூன்று பாகங்களில் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றை மூன்று முக்கிய சரித்திரங்களாகப் பிரிக்கலாம்.

முதல் கதை எப்படி தேவி விஷ்ணு பகவானுக்கு மது, கைதபா என்ற கொடிய அரக்கர்களைக் கொல்லுவதற்கு ஹேதுவாயிருந்தாள் என்பதைத் தெரிவிக்கிறது. மதுவும், கைதபனும் இல்லாத அட்டகாசங்கள் புரிந்து தேவர்களுக்குப் பல தொல்லைகள் இழைத்து இறுமாந்திருந்தனர். தேவர்களை இந்த ராக்ஷசர்களிடமிருந்து காக்கவல்ல சாக்ஷாத் நாராயண மூர்த்தியும் மாயையால் பீடிக்கப்பட்டு தன்னை மறந்து துயில் புரிந்தார். மாயா தேவியைப் புகழ்ந்து தேவர்கள் பாடித் துதித்தார்கள். தேவி விஷ்ணுவை விடுவித்தார். கேசவன் தேவர்கள் தீனக்குரல் கேட்டு அசுரரை வதைக்க விரைந்தேகினான். 5000 வருஷங்கள் யுத்தம் செய்தும் மது, கைதபர்கள் மடிவதாயில்லை. விஷ்ணுவும் மாயையின் உதவியை நாடினார். மாயா சக்தி ராக்ஷசர்களுக்குக் கர்வத்தை உண்டாக்கி விஷ்ணுவைத் தங்களிடம் வரம் கேட்கும்படி சொல்லச் சொன்னாள். திமிர்பிடித்த அசுரர்கள் அவ்வாறே ஆதிமூலரை ஏதாவது வரம்கேட்கச் சொன்னார்கள். அவர் "நீங்கள் என் கைப்பட மடியவேண்டுமென்பதே என் விருப்பம்" என்று கூறினார். லோகமாதாவும் அவரை அகம்பாவம் என்ற மாயையால் மூடி, உலகம் பூராவே ஜலமயமாக இருப்பது போல் தோன்றச் செய்தான். அவர்களும் ஜலம் இல்லாத எந்த இடத்திலும் தங்களை பகவான் கொல்லலாம் என்று மகாவிஷ்ணுவுக்கு 'வரம்' அளித்தனர். உடனே பகவான் அவர்களைக் கழுத்தால் பிடித்து தொடையில் போட்டுக்கொண்டு சக்கிராயுதத்தால் சம்ஹரித்தார். தேவர்

களும், முனிவர்களும் இந்த சம்ஹாரத்தை வருவாக்கியதற்காக தேவியைப் புகழ்ந்து போற்றினார்கள்.

## மஹிஷாசுர வதம்

மகிஷாசுரன் என்ற ராக்ஷசன் ஆரிய வர்த்தத்தில் தோன்றி தன் படைகளுடன் மிருக்க அக்கிரமங்களைச் செய்தான். இவனைக்கொல்ல பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலியவர்களாலும் முடியவில்லை. உடனே அவர்களுக்கு ஒரு யுக்தி தோன்றியது. அவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் ஆயுதங்களை லோகமாதாவிடம் கொடுத்தார்கள். இதுவே சக்தியின் கோர சொரூபம் எனக் கருதப்படுகிறது. விஷ்ணு சக்திக்கு சக்கிராயுதத்தைக் கொடுத்தார்; சிவன் திரிசூலத்தை அளித்தார்; இந்திரன் வஜ்ராயுதத்தைத் தந்தார்; யமதர்மராஜன் தனது பாசக்கயிற்றை சமர்ப்பித்தான்; இத்தனை ஆயுதங்களையும் கொண்டு இத்தனை தெய்வாம்சங்களின் கோரத்தன்மையையும் கொண்டு சிங்க வாகனமேறி மஹிஷாசுரனை வதைத்தாள் பராசக்தி என்று கூறப்படுகிறது. அதனாலேயே அம்பிகைக்கு மஹிஷாசுரமர்த்தனி என்றபெயர் வழங்கி வருகிறது. இந்த சொரூபத்தையே எல்லோரும் ருத்ரகாளி என்றும், பயங்கரமானதென்றும், துஷ்ட தேவதை என்றும் கூறி நடுங்குகிறார்கள். ஆனால் இதன் உண்மை என்ன? ஒற்றுமையே உய்யும் மார்க்கம் என்பதைத்தான் இது வற்புறுத்துகிறது. அதர்மத்தை அழிக்க தர்மாம்சங்கள் எல்லாம் ஒன்று கூட வேண்டும்; அதர்மம் ஒரு பெரிய அரக்கன்; அதை தெய்வீக குணங்கள் என்ற ஆயுதங்களால்தான் வெட்டிவீழ்க்க வேண்டுமென்பதையே இந்தசொரூபம் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது. இதைக் கண்டஞ்சுவானேன்?

## ரக்தபீஜ சம்ஹாரம்

மற்றொரு யுகத்தில் லோக மாதா பர்வத குமாரியாக ஹிமயகிரி அரசன் புதல்வியாக அவதரித்து சும்பன், நிசும்பன் என்ற இரு ராக்ஷசர்களை வதைத்ததாகச் சொல்லப்படுகிறது. தேவி ஹிமாவதியின் அழகு உலகப்பிரசித்திபெற்றது. சகல தேவர்களையும் வென்று தனியரசு செலுத்திவந்த ராக்ஷச சகோதரர்கள் மலைமகளின் அழகைப்பற்றிக் கேள்விப்பட்டார்கள். அவர்களின் துன்மந்திரிகள் ஹிமாசலன் புத்திரியை அவர்கள் கவர்ந்துகொள்ள வேண்டுமென்று தூண்டினார்கள். உடனே இவர்களின் தூதர்கள் பர்வத குமாரியின் முன் சென்று தங்கள் ராக்ஷச மன்னர்களுக்கு யாரும் நிகரில்லையென்றும், அவள் அழகில் ஒப்பற்று விளங்குவதால் தங்கள் மன்னர்களை மணந்துகொள்ள வேண்டுமென்றும் கூறினார்கள். பார்வதியும் தன்னை அவர்கள் போரில் வெல்லுவதானால் மணந்துகொள்ளத் தயார் என்று கூறி அனுப்பிவிட்டாள். சும்ப நிசும்பர்கள் கோபாக்கிராந்தர்களாய் தங்கள் படைத் தலைவனை தூம்ரலோசனனை அனுப்பி பர்வதவர்த்தனியை மரியாதையாக உடன் வராவிட்டால் தலைமயிரைப் பிடித்திழுத்து வரும்படி அனுப்பினார்கள். தூம்ரலோசனன் தன் படையுடன் வந்து தன் கைவரிசையைக் காட்டினான். லோக மாதா கோபமாகப் பார்த்தாள். ஒரே நெருப்புக்கிளம்பி தூம்ரலோசனையும், அவன் கூட்டாளிகளையும் நாசம் செய்தது.





பிறகு ரக்தபீஜன் என்ற அரக்கசேனாதிபதி யுத்தத்துக்கு வந்தான். இவனைக் கொல்ல யாராலும் முடியாது. இவன் ரத்தம் ஒரு சொட்டு பூமியில் விழுந்தால் அவனைப்போன்ற ஆயிரக்கணக்கான அரக்கர்கள் அதினின்றும் முளைப்பார்கள். உடனே தேவி தன் நாக்கை உலகம் பூராவும் பரப்பி அதில் அவனைப்போட்டுக் கடித்து ஒருசொட்டு இரத்தம்கூடக் கீழே விழாமல் கொன்றாள். அவன் மாண்டவுடன் சும்ப, நிசும்பர்களும் சுலபமாக மாய்க்கப் பட்டனர். உலகம் பாபிகளினின்றும் தப்புவிக்கப்பட்டது. தெய்வம் சமாதானமாக பாவிக்கப்படும்போது லக்ஷ்மியாகவும், பலம்பொருந்திய அம்சமாகக் கருதும்பொழுது சக்தியாகவும், அழிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும்பொழுது காளியாகவும் வழிபட்டுவந்ததெனக் கூறலாம்.

பொதுவாக நமது தெய்வங்கள் ஒரே ஆண்டவனாகிய பரம்பொருளின் பல தன்மைகளையும், அம்சங்களையும் விளக்கும் பொருட்டு பலவிதங்களில் உருவகம் செய்யப்பட்டுள்ளன. தவிரவும் அக்காலங்களுக்கேற்ப ஆரியர்கள் தெய்வங்களை வர்ணித்திருக்கிறார்கள். லோகமாதாவாகிய பராசக்தியை பக்தியுடன் பூஜிப்பவருக்கு யாதொரு குறையுமில்லை. அருட்கவி சுப்ரமண்ய பாரதியாரும் அன்னைபராசக்தியைப் பலவழிகளிலும் பாடிப் போற்றி யிருக்கிறார். அப்பாடல்களைப் படிக்குந்தோறும், புதுஉணர்ச்சியும், தன் நம்பிக்கையும், திடசித்தமும், புத்துயிரும் உண்டாகிறது. தங்களை பரிபூரணமாக மாதாவுக்கு அர்ப்பணம் செய்துகொண்டவர்கள் இகபரம் இரண்டிலும் இன்ப மெய்தி வாழ்வது முக்காலும் நிச்சயம்.



# பாதாம் ஹல்வாவும், பாயஸமும்


"ஸரோஜா."

பாதாம் ஹல்வா செய்வதற்கு பாதாமியை உடைத்து, கசப்பு, சொத்தை இல்லாத நல்ல பாதாம் பருப்பாக பொறுக்கி எடுத்து, வென்னீரில் ஊறப்போடவேண்டும். ஊறின பருப்பை தோல் நீக்கி, சுத்தமாக அலம்பி இருக்கும் ஆட்டு கல்லில் போட்டு கொஞ்சம் ஜலம் தெளித்துக்கொண்டு வெழுமனுக அறைக்க வேண்டும். அறைத்த மொத்தையை ஒரு கிண்ணத்தில் வழித்தெடுத்துக் கொண்டு வேண்டிய ஜலம், என்ருல் மட்டாகவே ஜலம், சேர்த்துக் குழம்புபோல் கலந்து வைத்துக்கொள்ளவேண்டும். இந்தக் குழம்பு ஒரு கிண்ணிக்கு, இரண்டு பங்கு அஸ்கா சர்க்கரை வீதம் அஸ்கா சர்க்கரையை அளந்து எடுத்துக்கொண்டு, ஈயம் பூசின, அடிகெட்டியாக விருக்கும், வாய் அகலமான பாத்திரத்தில் பாகு வைக்கவேண்டும்.

பாகில் குங்குமப்பூ போட்டு, பாகுகம்பி பாகுவந்ததும், பாதாமிக்குழம்பை பாகில் கொட்டி, கைவிடாமல் கிளறிக்கொண்டே இருக்கவேண்டும். அடுப்பை நிழல்போல எரிப்பதே நலம். பாகும் பாதம் குழம்பும் கலந்து கொண்டு நன்ருக இரண்டு கொதி வந்தால், ஒன்றரை அல்லது இரண்டு கிண்ணம் வெண்ணே காய்ச்சின நெய்யை அதில் கொட்டி கிளறிக்கொண்டிருக்க வேண்டும். வேண்டுமானுல் முதலிலேயே பால்கோவா காய்ச்சி வைத்துக்கொண்டு, ஒரு பங்கு பாதாம் குழம்பிற்கு அரைப்படி பால் வைத்துக்காய்ச்சி, கோவா செய்து, நெய்யை ஹல்வாவிற்குச் சேர்க்கும் சமயத்தில், கோவாவையும் ஹல்வாவுடன் சேர்த்து கிளரலாம். கோவா சேர்க்காமல் ஹல்வா செய்தாலும் ருசியாகவே தான் இருக்கிறது. ஹல்வா முக்கால் பதம் வந்ததும் ஏலப்பொடி கொஞ்சம் சேர்க்க வேண்டியது. ஹல்வா நன்ருகக் கட்டியானதும் கீழே இறக்கிவிட வேண்டும். ரொம்ப கெட்டியாக கிளறிவிட்டால் சர்க்கரை உறைந்துகொண்டு ஹல்வா, ஹல்வாவாக இராமல், பர்பியாய் விடுமாதலால், லேகியம் மாதிரி சற்று நெகிழ விருக்கும் பொழுதே, அடுப்பிலிருந்து இறக்கி, சீசாவிலோ, ஜாடியிலோ கொட்டி, நன்ருக மூடிவைத்து விட்டால் ஒரு மாதம் இரண்டு மாதம் வரைக்கும் கூட கெடாமல் நன்ருக விருக்கும்.

## பாதாம் பாயஸம்

10 பலம் பாதாமைத் தருவித்து பாயஸம் செய்வதற்கு முந்திய நாள் ஐஸ் போட்ட ஜலத்தில் ஊர வைக்கவும். மறுநாள் நன்ருய் ஊரி உள்ளே இருக்கும் வெள்ளைப் பருப்பை தோலிலிருந்து வெகு சுலபமாய் எடுக்கவும். பிறகு அதை நன்ருய் அம்மியில் அரைத்து விடவும். சுமார் ஐந்து அல்லது ஆறுபடி எருமைப்பாலை ஒரு அடுப்பில் காய்ச்சவும். அதில் அரைத்த பாதாமைப் போட்டு நன்ருய் ஒரு கரண்டியினுதவியால் அடுப்பில் காயும் பாலில் விட்டு நன்ருய்க் கிளறிக்கொண்டேயிருக்கவும். பாதாம் கட்டி கட்டாமல் வெகு ஜாக்கிறதையாக இருக்கவேண்டும். பால் நன்ருய்க் காய்ந்து கொதித்து வரும்போது அதை அடுப்பினின்றும் கீழே இறக்கவும். பிறகு சுமார் 10 பலம் நெய்யில் வருத்த முந்திரிப்பருப்பைப் போடவும். 10 பலம் சாரப்பருப்பும், குங்கமப்பூவும் போடவும். இதற்கு ஒரு வீசை அஸ்கா சர்க்கரைபோட்டு நன்ருய்க் கறைந்துவிடும்படி செய்யவும். பால் கெட்டிப்பாலா யிருத்தலவசியம். ஏலக்காய்ப் பொடியும் போட்டால் ருசியாயிருக்கும். இப்பொழுது பாதாம் பாயசம் சாப்பிடத் தயார்தான்!



பம்பாயிலுள்ள வேல்ஸ் இளவரசர் மியூஸியத்தில் ஓர் காட்சி



டாக்டர் லக்ஷ்மிதேவி, எம். எல். ஏ.
(பெல்லாரி ஸ்திரீ தொகுதி பிரதிநிதி.)



ஸ்ரீமதி ஜீவமணி மாசிலாமணி
பிள்ளை, எம். எல். ஏ.
(திருநெல்வேலி இந்திய கிறிஸ்தவ ஸ்திரீ
தொகுதி பிரதிநிதி.)



ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி
பாரதி, எம். எல். ஏ.
(திண்டுக்கல் ஸ்திரீ தொகுதி பிரதிநிதி)



ஸ்ரீமதி அம்முகுட்டி அம்மாள்,
எம். எல். ஏ.
(கள்ளிக்கோட்டை ஸ்திரீ தொகுதியில்
வெற்றி பெற்றவர்.)

# முத்து

ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள்

"பார்த்திபர் மதிக்கும் முத்தம்" என நமது பாரதகண்டத்துப் பண்டைக்காலப் புலவோர்களால் பாராட்டிக் கூறப்படும் முத்தானது நவரத்தினங்களுள் ஒன்றாயினும் பவளம் ஒழிந்த பிற மணிகளைப் போல் சுரங்கங்களினின்றும் வெட்டியெடுக்கப்படும் கல்லாகமாட்டாது. அது கடினமும் பளபளப்பும் வெண்ணிறமும் சாதாரணமாய் உருள் வடிவும் வாய்ந்ததோர் ரத்தினம். இது பெரும்பாலும் "கடற்படு" திரவியமாகும்.

## முத்து பிறக்கும் இடங்கள்

பரஞ்சோதி முனிவர், முத்து "தலசம்" என்றும், "சலசம்" (அதாவது நிலத்திற் பிறப்பது, நீரிற் பிறப்பது) என்றும் இருவகையாகி, சங்கு, மேகம், மூங்கில், பாம்பின் தலை, பன்றிக்கொம்பு, வெண்ணெல் (வெள்ளை நெல்), இப்பி, மீன் தலை, கரும்பு, யானைக் கொம்பு, சிங்கத்தின் புஜம், பதிவிரதைகளின் கழுத்து, கொக்கின் கழுத்து ஆகிய பதின்மூன்று இடங்களினின்றும் பிறக்கின்றதென்றும், இவற்றுள் கடைசியில் கூறிய மூன்று இடங்களினின்றும் பிறக்கும் முத்துக்கள் கிடைப்பது அருமையென்றும் கூறுகிறார்:—

"தக்கமுத் திரண்டு வேறு:
தலசமே சலசமென்ன,
இக்கதிர் முத்தம் தோன்றும்
இடம்பதின் மூன்று: சங்கம்,
மாக்கரு முகில், வேய் பாம்பின்
மத்தகம், பன்றிக் கோடு,
மிக்கவெண் சாலி, இப்பி,
மீன்தலை; வேழக் கன்னல்,
கரிமருப், பைவாய் மான்கை,
கற்புடை மடவார் கண்டம்,
இருசிறைக் கொக்கின் கண்டம்
என, கடை கிடந்த மூன்றும்
அரியன........................"

(திருவிளையாடற் புராணம்)

இப் பரஞ்சோதி முனிவருக்கு முன்னிருந்த "திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண" நூலுடையாராகிய செல்விநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பியாரும் முத்தின் பிறப்பிடம் 13 என "தந்தரளத் தியல் வகுப்பிற் பிறப்புப் பாம்பில்..........." (மாணிக்கம் விற்ற திருவிளையாடல்—16-வது செய்யுள்) என்னும் செய்யுள் மூலமாக அறிவிக்கின்றார். ஆனால் இப்பாட்டில் "ஐவாய் மான்கை" என்பதற்குப் பதிலாகக் "காகவாகனம் (சனீசுவரன்) திண்தோள்" எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுவரை சொல்லியவற்றால் முத்தின் பிறப்பிடம் பதினான்கு என அறியலாகும்.

இவற்றுள் மேகத்தின் முத்து இளஞ்சூரியன் நிறமும், மூங்கில் முத்து மழைத்துளி நிறமும், பாம்பின் முத்து நீலநிறமும், பன்றிக் கொம்பின் முத்து இரத்த

நிறமும், நெல்லின் முத்து பச்சை நிறமும், மீனின் முத்து பாதிரிப்பூ நிறமும், சிப்பி முத்து பளபளப்புடன் கூடிய வெண்மை நிறமும் கொண்டதாம்.

மேற்கூறிய பதினன்கு இடங்களைத் தவிர மற்றும் கமுகு, வாழை, நத்தை, தாமரை, பசுவின் பல், சந்திரன், உடும்பு, முதலை என்னும் எட்டு இடங்களினின்றும் முத்து உண்டாகும் என்பதை

“ தந்தி, வராக மருப், பிப்பி,
பூகம், தழை, கதலி,
நந்து, சலஞ்சலம், மீன்றலை,
கொக்கு, நளினம், மின்னர்
கந்தரம், சாலி, கழை, கன்னல்,
ஆவின்பல், கட்செவி, கார்,
இந்து உடும்பு, கரா, முத்தம்
ஈனும் இருபதுமே.” (1)

பனிமதி, கதன, மேகம்,
பைந்தொடி கழுத், தாவின்பல்,
தனியானை, எனக் கொம்பு,
தடம்கரா, உடும்பு, கொக்கு
விணை அரா, ச்சலம் சலம், நந்,
திப்பி மீன் மூங்கில் பூகம்
நிணை செந்நெல், கரும்பு, கஞ்சம்,
நிகழ் இரு பதின் முத்தாகும். (2)

(பூகம் = கமுகு = பாக்குமரம்; நந்து= நத்தை; நளினம்= தாமரை; இந்து = சந்திரன்; கரா = முதலை.)

என்னும் தனிப் பாடலால் இதனுண்மை அறிக.

ஆகவே இருபத்திரண்டு இடங்களில் முத்து உற்பத்தியாகும் எனத் தமிழ்நூலாசிரியர்கள் கூறிய விஷயம் இப்போது அறிந்தோம்.

## இப்பியில் முத்து உண்டாகும் விதம்

இப்பியினின்று முத்து எடுக்கப்படுவதே பண்டிதர், பாமரர், பலரும் கேள்வி மூலமாகவும் நேரிலும் அறிந்த விஷயமாதலின் இப்பி முத்தைப் பற்றியே இப்பொழுது சிறிது கூறுவாம்.

“ இப்பி ” என்பது முத்துச்சிப்பி என்று சொல்லப்படும் ஒருவகை ஜலசரம். இவ்விப்பிகளின் சரீரத்தினிடையில் மிருதுவான தோல் இருக்கும். இத் தோலைச் சுற்றி இருமருங்கினும் கடினமான ஓடுகள் கவிந்திருக்கும். சிப்பிகளின் மிருதுவான மெல்லிய தோலுக்கும் கடினமான ஓட்டிற்கும் இடையே ஒருவகைப் பொடி மணல் புகுந்து அவற்றை உபத்திரவப் படுத்தும். படுத்தவே அவை எரிச்சல் பொறுது அப்படியும் இப்படியும் புரளும். அவ்வாறு புரளுகையில் சுண்ணாம்புத்தன்மையுள்ள ஓர்வகை நீர் வெளிப்பட்டு முற்கூறிய நுண்மணலைக் கவிந்துகொள்ள அதுவே முத்தாகும் என்பர். இம்மர்மத்தைச் சீனர்களே முதல் முதல் அறிந்தவர்களென்றும், முத்து அகப்படாக் காலங்களிற்கூட அவர்கள் சிப்பிகளைப் பிடித்து மணலை அவற்றின் மெல்லிய தோலுக்கும் ஓட்டுக்கும் இடையே புகுத்தி அவற்றிற்கு எரிச்சல் உண்டாக்கி முத்தினைச் செய்து பெருத்த லாபம் அடைந்து வருகிறார்களென்றும் தெரியவருகிறது.

சிப்பிகளின் சரீரத்தினின்றும் அவற்றின் முட்டைகள் வெளிப்படாக் காலத்து அம்முட்டைகளும் மேலே சொன்ன பொசிநீரால் மூடப்பட்டு முத்தாக மாறுவதுண்டு.





ஆனல், பர்த்ருஹரி போன்ற வடநூற் புலவர்கள் மழைத்துளிபெற எதிர்பார்த்த வண்ணமாகச் சிப்பியானது நீர்மட்டத்துக்கு மேலே வந்து தன் அகட்டைத் திறந்துகொண்டிருக்குமென்றும், மழைத்துளி ஒன்று அதனுள் விழுந்தவுடன் அது ஓட்டை மூடிக்கொண்டு உள்ளே சென்றுவிடுமென்றும், அவ்வானத்துளியே பிறகு வெண்முத்தாகிறதென்றும் கூறுகிறார்கள். சுவாதி நக்ஷத்திரம் உச்சத்தில் இருக்குங் காலைச் சிப்பி அகட்டில் விழும் விசும்பிற்றுளியே மிக விலையேறப்பெற்ற முத்தாம்.

## இப்பிகள் இருக்கும் இடங்கள்

வெண்முத்து ஈனும் இப்பிகள் விசேஷமாய் இலங்கையில் மன்னார்குடாவிலும், மறிச்சுக்கட்டியை அடுத்த கடலிலும், இந்தியாவில் தூத்துக்குடிக்கருகிலும், பாம்பன் கடலோரத்திலும், பாரஸீகக் குடாக் கடலிலும், போர்னியோவுக்கடுத்த ஸுலுத் தீவுகளிலும்,—கருமுத்து ஈன்பன காலி போர்னியாவிலும்,—மஞ்சள் முத்து ஈன்பன பனமாக் கால்வாயிலும்,—கபில நிறமுத்து ஈன்பன மெக்ஸிகோவிலும் உள்ளன.

## முத்துக் குளித்தல்

முத்துப் பெறவேண்டி கடலின் கீழ் இருக்கும் முத்துச் சிப்பிகளை மூழ்கி எடுத்து மேலே கொண்டு வருவதற்கு “முத்துக் குளிப்பு” என்று பெயர். கடலில் அதிக ஆழத்தில் உள்ள பாறைகளில் கூட்டம் கூட்டமாகத்தொத்திக் கொண்டிருக்கும் சிப்பிகளைப் பெற்று முத்தெடுக்கும் விதம் இலங்கை முத்துச் சலாபவிஷயங்களைக் கொண்டு ஒருவாறு அறியலாகும். அவ்விஷயம் வருமாறு:—

இலங்கையில் முத்துச் சலாபம் பிப்ரவரிமாதம் தொடங்கி ஏப்ரல் மாதாரம்பத்திற்குள் முடிவுறும். முத்துக்குளிப்போர் பெரும்பாலும் இந்தியர்களும் சிங்களவர்களுமே. இவர்கள் இளம் பிராயமுதற் கொண்டே நெடுநேரம் நீர்க்குள் நிற்கவும் நீந்தவும் நன்றாய்ப் பழகியவர்கள். ஆயினும் இவர்கள் பிழைப்பு என்றும் அபாயகரமானதே. ஏனெனில், கொம்பன் சுருவினலும் ஏனை நீர்வாழும் பிராணிகளாலும், கடற்பூண்டுகள் சிக்கிக்கொள்வதினலும் இவர்களுக்கு மரணம் நேர்வதுண்டு. ஆதலின் இன்னோர், தாம்மூழ்குவதற்குமுன், சுருவாயைக் கட்டுவதில் கைதேர்ந்தவர்கள் எனத் தாம் கருதிய மலையாளத்து மந்திரவாதிகளை வரவழைத்து அவர்களிடம் ஆருடம் கேட்டபின்பே முழுகத் தொடங்குவார்கள். மந்திரவாதிகளின் வார்த்தையில் குளிகாரர்களுக்கு தேவதா விசுவாசம். இம் மாந்திரீகர்கள் அந்தந்த ஜாதியார்க்குத் தக்கபடி சடங்காசாரங்கள் ஏற்படுத்தித் தாமும் சுருக்களை அப்புறப்படுத்த ஓர் வகை விரதம் அனுஷ்டிப்பார்கள். விரதத்தை மாந்திரீகனும் அனுஷ்டித்த விவரம் அறிந்தாலொழிய அவர்கள் முழுகுவதற்கு முன்வரார்களாம். முத்தெடுக்கச் சென்ற படகுகள் திரும்பும்வரை மாந்திரீகன் மந்திரம் ஜபித்துக்கொண்டு உபவாசத்துடன் இருப்பான். சிலவேளைகளில் மந்திரவாதியும் படகேறி செல்வதுண்டு. இவன் மட்டும் தம்முடன் வருவானயின் தம் காரியம் இலாபகரமாயும் இடையூறின்றியும் இனிது நிறைவேறுமென்பது குளிகாரரின் கொள்கை. மாந்திரீகர்கள் குளிகாரர்களிடத்து மட்டுமேயன்றி வியாபாரிகளிடத்திருந்தும் மிக லாபம் பெறுகின்றனர்.

"சாஸ்திராயச ஸூகாயச" என்றபடி குளிகாரர்களுக்கு மந்திரவாதிகள் அனுஷ்டிக்குமாறு கூறுவனயாவும் ஒரு விதமாய்ப் பார்க்கில் நன்மைக்கேதுவான காரியங்களாகவே இருக்கின்றன. எங்ஙனமெனில், குளிகாரன், முழுகுமுன்னே உபவாசத்துடனிருந்து, முழுகும் போது மந்திரித்துத் தந்தவிளக்கெண்ணெயைப் பூசிக்கொண்டு கடலில் இறங்கவேண்டுமென விதிக்கப்படுகிறான். வயிறு ஆகாரத்தால் நிரம்பியிருப்பின், வாந்தி முதலிய உபத்திரவம் உண்டாவதுடன் சுலபமாகக் குளித்தெழும்பவும் கூடாமற் போகுமன்றோ? அன்றியும் பசபசவென்று உவர் நீர்ப்பட்டமாத்திரத்தில் அரிப்பெடாதிருத்தற்கு விளக்கெண்ணெய் பூச்சும் வேண்டியதுதானே?

குளிகாரர்கள் கரைக்கு எட்டு மைல் தூரம் வரை படகுகளில் கூட்டம் கூட்டமாய்ச் செல்வார்கள். ஒவ்வொரு படகிலும் மாலுமியைத்தவிர இருபது பேர்கள் இருப்பார்கள். இவ்விருபது பேர்களில் பத்து மனிதர்கள் படகு ஓட்டவும், முழுகுவோரை குறித்த காலத்தில் தூக்கியெடுக்கவும் நியமிக்கப்பட்டவர்கள். எஞ்சிய பத்து பேர்களும் குளிகாரர்களே. இவர்கள் ஐவர் ஐவராகமாறி மாறிவேலை செய்வர். முழுகுவோர் முன் கூறியபடி எண்ணெய்ப் பூச்சு உடையவராயும் கோவணம் மட்டும் தரித்தவராயும் இறங்குவார்கள். இவர்கள் தாம் எளிதில் இறங்கிச் செல்வதற்கு உதவியாக சுமார் 50 ராத்தலுள்ள பெருங்கற்களை உபயோகிக்கின்றனர். ஒவ்வொரு படகிலும் இவ்வாறு ஐந்தாறு கற்களேனும் இருக்கும். இவை அடி பரந்தும் நுனிகுவிந்தும் கயிறுகள் கோர்க்கத் துவாரம் கொண்டும் இருக்கும். பிறைச் சந்திரன் போற் செதுக்கப்பட்ட கற்களும் உபயோகிக்கப்படுவதுண்டு. முழுகும்போது குளிகாரன் கல்லிற்கட்டப்பட்டிருக்கும் கயிற்றை வலதுகால் விரலினும் பிடித்துக்கொண்டு, இடதுகால் விரலால் தான் எடுக்கப்புகும் இப்பிகளைப் போட்டுக்கொள்ள ஒருவகை வலையை இறுகப்பிடித்துக்கொள்வான். பின்பு அவன் கல்லில் கட்டப்படாத மற்றொரு கயிற்றையும் தனது வலதுகையாற் பற்றிக்கொண்டும் காதில் மெழுகு திணித்துக்கொண்டும் நாசித்துவாரங்களை இடதுகை விரல்களால் இறுக அடைத்துக்கொண்டும் தண்ணீர்க்குள் சிலசமயம் 100 அடி ஆழம்வரை கூடமூழ்குவான். மூழ்கி அடியிற் சென்றதும் காலில் மாட்டிய வலையை எடுத்துக் கழுத்தில் மாட்டிக்கொண்டு விரைவாகவும் சாதுரியமாகவும் எவ்வளவு சிப்பிகள் அள்ளக் கூடுமோ அவ்வளவையும் அதனுள் அள்ளிப் போடுவான். அவன் தடவைக்கு நூறு சிப்பிகளுக்குக் குறையாமல் அள்ளுவானும். நீரில் அவன் அமிழ்ந்து நிற்பதெல்லாம் 120 விநாடி (Seconds) இருக்கும். (மூன்று அல்லது நான்கு நிமிஷத்திற்கு அதிகம் எவனாலும் நீரில் அழுந்தி இருக்க முடியாது) மூச்சுத் திணரும் சமயத்தில் அவன் தான் இறங்கிய கல்லின்மேல் மீண்டும் ஏறிக்கொள்ளாமல் கீழே நின்றபடியே வலதுகைக்கயிறுகளை மட்டும் இழுத்து அசைத்து ஆட்டுவான். இதுவே அவன் தன்னை வெளியில் தூக்குமாறு அறிவிக்கும் அடையாளமாகும். இக்குறிப்பைப் படகோட்டிகள் அறிந்து படகில் அமைக்கப்பட்டிருக்கும் இராட்டினத்தின் வழியாய்க் கல்லில் கட்டப்படாதிருக்கும்





கயிற்றை இழுத்து அவனைமேலே தூக்கிக்கொண்டு வந்து விடுவார்கள். பிறகு அவன் விட்டுவந்த கல்லை அதன் கயிற்றால் மேலே இழுத்துக்கொள்வார்கள்.

முத்துக் குளிக்கச் செல்வோர் சூரியன் உதிக்குமுன் முத்திருக்கும் பாறை போய்ச் சேர்ந்து கடல்நீர் வெது வெதுப்புடன் இருக்கும் நேரமாகிய சுமார் 7 மணிக்கு மூழ்கத் தொடங்கிச் சுமார் 12 மணிக்குக் கரைசேரப் படகேறுவார்கள். 12 மணிக்குப் பிறகு அவர்கள் குளிப்பதில்லை. நாள் ஒன்றுக்கு அவர்கள் 40 அல்லது 50 தடவை மூழ்குவார்கள். திரும்புகையில் படகு கரையிலுள்ளோர் கண்ணுக்குத் தென்படும் தூரத்திலிருந்து குண்டு போடப்படும். இது படகு சாவதானமாகத் திரும்பி வந்த சுப சமாசாரத்தை அதன் சொந்தக்காரர் அறிவதற்கான அடையாளமாம். படகுகள் கரை சேர்ந்ததும் அதில் உள்ளன யாவும் சூரியன் அஸ்தமிக்குமுன் கீழே இறக்கப்படும்.

மூழ்கும்போது விலையுயர்ந்த முத்துக்கள் அகப்பட்டால் குளிகாரர்கள் அவற்றை விழுங்கிப் பிறகு வெளிப்படுத்தி விற்று மிக்க லாபம் பெறக்கூடுமாதலின், இவர்களைக் கூலிக்கு அமர்த்துவோர் இவர்களுக்குப் பேதிமருந்து கொடுத்து நன்றாய்ப் பரிசோதித்து முத்துக்கள் இருப்பின் பிடுங்கிக்கொண்டு விடுவார்கள். பிறகு குளிகாரர்கள் தம் கூலியாகச் சிப்பிகளில் நான்கில் ஒரு பகுதியேனும் தக்க பொருளெனப் பெறுவர். பின்னர், எஞ்சிய சிப்பிகள் ஆயிரமாயிரமாக ஏலத்தில், மிகுந்த தொகைக்குக் கேட்போர்க்கு விற்கப்படும்.

சிப்பிகள் சொந்தக்காரர்களால் இரண்டடி ஆழமுள்ள குழிகளிலாயினும் வேலிசூழ்ந்த சதுப்பு நிலங்களிலாயினும் மணல் சிறிதும் படாதபடி பாய்களின் மேல் கொட்டி வைக்கப்படும். அங்கிருந்தபடியே அவை நன்றாய் அழுகி உலர்ந்துசாகும். உலர்ந்த பின்னரே அவற்றினின்றும் முத்துக்களைச் சேதமின்றி எடுக்கக்கூடும். அவை உயிருடன் இருக்கும் பொழுதேனும், அழுகி உலருமுன் பேனும் திறக்கப்பட்டால் முத்துக்குச் சேதம் மிகுதியும் உண்டாகும். ஏனெனில் உயிருடனிருக்குங்கால் சிப்பிகளை எளிதில் உடைக்க முடியாது. கத்திகொண்டு உடைத்தாலோமுத்துத் தெரித்துப்போம்.

சிப்பிகள் நன்றாக அழுகுங்கால் எழும் துர் நாற்றம் சகிக்கத் தரமன்று. ஆயினும் அவற்றினின்றும் எதிர்பார்க்கும் இலாபமே இந்நாற்றத்தை ஒரு சிறிதும் பாராட்டாமல் சந்தோஷமாகவே சகிக்கச் செய்துவிடுகிறது. நீரில் சிப்பிகளை வேகவைத்தும் முத்துப் பெறுவதுண்டு. இதற்குக் காரணம் யாதெனில் முத்துக்கள் சிலசமயங்களில் சில சிப்பிகளின் ஓடுகளில் இராமல் அவற்றின் சரீரத்திலேயே தங்கி நின்றுவிடுவதே.

சிலோன்வாசிகள் முத்துக்களைத் துளையிடுவதிலும் மாலையாகக் கோர்த்துக் கட்டுவதிலும் கைதேர்ந்தவர்கள். அவர்கள் முத்துத் தூளால் ஆகிய பொடியைக் கொண்டு முத்துக்களைத் துலக்கி மெருகிடுவார்கள்.

# பதிவிரதைகளின் சிறப்பு

திரு. டி. கே. கோவிந்தய்யர்

மூக்கணர் தண்டலை நாட்டில் கற்புடை
மங்கையர் பெருமை மொழியப் போமோ?
ஒக்குமெரி குளிரவைத்தா ளொருத்தி;
வில்வேடனை யெரித்தா ளொருத்தி; மூவர்
பக்கமுற வமுதளித்தா ளொருத்தி; யெழு
பரிதடுத்தா ளொருத்தி; பண்டு
கொக்கனவே நினைந்தனையோ கொங்கணவா
வென்றொருத்திக் கூறினளே.

இந்த பாட்டு பதிவிரதைகளின் விசேடத்தை யெடுத்துக் கூறுகிறது. இதில்:—

1. எரிகுளிர வைத்தவள்: ஹரிச்சந்திர மஹாராஜனுடைய மனைவி சந்திரமதி நாட்டைத் துறந்து காட்டு மார்க்கமாய், நட்சத்திரேயனால் நடத்தப்பட்டுப் போகும்போது விஸ்வாமித்ர முனிவரின் ஆக்கினையால் தோன்றிய அக்கினிப் பிரவாகத்தைத் தன் கற்பென்னும் தண்ணீரினால் அவித்தாள்.

2. வில்வேடனை யெரித்தவள்: நள மஹா ராஜனுடைய மனைவி தமயந்தி. சூதாட்டத்தில் நாட்டை யிழந்து தன் பத்தினி சமேதராய் காட்டை யடைந்து அவள் அங்கு படும் துயரம் கண்டு சகிக்க முடியாமல் இரவே யெழுந்து நளமகாராஜன் போய்விட, மறுநாள் சூரியன் உதயமானதும் கண் விழித்துப் பார்க்க, தன் கணவன் பக்கலில் இல்லாமையைக் கண்டு காடெங்கும் அழுது திரியும் சமயத்தில் ஒரு மலைப் பாம்பால் விழுங்கப்பட்டாள். அந்த வேளையில் அங்குற்ற வேடனொருவன் அந்தப் பாம்பைக் கொன்று, தன்னைச் சேரும்படி அவளை வேண்டினன். தான் எடுத்துச் சொல்லிய நியாயங்களைக் கேளாமல் பலாத்காரப் படுத்தவே தன் கண்கள் இரண்டையும் அவன்பேரில் சாய்த்து அந்தக்ஷணமே அவ்வேடனைச் சாம்பலாக்கினாள்.

3. மூவர் பக்கமுற அமுதளித்தவள்: அத்திரி மஹா ரிஷியின் மனைவி அனுசூயை. ஒரு காலத்தில் நாரத முனிவர் பெருமணல்களைப் பார்வதியினிடம் கொண்டு போய் கடலைப் பதமாய் வறுத்துத் தரும்படி கேட்க, அவள் சிரித்து அவரைப்போகச் சொல்லி விட்டாள். பிறகு முறையே, மஹா லட்சுமியினிடமும், சரஸ்வதியினிடமும், போக, பார்வதி செய்தது போலவே அவர்களும் நகைத்து அவரைப் போகச் சொல்லிவிட்டார்கள். நாரதர் கோபங்கொண்டு தான் பூலோகஞ் சென்று ஒரு பதிவிரதையைக் கொண்டு அவைகளை வறுத்து வருவதாய் வந்து விட்டார். பூலோகத்தில் மேற்கண்ட அனுசூயையினிடம் போக அவள் நாரதர் வேண்டிய வண்ணமே செய்து கொடுத்தாள். இவ்வற்புதத்தை மும்மூர்த்திகளின் மனைவிகளுக்கும் சொல்ல, அவர்கள் பொறாமை கொண்டு அனுசூயையின் கற்பையழிக்க வெண்ணி தங்கள் பர்த்தாக்களை ஏவினார்கள். அவர்கள் பிச்சை வாங்குபவர்கள் போல் ஜாடையாய்ப் போய், பிச்சை கேட்க, அனுசூயை பிச்சையிட வந்தாள். ஆனால், அவர்கள் நிர்வாணமாய்ப் பிச்சையிட்டால் மாத்திரம் வாங்குவோமென்று சொல்ல, உடனே அவர்கள் மூன்று பேரையும் பாலர்களாக்கி நிர்வாணமாய்த் தன் பக்கலில் இட்டுப் பால் ஊட்டி வைத்திருந்தாள்.



4. எழுபரி தடுத்தவள்: நளாயினி யென்னுமாது. குஷ்டரோகத்தினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் தன் கொழுநன் வேசை வீடுபோக இச்சை கொள்ள, அதைப் பூர்த்தி செய்வதற்காக வேண்டிப் பல நாள் ஒரு வேசைக்கு அவளறியாமல் ஊழியம் செய்துவர, ஒரு தினம் இதைக் கண்ட அப்பொது மகள், கருத்தை யறிந்து அவள் ஒரு பதிவிரதை யென்று பயப்பட்டு அவன் கொழுநனைக் கொண்டு வரும்படி சொன்னாள். இவ்வாறே அவள் தன் கொழுநனை ஒரு கூடையில் வைத்தெடுத்துக் கொண்டு வந்து, பொழுது விடியுமுன் திரும்பிப் போகையில் வழியில் கழுவிலேற்றப்பட்டிருந்த மாண்டவ்யனென்னும் ரிஷியின் காலில் அந்தக் கூடை பட்டு அதனால் மாண்டவ்ய ரிஷிக்கு நோயதிகரித்தது. நோயுண்டாக்கக் காரணம் யாரென்று பார்க்கக் கூடையில் எதையோ தூக்கிக் கொண்டு போகும் ஒரு பெண்ணைக் கண்டார். உடனே அவள் பொழுது விடியுமுன் அமங்கலியாய்ப் போகக்கடவது என்று சபித்தார். இந்தச் சாபம் காதில் விழுந்ததும், பொழுது விடியாமற் போகக் கடவதென்று அந்தக் கற்பரசி மறு சாபமிட்டாள். அவ்வாறே பொழுது விடியாமலிருக்க, தேவர்களின் வேண்டுகோளால் தனக்கிட்ட சாபத்தைப்போக்கிக் கொண்டு பொழுது விடியும்படி உத்தரவளித்தாள்.

5. பண்டு கொக்கனவே நினைத்தனையோ கொங்கணவா என்றவள்: திருவள்ளுவ நாயனாரின் மனைவி வாசுகியம்மை. கொங்கணரென்னும் ரிஷி ஒருவர், தன் வழியே வந்து கொண்டிருந்த பொழுது, மேற் பறந்து போய்க்கொண்டிருந்த கொக்கொன்று எச்சமிட அது அவர் தலையின் பேரில் விழுந்தது. முனிவர் வெகுண்டு அந்தக் கொக்கை உற்று நோக்கலும் அவர் தபோ மகிமையால் அது எரிந்து போய்விட்டது. பிறகு அவர் ஒரு சமயம் திருவள்ளுவர் மனைக்கு வந்து பிச்சை கேட்டார். அந்தச் சமயம் வாசுகியம்மை தன் கணவருக்கு அமுது படைத்துக் கொண்டிருந்தாள். ஆகையினால் பிச்சையிடுவதற்குச் சற்றுத் தாமதித்து வந்தாள். அதைப் பொறாராகி அவளைக் கொங்கணர் உற்று நோக்கினர். உடனே தன் பதிவிரதா சக்தியினால் அறிந்த அவள் "முன் தாங்களெரித்த கொக்கென்று அடியாளையும் நினைத்தீரோ" என்று சொன்னாள். வழியில் நடந்த விருத்தாந்தத்தை அறிந்தது அவளுடைய கற்பினுடைய சக்தியென்றறிந்து உடனே அவளை வணங்கிச் சென்றுவிட்டார்.

இவ்விதமாகிய பதிவிரதைகள் சரித்திரம் நம்முடைய புராணங்களில் ஏராளமாய்க் கிடக்கின்றன. இந்தக் காலத்தும் அப்பேர்பட்டவர்கள் இல்லாமற் போகவில்லை. அவர்கள் பொருட்டுத் தான் உலகம் உய்கின்றது.

"நல்லா ரொருவர் உளரேல் அவர்
பொருட்டு எல்லார்க்கும் பெய்யு மழை"

———:o:———

# பொல்லாத காசுமாலை

ஸ்ரீமதி கே. கமலா

"ஐந்து மணிக்குத் தானே கச்சேரி ஆரம்பம்? இப்பத்தான் மணி மூன்றாகிறது. இதற்குள்ளென்ன அவசரம்?" என்று சபாவிற்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்த தனது மனைவியான தில்லையம்மாளைப் பார்த்துக் கேட்டார் மலையப்பையர்.

அதைக் கேட்டதும் அவரது மனைவி "ஆகா, சொல்லமாட்டயளோ? சொல்லுவேள். ஐந்து மணிக் கச்சேரிக்கு நான் மூன்று மணிக்குள் டிரஸ் பண்ணிக்கொண்டால், அது அவசரப்பட்டதாக்கும். நீங்கள், பதினொரு மணிக்கு ஆரம்பமாகும் கிரிக்கெட் மேச்சிற்கு, காலை எழு மணிக்கே, வாயொட்டிக்கக் கையொட்டிக்கப் பறக்கப் பறக்கச் சாப்பிட்டு விட்டுப்போய் ஊருக்குமுன் உரலுக்குத் தாலி கட்டினதுபோல், அந்த வெய்யல் பாழாகாமல் உச்சஸ்தானத்தில் உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்ததெல்லாம் அவசரப்பட்டதாகுமா, என்ன? ஆகா, வக்கணைப் பேச்சுதான். நான் இங்கிருந்து ஆடிட்டர் வரதய்யங்கார் வீட்டிற்குப் போய், அவரகமுடையாள் லக்ஷ்மியுடன் சேர்ந்து சபாவிற்குப் போய்ச் சேர சரியாய் ஐந்துமணி கூட ஆகிவிடும். இதற்கே நீங்கள் போகிறதாக இருந்தால், இந்த மூன்று மணியே ஐந்துமணி போலாகிவிடுமே" என்று சொன்னாள்.

மலையப்பையர் "சரி, சரி, அதெல்லாம் போகட்டும், நீதான் இரண்டு நாள் முன் காசுமாலையின் திருகைப் போக்கடித்து விட்டாயே, இப்ப எதற்காக அதைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

தில்லை, "இல்லேன்னா, திருகுக்குப் பதில் ஈர்க்கைப் பிடிப்பாய் போட்டிருக்கேன். அது கழலாது. இப்பப் போட்டுக் கொண்டுபோய் வந்ததும் கழட்டி வைத்து விடுகிறேன். நான் என்ன குழந்தையா அஜாக்கிரதையாக இருக்க?" என்றாள். அச்சமயத்தில், தில்லையின் தமையனரான, ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் வேதாந்தமையர் "என்ன தில்லை, வாக்குவாதம் நடந்து கொண்டிருக்கு போலிருக்கே, என்ன சமாசாரம்?" என்றபடி அவ்விடம் வந்தார்.

மலையப்பையர் "ஆமான்னா, இந்த ஸ்திரீகளுக்குக் கொஞ்சங்கூட பணத்தின் அருமை தெரிகிறதில்லை. பண்டத்தில் கருத்துக் கிடையாதுன்னா. காசுமாலையின் திருகைப் போக்கடித்துவிட்டாள். இப்பொழுது ஈர்க்கைப் போட்டுக் கொண்டு போகிறாளாம். அது கழண்டு விழுந்து தொலைந்து போய்விட்டால், இப்பப் பவுன் விற்கும் விலைக்கு நஷ்டப் படுபவன் நானா பிரத்தியானா? நான் இந்த ஸ்திரீகளின் இச்சைப்படி எதையும் செய்து, பொம்மனாட்டி ராஜ்யமா விட்டுவிடுபவனல்ல. நீ சபாவிற்குப் போனால் போ, ஆனால் காசுமாலையைத் தொடக்கூடாது" என்றார்.

தில்லை "இல்லேன்னா, நான் இதைப் பத்திரமாக எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன். நீங்கள்தான் இதை இரண்டு நாளில் விற்றுவிட்டு, அந்தப் பணத்தைக் கொண்டு வீடு கட்ட நிலம் வாங்கப் போகிறதாய்ச் சொன்னயளே; அதற்கப்புறம் நான் இதைப் போட்டுக்க முடியுமா?" என்று மனதிலுள்ளதை வெளியிட்டாள்.

வேதாந்தமையர் "அவளுக்கில்லாத கவலையா? அவளது ஆசையைத்தான் கெடுப்பானேன்? பத்திரமாய்க் கொண்டுவந்து விடுகிறதாயும் சொல்லுகிறதால் போட்டுக்கொண்டு



தான் போகட்டுமே" என்று தங்கைக்குப் பரிந்து கூறினார்.

(மச்சினர் கூறியதைக் கேட்டதும் மலையப்பையருக்கு இன்னும் கோபம் அதிகமாயிற்று.)

மலையப்பையர்: "ஊஹூம், முடியாது. என்னையுமென்ன ஸ்திரீகளின் இஷ்டப்படி நடப்பவனென்று நினைத்தீர்? இந்தப் பொம்மனாட்டிகளின் அழகிலும், தளுக்கிலும், பசப்பு வார்த்தைகளிலும் சிறிதும் மயங்குபவன் நானல்ல. சரியாக ஐந்து மணிக்கு வேணுபத்தர் வீட்டிற்கு வருவதாய், இன்று காலையிலேயே அவனிடம் தெரிவித்து விட்டேன். அதே பிரகாரம் அவனிடம் ஐந்து மணிக்குப் போய், இந்தக் காசுமாலைக்கு புது மெருகும், திருகும் போட்டுக் கொண்டு, இந்தக் காசுமாலையை வாங்கிக் கொள்ளுவதாகச் சொன்ன அந்த முதலியிடம் இதைக் காட்டி விலை நிர்மாணித்துக் கொண்டு வரவேண்டும். ஆகையால், இனி யார் எதைச் சொன்னாலும், நான் இப்பசொன்னபடி செய்யும் வேலையைத் தடுக்க முடியாது. ஆகையால் வீண் பேச்செதற்கு? மாலையைப் பெட்டியில் வைத்துவிடு" என்றார்.

தில்லை: "சரி, இன்னிக்கே மாலையை விற்கப்போகிறதானால், நான் போட்டுக் கொண்டு போவேனா? இதோ மாலையை வைத்துவிட்டேன்" என்றாள்.

உடனே அவளது பர்த்தா, அதைப் பெட்டிக்குள் வைத்துத் தானே பூட்டி சாவியை வைத்துக் கொண்டார்.

வேதாந்தமையர்: "என்னதான் இருந்தாலும் இன்னிக்கு நீங்கள் ரொம்பவும் நிர்தாக்ஷண்யமாகத்தான் நடந்து விட்டீர்" என்றார்.

மலையப்பையர்: "இன்னிக்கு மட்டுமென்ன? என்னிக்கும் ஒரே தினுசுதான்," என்று, அப்பொழுது தான் நடந்து கொண்ட விதத்திற்காக, என்றும் தான் அவ்விதமே இருப்பது போல் ஸ்தாபித்துப் பேசினார்.

வேதாந்தமையர்: "என்னவோய்யா, நான் நம்பமாட்டேன். ஆண்பிள்ளைகளான நாம், எப்படியோ ஸ்திரீகளால் மயங்காமலிருக்க முடிகிறதில்லை என்றே எனதபிப்பிராயம்," என மலையப்பையர், "உங்கள் மனம் அவ்விதமிருந்தால், எல்லோரையும் அப்படி நினைப்பது மூடத்தனந்தான். நான் என்றைக்கும் மிகவும் உறுதியான மனமுடையவன்தான். அந்தப் பொம்மனாட்டிகளின் அழகும், மினுக்கும், கொஞ்சலும் என்னை மயக்கிவிட, நான் சபல சித்தமுடையவனல்ல. நான் இந்தப் பொம்மனாட்டிகளால் ஒரு நாளும் ஏமாந்து போகிறவனல்ல," என்று அந்தச் சந்தர்ப்பத்திற்காகச் சாதித்தும், மச்சினரை சிறிது இறக்கியும் பேசினார். இதற்குள் மணி மூன்றே முக்காலாகி விடவே, தில்லையம்மாள் சபாவிற்கும், வேதாந்தமையர் இரவு சாப்பாட்டிற்குப் பிறகு சீட்டாட வருவதாய்க் கூறி விடைபெற்றுச் சென்றார்.

... ... ...

அதன் பிறகு மாலை ஐந்தரை மணி வரையில் வேதாந்தமையரின் மூத்தபிள்ளை சங்கரன் வந்து மலையப்பையருடன் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சென்றான். பிறகு மலையப்பையர் வெளியே செல்லுவதற்காக ஷர்ட்டை எடுத்துப் போட்டுக் கொண்டார். அச்சமயம் அவரிருந்த அறைக்குள் காலடிச் சத்தம் உண்டாகவும் அவர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். பேரழகியான ஓர் பெண்மணி நிற்பதைக் கண்டார். அவள் நின்றதே வெகு ஒய்யாரமாக இருந்ததுடன், பிரபு வீட்டுப் பெண்களைப் போல் உயர்ந்த ஆடை ஆபரணங்களணிந்து, புன்னகை ததும்பும் முகத்துடன் அவரை நோக்கியதும், அவர் அவள் யார்? எதற்கு வந்திருக்கிறாள்? என்பதைப் பற்றிக் கூட விசாரிக்க முடியாதவராய்ச் சிறிது நேரம் பிரமித்துவிட்டார்.

அவரது திகைப்பை அறிந்து கொண்டாளோ, இல்லையோ தனது பட்டுப் புடவையின் தலைப்பை நாசூக்காய் தன் கரத்தால்

பிடித்தபடி அவருக்கெதிரிலுள்ள ஓர் நாற்காலியின் மேல் சிறிது உராய்ந்தபடி நின்று, சிறிது நாணமடைந்தவளாய் "நீங்கள் தானே மலையப்பையர்?" என்று மதுரமாகக்கேட்டாள்.

மலையப்பையர் "ஆம்......நீ......நீ யார்? எனக்குத் தெரியவில்லையே?" என்றார்.

பெண்மணி: ஆம், உங்களுக்கு என்னைத் தெரியாது. முன்னொரு நாள் நான் இங்கு வந்திருந்த பொழுது நீங்கள் வீட்டிலில்லை. நான் வரதய்யங்காரின் மச்சினிபெண். நான் பி. ஏ., வகுப்பில் படித்துக் கொண்டிருக்கேன், என் பெயர் சுந்திரம். சபாவிற்கு சித்தியையும் அழைத்துக் கொண்டு போகலாமென்று சித்தியகத்திற்கு வந்தேன். அங்கே உங்ககத்து மாமியும் வந்திருக்கார். எங்கள் பேச்சின் நடுவில் உங்ககத்து மாமி "அவாது பழைய மோஸ்த்தர் காசுமாலையை நீங்கள் இன்றிரவே விற்றுவிடப் போகிறதாய்த் தெரிவித்தார். எனது தாயார் இப்பொழுது ஒரு காசுமாலை பண்ணச்சொல்லி தட்டானிடம் பவுன் கொடுத்திருக்கார். அவருக்கு பழைய மோஸ்த்தர்தான் உறுதியானது என்று ஓர் நம்பிக்கை இருந்து கொண்டிருக்கிறது. அதனால் உங்காத்துக் காசுமாலையை எனது தாயாருக்குக் காட்ட வேண்டுமென்று மாமியைக் கேட்டேன். அதற்கு மாமி 'அந்த மாலை வீட்டில் தானிருக்கிறது. மாமாவிடம் விஷயத்தைச் சொல்லி அவர் கொடுத்தால் வாங்கிக் கொண்டு வா, நான் கழுத்தில் போட்டுக் கொண்டு, உன் காரிலேயே வந்து உன் அம்மாவிடம் மாலையைக் காட்டிவிட்டு, பிறகு சபாவிற்கும் உன்னுடனேயே வருகிறேன்,' என்றார். நான் அதற்காகத்தான் வந்தேன். நீங்கள் தயவு செய்து கொடுக்க வேண்டும். ஏனெனில், தட்டான் எங்கள் வேலையைத் தொடங்குமுன் அவனுக்கு இதைக் காட்டினால் தான் பிரயோஜனப்படும். நான் மாமியை நகையுடன் பத்திரமாய் இங்கு ஒப்புவித்துப் போகிறேன். என்ன? தருகிறீர்களா? சபாவிற்குப் போக அதிக நேரமாகிவிட்டதே" என்று வெகு பணிவாயும், நயமாயும் கேட்டாள்.

மலையப்பையர் சில வினாடிவரையில் சிந்தனையிலீடுபட்டுப் பார்த்தார். ஆனால் பெரிய வீட்டுப் பெண்ணாயும், படித்தவளாயும், தன்னிடம் நம்பிக்கையுடனும் வந்து கேட்கும் அவளுக்கு கொடுக்காமலிருந்தால், தான் அவளை நம்பவில்லை என்று எண்ணிக் கொள்ளுவாளென்று அவரது மனதில் பட்டதால், அப்பேர்பட்ட பெண்ணிடத்தில் தான் மாலையைக் கொடுப்பதில் பிசகொன்றுமில்லை என்றெண்ணினார். உடனே அவர் சிரித்தபடி "இதற்கென்ன பிரமாதம்? இதோ கொடுக்கிறேன், அடாடா, நீ நின்றுகொண்டே இருக்கிறாயே? இதில் உட்கார்ந்து கொள்ளு" என்று கூறியபடி அவளை யொட்டி இருந்த நாற்காலியைச் சரியாகப் போட்டார்.

உடனே அப்பெண்மணியும் அதில் அமர்ந்து, தனது கைக்குட்டையால் முகத்தை ஒத்திக் கொண்டாள்.

உடனே மலையப்பையர் உள்ளே சென்று, மறு நிமிஷம் கையில் காசுமாலையுடன் திரும்பி வந்து, அப்பெண்மணியின் கையில் மாலையைக் கொடுத்து "பத்திரம், இதில் திருகு இல்லை, அதற்குப் பதிலாய் ஈர்க்கைப் போட்டிருக்காள், ஜாக்கிரதை" என்று கூறினார்.

அதைப் பெற்றுக்கொண்ட பெண்மணி தனது இருக்கையினின்றும் எழுந்து "தாங்யூ வெரிமச், குட்பை" என்றாள்.

மலையப்பையர் "ஓ, பரவாயில்லை......... குட்பை" என்று சந்தோஷ முகமலர்ச்சியுடன் கூறவும், அப்பெண்மணி, சந்தோஷத்துடன் அவ்விடத்தை விட்டு வெளியேறி, தெருவை யடைந்து, சிறிது தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரில் ஏறிக்கொண்டாள்.

மலையப்பையர் தெருவில் சென்று பார்க்கையில், அப்பெண்மணி ஏறி இருந்த கார் பக்கத்துச் சந்தில் திரும்புவதைக் கண்டார்.





இரவு எட்டரை மணிக்கு தில்லையம்மாள் வீட்டிற்குள் வரக் கண்டதும் "அந்தப் பெண் வரவில்லையா?" என்றார் மலையப்பையர். தில்லை "எந்தப் பெண்?" என்றாள்.

மலையப்பையர் "அதாண்டி, நீ அனுப்பினையே, அந்தப் பெண்தான்" என தில்லை "நன்னாருக்கு, நான் யாரை அனுப்பினேன்?" என்றாள்.

மலையப்பையர், "அதான், 'காசுமாலையை வாங்கிக்கொண்டு வரும்படி வரதய்யங்காரின் மச்சினி பெண், 'சுந்தரி' என்பவளை அனுப்பினையே, அவளைத்தான், அவள் தானே உன்னைக் கொண்டு விடுவதாய்ச் சொன்னாள். அதான், அவள் ஏன் வரவில்லை என்று கேட்டேன்" என்றார்.

தில்லை: "ஐயயோ, இதென்ன கூத்து? நான் ஒருத்தரையும் மாலையை வாங்கிக்கொண்டு வரும்படி அனுப்பவே இல்லையே. இதென்ன பெரிய மோசமாக இருக்கே. வரதய்யங்காருக்கு மச்சினியேது? மச்சினனேது? அவ அம்மாவுக்கு லக்ஷ்மி ஒரே பெண்தானே? நீங்கள் பேசுவது விளையாட்டுக்கா அல்லது நிஜமாகத் தான் யாரிடத்திலேயாவது ஏமாந்து கொடுத்து விட்டயளா?" என்று, உண்மையில் அந்த விஷயத்தைப்பற்றி ஏதும் தெரியாதவளானபடியால், பரபரப்புடனும், ஆவலுடனும் கேட்டாள்.

மலையப்பையருக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்னது? நான் விளையாடுகிறேனா? கழுத்தைக்காட்டு" என்றபடி தில்லையின் கழுத்தில் காசுமாலை இல்லாததைக் கவனித்தார். பிறகு நடந்த விஷயங்களை அவர் கூறக் கேட்டதும், தில்லை தனக்கு அவ்விஷயம் ஒன்றும் தெரியாதென்பதைக் கூறிவிட்டு, "அட வெட்கக்கேடே, இத்தனை பெரிய பிராமணராக இருந்தும், எவளோ வந்து கேட்டான்னு முன் பின் யோசிக்காமே, கிழங்காட்டமா எண்ணூறு ரூபாவுள்ள மாலையைத் தூக்கிக் கொடுத்தேங்களயளே, இந்த வெட்கக்கேட்டை வெளியில் சொன்னால் சிரிக்கமாட்டார்களா?" என்றும் இன்னும் பல சொற்களும் மலையப்பையரை வந்து தாக்கவும் யாரோ மோசக் கருத்துடன் வந்து மாலையை அபகரித்துச் சென்று விட்டாளென்றும், தான் மயங்கிப் போய் அவளது வார்த்தையால் மதியை இழந்து பெருத்த நஷ்டத்தை யடைந்து விட்டதை உணர்ந்து, தத்தளித்த மனதுடன், அசட்டுச் சிரிப்புடன் விழித்தார்.

சீட்டாடுவதற்கென்று, வாயில் வெற்றிலை பாக்கை மென்றபடி உள்ளே வந்த ஸி.ஐ.டி. வேதாந்தமையர் "சாப்பாடு முடிந்து விட்டதல்லவா?" என்று கேட்டார்.

அண்ணாவைக் கண்டதும், தில்லை "அண்ணா, உங்க மாப்பிள்ளை சேசிருக்கும் காரியத்தைக் கேளுங்கள்" என ஆத்திரத்துடன் கூறினாள்.

பிறகு, நடந்த விஷயங்களை ஒரு தினுசாய் மலையப்பையர் சொல்லி முடிக்க, ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்த வேதாந்தமையர் "என்ன ஆச்சரியம்? பகல் கொள்ளையான்னா இருக்கு. உம், அதுவும் நீர் எவ்வளவோ மன உறுதியுள்ளவர், சாமானியமாய் ஏமாறப்பட்டவரா? மேலும் அதை இன்றே விற்றுவிடவேண்டுமென ஒரே தீர்மானத்துடனிருந்தவர.........அதுவும்......ஒரு பொம்மனாட்டியிடம் நீங்கள் ஏமாந்துபோய் கொடுத்து விட்டேன் என்பது எனக்கு நம்பிக்கையாகவே இல்லையே" என்றார்.

மலையப்பையர் தான் மாலையில் வேண்டுமென்று வீம்பு பிடித்து, தன்னை மிகவும் சிலாகித்துத் தற்பெருமையடித்துப் பேசிக்கொண்டதைச் சுட்டி இடித்துரைக்கிறாரென்பதை யறிந்துகொண்டார். மேலும் அது இவ்வளவு சீக்கிரத்திலேயே அவர் ஏசும்படியான நிலை ஏற்பட்டதற்காக மிகவும் விசனப்பட்டார்.

பிறகு, வேதாந்தமையரிடம் "அந்தப் பெண் உயர்ந்த அந்தஸ்திலுள்ளவளாயும், அழ

காயும், மரியாதையான பேச்சு வார்த்தையுடையவளாயுமிருந்தபடியால், அவள் கூறுவது உண்மையாக இருக்கலாமென்று தான் நினைத்தேன். ஏதோ வேளைபிசகே ஒழிய வேறில்லை. இருந்தாலும், அந்த விஷயத்தைப் போலீசுக்குத் தெரியப்படுத்த வேண்டியதுதானே?" என்று மலையப்பையர் கேட்டார். வேதாந்தமையர், போலீசுக்குச் சொல்ல அவசரப் படவேண்டாமென்றும், தான் சில ஆளைக்கொண்டு இரகசியமாய் அந்த நபரைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்வதாயும், அதில் பிறயோஜனப்படாவிட்டால் பிறகு பகிரங்கப் படுத்தலாமென்றும் கூறிவிட்டு, அந்த மாலையை வாங்கிக்கொண்டு போன கன்னியின் அங்க அடையாளங்களைச் சொல்லும்படி கேட்டார். மலையப்பையர், அவளது அங்க அடையாளங்களையும், ஆடை ஆபரணங்களையுங்கூட விபரமாகக் கூறவே வேதாந்தமையர் அவைகளைக் குறித்துக்கொண்டு, எண்ணூரு ரூபாய் பெருமான நகைபோனது பற்றி தனக்கும் அபாரமான விசனமேற்பட்டிருப்பதால், தான் முடிந்த வரையில் அதைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதாய்த் தைரியங் கூறினார்.

... .... ....

பதினைந்து தினங்களாகி விட்டன. காசுமாலை போனது போனதாகவே இருந்தது. சதிபதிகள் பரஸ்பரம் உர்ரென்று இருந்துகொண்டிருந்தனர். ஒரு தினம் இரவு மணி எட்டிருக்கும். மலையப்பையர் கூடத்தில் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டிருந்தார். தில்லை ஏதோ வேலையிலீடு பட்டிருந்தாள். அச்சமயம் யாரோ வருவது போலத் தோன்றவும் உடனே அவ்விடம் வேதாந்தமையரும், சிறிது பின்னால் அவரது பிள்ளை சங்கரனும், அவனைத் தொடர்ந்து அப்ஸரஸ் போன்ற ஒரு பெண்மணியும் வந்தனர். பின்னால் வந்த பெண்ணைக் கண்டதும் துள்ளி எழுந்த மலையப்பையர் "ஆ, இந்தப் பெண் தான்" என்று கூறினார்.

வேதாந்தமையர்: "இல்லை, இதப்பார், நான் அந்தக் கள்ளியைக் கண்டுபிடித்திழுத்து வந்துவிட்டேன். ஆனால் அவளது அழகு அபாரமானதுதான். ஏது? இனிமேல் உன்னகத்துக்காரர் உன்னைச் சட்டை பண்ணுவர் என்று எனக்குத் தோன்றவில்லை" என்றார்.

மலையப்பையர்: "சே, அதென்ன பேச்சு? இவளிடம் தான் நான் மாலையைக்கொடுத்தேன், சந்தேகமேயில்லை. அதேபுடவை அதே நகைகள் யாவும் அன்றையதினமிருந்தது போலவேதான் இப்பவுமிருக்கிறாள்" என்று இன்னும் ஏதோ சொல்ல வாயெடுக்குமுன், தில்லை ஆத்திரமும் பொறாமையும் பொங்கி வழிய "ஓகோ, இந்தப் பிசாசுதானா? அட வெட்கங்கெட்டவனே, நான் காசுமாலையை வாங்கிண்டுவான்னு இவளிடத்தில் சொன்னேனா. புளுகைப்பார், பொய்யும் பித்தலாட்டமும், உனக்கு அழகுவேரோ, தளுக்கு மினுக்குவேரே, நீ செய்திருக்கும் வேலைக்கு உன் தலையில்"........மேலே சொல்லிக்கொண்டு போகுமுன், வேதாந்தமையர் "ஏ, பெண்ணே, நீ இவரிடமிருந்து பதினைந்து நாளைக்குமுன் ஒரு காசுமாலையை மோசமாக அபகரித்துச் சென்றதாய் இவர் உன்மேல் சாட்டும் குற்றம் உண்மைதானா?" என்றார். அப்பெண் "இந்தம்மாளுக்குக் காசுமாலை உண்டு என்பதை இவர் அனேக தடவை அதை அணிந்துகொண்டு வெளியில் சென்றபொழுது நான் பார்த்திருப்பதால் தெரிந்துகொண்டேன். எனக்கும் அந்தக் காசுமாலைமேல் ஒரு ஆசை உண்டாகிவிட்டது. ஸ்திரீகளுக்கே நகை என்றால் ஒரு ஆசைதானே? பதினைந்து நாள் முன் இந்தம்மாள் காசுமாலையை அணிந்து கொள்ளாமல் ஏரதய்யங்கார் வீட்டில் நுழைவதைத் தற்செயலாய்க் கண்ட நான், அதுதான் சமயமென்று இவரிடம் வந்து சுவல்ப்பமாய்ப் புளுகினேன். என்னை நம்ப வேண்டுமென்று நானாக இவரை வற்புறுத்தவில்லை. இவர் என்னை உபசரித்து உட்காரச்செய்து "இதெற்கென்ன பிரமாதம்?





தருகிறேன். பத்திரமாய் எடுத்துக்கொண்டு போ" வென்று கூறி, அவராகத்தான் பிரீதியுடன் காசுமாலையை எனக்களித்தார். நடந்த உண்மை இதுதான்" என்று பயமற்றுக் கூறினான்.

தில்லை: "மானக்கேடு, மானக்கேடு" என்று முணு முணுத்தாள்.

மலையப்பையர், "அதெல்லாம் போகட்டும், நீ எடுத்துச் சென்ற அந்தக் காசுமாலை இப்ப எங்கே இருக்கிறது?" என்று நெற்றியைச் சுருக்கிக் கேட்டார்.

வேதாந்தமையர்: "ஏ சுந்தரி, எடு அந்த மாலையை. இல்லாவிட்டால் நான் செய்யும் போலீஸ் மரியாதை எப்படிப்பட்டதெனத் தெரியுமோனா?" என்று அதட்டினார்.

அந்தப்பெண் "ஆகா, நீங்கள் செய்வதும் தெரியும், உங்களையும் தெரியும். உள்ளுடையில் வைத்திருக்கிறேன். எடுத்துக்கொடுத்து விடுகிறேன்" எனக்கூறி, சரசரவென்று தானணிந்துக் கொண்டிருந்த நகைகளையும், புடவை ரவிக்கை முதலியவற்றையும் களைந்து வைத்து, தலைமயிரையும் பிடித்திழுத்து தூர எறிந்துவிட்டு, இடையில் ஒரு அரை நிஜாரும், மேலே ஒரு பனியனும், கிருப்புத்தலையுடனும் வேதாந்தமையரின் இளைய புத்திரன் சுந்தரவாதனும் நின்று, நிஜார் ஜோபிக்குள்ளிருந்து காசுமாலையை எடுத்து "எடுத்துக்கொள்ளுங்கள், பத்திரம் கொடுத்து விட்டேன்" என்று சிரித்தபடி கூறி, ஒரே பிரமிப்புடன் நின்றுகொண்டிருந்த மலையப்பையரின் கையில் வைத்துவிட்டு "அப்பா என் நடிப்பு சரிதானே? நான் இனிமேல் டிராமாவில் ஸ்திரீ பார்ட் தரிக்கலாமோனா?" என்றான் சந்தோஷத்துடன். பிறகு உலகையே மறந்தவள்போல் நின்றுகொண்டிருந்த தில்லையைப் பார்த்து "அத்தே என் தலையில் சாணியைக் கறைத்துக் கொட்டிவிடாதே" என்றான். அப்பொழுதுதான் சிறிது பிரமிப்பு நீங்கிய மலையப்பையர் "அட போக்கிரிப்பயலே, நீயா இவ்வளவும்..........சே, இந்தப்பொல்லாத காசுமாலையை நாளைக்குக் கட்டாயம் விற்ற பிறகுதான் சாப்பாடு" என்று சபதங்கூறிவிட்டு, "அட போக்கிரிப்பயலே, உனக்குத்தான் என்ன சாமர்த்தியமடா?" என்று அவமானத்தைப் பாராட்டாமல் ஆச்சரியப்பட்டார்.

## மதிப்புரை.

**ஸ்ரீமான் எம். வி. சீனிவாசன்,** எம்.ஏ., பி.எல்., அவர்கள் எழுதிய **மந்தாகினி அல்லது கிராமத்தொண்டு** என்ற நாவல் வரப்பெற்றோம். இதில் கிராம முன்னேற்றத்திற்கு நாம் செய்ய வேண்டியதை கதாரூபமாக எழுதப்பட்டிருக்கிறது. கதா நாயகனை பிரகாஷ், மந்தாகினி என்னும் மாதைத் தவிர மற்ற மங்கையரை தன் தாய்மார்களாகக் கருதினான் என்பது குறிப்பிடத்தக்கது. நம் நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் கிராம முன்னேற்ற மடைதல்தான் அவசியம். கதை மிகவும் அழகாக எழுதப்பட்டிருக்கிறது. புஸ்தகம் விலை அணா 8. விரும்புவோர் வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணிக்கு எழுதவும்.

# ஸ்ரீ புவனேஸ்வரி மாதா

## திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை, டர்பன்

ஸ்ரீ புவனேஸ்வரி, ஸ்வாமி விவேகாநந்தரின் மாதா. இவ்வம்மை கல்கத்தாவில் நந்தபால் போஸ் என்பவருக்குச் செல்வக் குமாரியாய்ப் பிறந்து, துர்க்கப் பிரசாத் என்பவரின் குமாரனாகிய விஸ்வநாதத்தரை மணந்தாள். விஸ்வநாதத்தர் வக்கீலாயிருந்து ஏராளமான திரவியம் சம்பாதித்து வந்தார். ஐந்து பெண் குழந்தைகள் பிறந்து சகல பாக்கியத்துடன் சுகமே வாழ்ந்து வந்த போதிலும், புத்திரனில்லாதது தம்பதிகளுக்கு மனோவியாகூலத்துக்கிடமாய் இருந்தது. இருவரும் மனச்சாந்தியாய் மகாதேவனைப் பூசித்து புத்திர சம்பத்தை அருளும்படி பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்பிரார்த்தனை தொடங்கிய சின்னாட்களுக்குப் பின் அம்மாது சிரோன்மணி கர்ப்பந்தரித்து சரியான காலத்தில் ஜெகஜ்ஜோதியாய் விளங்கிய விவேகாநந்தரை ஈன்றெடுத்தார்.

ஸ்ரீமதி புவனேஸ்வரி மிக்க மதப்பற்றும், தெய்வ பக்தியும் வாய்ந்தவர். இவருக்கு முகவசீகரசக்தி அபாரமாயிருந்தது. அவரைக் கண்ட மாத்திரத்தில் எவரும் அவரின் சொல்லை மீறி நடவார். எல்லாரோடும் இன்பமாயும், சரசமாயும் அன்பும் ஆதரவுடனும் சம்பாஷிப்பார். மகா புத்தி யுக்தியுள்ளவர். நிரம்பப் படித்தவர். கிருபை, அன்பு, தயை முதலிய நற்குணங்கள் இவரிடத்தில்தான் உற்பத்தியாயினவோ என்று எண்ணும்படி தோன்றுமாம்.

இவருக்குச் சங்கீதத்தில் நல்ல ஞானம். இனிமையான சாரீரமுடையவர். ஏதா கட்டும் ஒருதரம் கேட்டவுடன் திரும்ப அப்படியே ஒப்புவிக்கும் சக்தியுள்ளவர். சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரை தன் தாய் ரகுமணி தேவியுடன் இந்து சாஸ்திர சம்பந்தமான நூல்களையே பரிசோதிப்பார். தன் குழந்தைகளுக்கும் தன்னண்டை வருபவர்களுக்கும் அடிக்கடி நல்லுபதேசம் செய்வது வழக்கம். இவ்வம்மையினது சில உபதேசங்களை வாசகர்களுக்கு ஈண்டு தருகிறேன்.

(1) சாகும் பரியந்தம் சத்தியத்திலிருந்து தவறாதே.

(2) எப்பொழுதும் பரிசுத்தமாயும், யோக்கியமாயும் இரு.

(3) ஜெந்துக்களிடத்தில் பட்சமாயும் இரக்கமாயும் இருக்கவேண்டும்.

(4) இதரர்களுடைய சுதந்தரத்தில் தலையிடாதே.

(5) காரியா காரியங்களில் அவசரப் படாமல் சாவதானமாய் வேலைசெய்.

இத்தகைய குணங்களை வழிபற்றி நடந்து தாயால் போஷிக்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் வந்தார் விவேகாநந்தர். இந்த ஸ்ரீமதி தன் தாயாராகிய ரகுமணிதேவி இடத்தில் கற்றுக்கொண்ட குணங்களே இவைகள். முக்கியமாய் விவேகாநந்தரிடம் விளங்கிய அபாரமான மனோசக்தியும், திடசித்தமும், அவர் தாயிடத்தில் பெற்றவை. ஆங்கில பாஷை தன் தாயிடத்தில் தான் முதல் முதல் கற்றுக் கொண்டார். "என் தாயாரால் எனக்கு மனோசக்தி பயிற்சி உண்டாயிற்று" என்று பன்முறை மனதாரச் சொல்லி விவேகாநந்தர் தாயை ஸ்தோத்திரம் செய்வார். இம்மாதிரி புத்திரர்கள் தங்கள் தாய்மார்களைப் பற்றிச் சொல்லுவதும், தாய்மார்கள் இப்படிச் சொல்லப்பட்ட புத்திரர்களைப் பெற்று வளர்ப்பதும் அருமையல்லவா ?



பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யும் கடமை அவர்களைச் சற்புத்திரர்களாக்குவதேயாம். புத்திரர்கள் தங்கள் வாழ்க்கையில் "இப்புத்திரர்களைப் பெற்ற பெற்றோர்கள் என்ன தவம் செய்தார்களோ" என்று உலகத்தார் சொல்லி மகிழும்படி நடந்துகொள்வது அவர்களுடைய கடமையாகும்.

உலகெலாம் புகழ்பெற்று போற்றப்படும் சுவாமி விவேகாநந்தர் பெற்றோர்களுக்குச் செலுத்த வேண்டிய கடமையை முழுதும் செலுத்திவிட்டார். ஒருவன் பிறந்தால் விவேகாநந்தரைப் போல் பிறக்க வேண்டும். ஒருத்தி பிறந்தால் ஸ்ரீமதி புவனேஸ்வரி தேவியைப் போல் பிறக்கவேண்டும். இத்தகையவர்களால் உலகம் எவ்வளவோ நன்மையை அடைதல் கூடும்.

ஸ்ரீ புவனேஸ்வரி காலகதியடையு முன்னே அவரின் அருந்தவப் புதல்வர் காலகதியடைந்தது அம்மைக்கு ஆறாத் துயரமாயிற்று. புத்திர சோகப்படும்படியான துர்பாக்கியம் அம்மைக்கு உண்டானது அவர் செய்தவினைப் பயனேயாம். எவர்தான் விவேகாநந்தரை இழந்து மனமாறி வாழ்வார்? 1910-ல் ஸ்ரீமதியும் பரமபதத்தை அடைந்தனள். எவ்வளவு காலந்தான் மகன் பிரிவைப் பொறுத்து அம்மை வாழக்கூடும்? மகனுடன் சதா சந்தோஷமாய் வாழ இப்பொய்யுடலை நீக்கி மாதா புவனேஸ்வரியும் விண்ணுலகுக்கேகினர் போலும் !

## அரசியலும் பெண்களும்

இராஜீயப் போராட்டங்களில் ஆண்களைக்காட்டிலும் பெண்களே உண்மையான ஊக்கத்தைக்காட்டினார்கள். இன்றும் உற்சாகத்துடன் உழைத்து வருகிறார்கள். அவர்கள் ஒடுக்கப்பட்டு வைத்திருந்த போதிலும் பொது வாழ்க்கையில் குறுகிய எல்லைகள் உடையவர்களாகக் காட்டிக் கொள்ளவில்லை. மகாத்மாவின் உப்பு சத்யாகிரஹத்திலும் சரி, இதர தேசீய இயக்கங்களிலும் சரி, இந்திய மாதர்கள் பெரும் தியாகம் செய்தார்கள்; சிறை புகுந்தார்கள், தடியடி தாங்கினார்கள், சிறைச்சாலைகளில் பலவித துன்பங்களை மனந்தளராது அனுபவித்தார்கள். அவர்கள் இந்திய அரசியல் போராட்டத்தில் காட்டிய உற்சாகமும், தியாகமும் ஆண்களுக்கும், வரப்போகும் சந்ததிகளுக்கும் வழிகாட்டியாக இருக்கிறது. இவ்வளவு உயர்ந்த இந்தியப் பெண்மணிகளின் அந்தஸ்தும், உரிமைகளும் அதிகரிக்கச் செய்ய வேண்டியது ஆண்மக்களின் கடமையாகும்.—டாக்டர் ஆர். பி. பரஞ்பி.

# மான்டினீக்ரோ

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

## மக்கள்

மான்டினீக்ரின்கள் சிறந்த தேக பலமும், திட காத்திர சரீரமும், மிக்க வீரமும், தீரமும் மிக்கவர்கள். தங்கள் நாட்டின் சுதந்திரத்தையும், தங்கள் கௌரவத்தையும் நிலை நாட்டுவதற்காக பல நூற்றாண்டுகள் போராடி இருக்கின்றனர். கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக யுத்தம் செய்வதே ஆண்மக்களின் பிரதான தொழிலாக இருந்துவந்திருக்கிறது. அவர்கள் தேசமும், மலையும் காடுகளும் நிறைந்ததாயிருக்கிறது. மான்டினீக்ரோ என்றால் கருமலை நாடு (land of the Black Mountain) என்பது பொருள். இவர்கள் யுத்த வீரர்கள். அஞ்சாநெஞ்சு படைத்தவர்கள். அடிக்கடி தங்கள் நாட்டைக்காப்பாற்ற யுத்தம் புரிய வேண்டியிருந்ததால் சமாதான காலங்களில் கூட யுத்தமுஸ்தீப்புடனே இவர்கள் இருக்கிறார்கள். எப்பொழுதும் ஒரு கைத்துப்பாக்கி (Pistol), இடுப்புக்கச்சையில் (Belt) நீண்ட பிச்சுவா, ஒரு துப்பாக்கி இவைகளைத் தாங்கியே செல்லுகிறார்கள். அவர்களின் சாதாரணகால உடையும் ஒருவாறு ராணுவ உடை போலவே யிருக்கிறது. பிறப்பு முதல் இறப்புவரை யுத்தப் பயிற்சிகளிலும், சண்டைகளிலுமே ஆண்மக்கள் தங்கள் காலத்தைச் செலவு செய்வதால் சாதாரண வேலைகளைச் செய்ய அவர்கள் விரும்புவதில்லை.



மான்டினீக்ரின் ஸ்திரீ விசேஷ உடை அணிந்திருக்கும் காட்சி.

## ஸ்திரீகள்

ஆகையால் மற்ற எல்லாக் காரியங்களையும் மான்டினீக்ரோ ஸ்திரீகளே கவனித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதர கடமைகளை இந்நாட்டுப் பெண்கள் ஏற்று வெகு திறமையாகச் செய்து வந்திருக்கிறார்கள். எப்படி புருஷர்கள் யுத்தத்தில் மஹா வீரர்கள் என்று பெயர் பெற்றிருக்கிறார்களோ அதேபோல் பெண்கள் இதர காரியங்களைத் தாங்களே செய்வதில் வல்லவர்கள் என்ற பெயரை நிலைநாட்டியுள்ளார்கள். வீடுவாசல்களைப் பார்த்துக் கொள்வது, குழந்தை குட்டிகளை வளர்ப்பது, விவசாயம், கைத்தொழில், வியாபாரம்



முதலிய எல்லாம் ஸ்திரீகளே செய்து வருகிறார்கள். யுத்தம் செய்வதைத்தவிர இதர எல்லாக்காரியங்களுக்கும் ஸ்திரீகளே பொறுப்பாளிகள். அவர்கள் அனாவசியமாக தெருக்களில் சுத்தமாட்டார்கள். ஸ்திரீகள் கொலைக்குற்றத்தைத் தவிர வேறு எவ்வித குற்றங்களுக்கும் பொறுப்பாளிகளாக மாட்டார்கள். மனைவி செய்த குற்றங்களுக்கு புருஷனும், மகள்



ராணி மிலினா தேசீய உடையில் காணப்படுகிறார்.

குற்றத்துக்குத் தந்தையும், தங்கை குற்றத்துக்கு தமையனும் பொறுப்பேற்றுக் கொண்டு உரிய தண்டனைக்குள்ளாக வேண்டும். அவதூறுகளுக்குப் பழி வாங்கும் வேலை ஆடவர்களுடையதே. மணமாகாத பெண்கள் சிகப்புக் குல்லா அணிகிறார்கள்.

## விவசாயம்

விவசாய அபிவிருத்தியில் மான்டினீக்ரோ மாதர்கள் செய்த வேலை மெச்சத்தக்கதாகும். அந்த மலை நாட்டில் நிலங்களைப் பண்படுத்தி விவசாயத்துக்கு லாயக்காகச் செய்ய அவர்கள் பெரும் பாடுபட்டார்கள். உணவுப் பொருள்களை உண்டாக்க அவர்கள் பட்ட சிரமம் சொல்லி முடியாது. ஒரு உருளைக்கிழங்குச்செடி விளையக்கூடிய பூமி அகப்படுமானால் அதன் பொருட்டு அவர்கள்படும் பிரயாசை சொல்லத் தரமன்று. அத்தேசத்தில் விவசாயத்தை உண்டாக்கி நடத்தி வருபவர்கள் நங்கையர்களே. எவ்வளவு முயற்சி செய்தும் அத்தேசத்து மக்களுக்கு வேண்டிய ஆகாரப் பொருள்கள் யாவும் உற்பத்தி செய்ய அவர்களுக்குப் போதிய நிலம் கிடைக்கவில்லை.

அவர்கள் ஆகாரம் மிகவும் எளியது. உருளைக்கிழங்கு, பாலாடை, உப்புகண்டம், கம்பு அல்லது சோளத்தால் செய்யப்பட்ட ரொட்டி இவைகளே அவர்களின் முக்கிய உணவு. வயிறு நிறையத் தின்ன வேண்டுமென்ற அவா அவர்களிடம் கிடையாது. வீரம் செறிந்த செய்கைகள் செய்வதிலேயே அவர்கள் எண்ணமிருந்து வருகிறது.

யுத்தத்தில் புறமுதுகு காட்டி ஓடிய புருஷன் பெருத்த அவமானத்துக்கு ஆளாக்கப்பட்டு வந்தான். அவன் பெண் வேடமிடப்பட்டுக் கையில் ஒரு கதிர்க் கம்பி கொடுக்கப்பட்டு, கதிர்க்கம்பியால் பெண்களால் அடிக்கப்படுவான். பின்னர்

தேசத்துரோகி என்று பிரகடனம் செய்யப்பட்டு நாட்டைவிட்டுத் துரத்தப்படுவான். மலை நாட்டாரின் சுபாவங்களெல்லாம் இவர்களிடத்தும் அமைந்துள்ளன. எதிலும் மிதமான குணமுடையவர்கள். சாதாரணமாக அவர்கள் தண்ணீர் அல்லது பால்தான் அருந்துவார்கள். சில விசேஷ தினங்களில் மட்டும் ஒருவகை பானத்தைச் சாப்பிடுகிறார்கள். தன் மனைவியிடத்து உண்மையான விசுவாசத்துடன் அவனிருக்கிறான். குடும்பத்திலும் அதிக அன்பு காட்டுகிறான். தன் குடும்பத்தின் கௌரவத்துக்கு ஹானி ஏற்பட்டால் வஞ்சம் தீர்த்துக் கொள்வதில் மான்டினீக்ரின் மிகுந்த ஊக்கம் காட்டுகிறான். நடனமாடுவதில் அவர்களுக்கு அதிகப் பிரியம்.

வீடுகள் வெகு சிறியவைகளே. சிறு ஓடுகள் நம் கிராமங்களில் கூறைக்குப் போடப்பட்டிருப்பதுபோல் அங்கும் உபயோகப்படுத்தப்படுகின்றன. மாடி வீடுகள் வெகு சொற்பம். அதிக ஆடுமாடுகள் உள்ளவர்கள் மட்டும் மாடி வீட்டில் வசிக்கிறார்கள். கீழ்பாகத்தில் ஆடுமாடுகள் வசிக்கின்றன. மாடியில் குடும்பம் வசிக்கிறது. தண்ணீருக்கு சில பாகங்களில் கஷ்டம் அதிகம். உருகின பனிக்கட்டிகளை சேகரம்பண்ணி வைத்து வெகு ஜாக்கிரதையாக உபயோகிப்பதுண்டு. ஜலக்கஷ்டம் இருப்பதால் தேசம் பூராவும் தண்ணீரை சிக்கனமாகவே உபயோகித்து வருகிறார்கள். தேசம் மலைப்பாங்காக இருப்பதால் போக்குவரவு சாதனங்கள் மிகக்குறைவு.

## கல்வி

கல்வி கவனிக்கப்படாமல் போய்விடவில்லை. இத்தேசத்தில் 1493ம் வருஷத்தில் ரேகா என்ற ஊரில் ஒரு அச்சுக்கூடமிருந்தது. அது 1566ம் வருஷம் துருக்கியரால் அழிக்கப்பட்டது. மறுபடியும் 1832ல் தான் அச்சுத் தொழில் தலையெடுத்தது. துருக்கியருக்கும், மான்டினீக்ரின்களுக்கும் சுமார் ஐந்து நூற்றாண்டுகள் சண்டை நடைபெற்றது. இவர்கள் செர்பிய பாஷை பேசுகிறார்கள். கிறிஸ்தவ மதஸ்தர்கள். வீரர்களின் தியாகங்களைப் புகழ்ந்து அநேக பாட்டுகள் இயற்றப்பட்டு பக்க வாத்தியங்களுடன் பாடகர்களால் பாடப்பட்டு வருகின்றன.

கோலோ என்ற நடனத்தில் ஆண் பெண் இரு பாலாரும் கலந்து நடனம் புரிகிறார்கள். இது பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கிறது. ஓரோ என்ற டான்ஸில் ஆண் பெண்கள் ஒருவருக்கொருவர் எதிர் நின்று பலவிதமாக நடனம் செய்கிறார்கள். சிலசமயங்களில் நடனத்தில் ஆடவர்கள் ரிவால்வர் குண்டுகள் சுடுகிறார்கள். இந்த நடனம் மிகவும் அற்புதமானது.

## சரித்திரம்

இதன் சரித்திரம் தன் சுதந்திரத்தைக் காப்பாற்ற இது சண்டை போட்டது தான். இதை ஸெட்டிஞ்சி நகரிலிருந்து மத குருக்கள் சிலகாலம் ஆண்டு வந்தார்கள். இதன் கடைசி அரசன் பெயர் நிக்கோலாஸ். இவன் நாட்டுக்கு வேண்டிய பல நற்காரியங்களைச் செய்தான். ஆனால் இச்சிறுதேசம் மஹாயுத்தத்துக்குப் பின் ஏற்பட்ட உடன்படிக்கையில் பால்கன் நாடுகளுடன் கலக்கப்பட்டு ஐரோப்பிய படத்திலின்று மறைந்தது. இது 1910ம் வருஷம் தான் ஒரு ராஜ்யமானது.





இதன் முதல் அரசர் நிக்கோலாஸ். 1914ம் வருஷம் ஆரம்பித்த மஹாயுத்தத்தில் மான்டினீக்ரோ நடுநிலைமை வகித்திருந்தால் அதன் சரித்திரமே வேறுவிதமாக இருந்திருக்கும். தன்னலம்பாராது வயது முதிர்ந்த நிக்கோலாஸ் மன்னன் செர்பியாவுக்காக ஆஸ்திரியாவுடன் சண்டை செய்தான். ஆண் பெண் இருவரும் உற்சாகத்துடன் சண்டையில் ஈடுபட்டார்கள். நிக்கொலாஸ் அரசன் ஆஸ்திரியர்களால் சிறையாக்கப்பட்டான். மான்டினீக்ரோ செர்பியாவின் ஒரு பாகமாக்கப்பட்டது. பின் வெர்சேல்ஸ் உடன்படிக்கைப்படி யூகோஸ்லேவியா என்ற புதிய தேசத்தின் ஒரு பகுதியாக சுதந்திர மான்டினீக்ரோ சேர்க்கப்பட்டது.

## வல்லரசுகள் மோசம்

சத்தியத்தை நிலை நாட்டவும், தர்மத்தைக் காக்கவும், ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் ஜர்மனியுடனும், அதைச் சேர்ந்த தேசங்களுடனும் போர்புரிவதாக வல்லரசுகள் பறை சாற்றின. சிறு தேசங்களையும் தங்களுடன் சேரும்படி தூண்டின. நம்பி மோசம்போன சிறு தேசங்களில் மான்டினீக்ரோ ஒன்று. இன்று எப்படி அபிஸீனிய சக்கிரவர்த்தி சர்வதேச சங்கத்தை நம்பி நாடு நகரிழந்து பரதேசியாய்த்திரிகிறாரோ அதேபோல் வல்லரசுகளை நம்பி அவர்களின் சார்பாக தன் தேசத்தவரைப்போரில் ஈடுபடச் செய்த மன்னன் நிக்கொலாஸ் அரசன் தன் மனைவி மக்களுடன் நாடு கடத்தப்பட்டு தரித்திரத்தின் கொடுமையால் வெளிநாட்டில் மடிய நேர்ந்தது. தனது தள்ளாத வயதில் அவன் பரதேசியாய் மனக்கொதிப்புடன் 1921ம் வருஷம் மார்ச்சு மாதம் மாண்டான். அவனது சவம் இத்தாலியில் அடக்கம் செய்யப்பட்டது. ஆனால் மான்டினீக்ரின்களின் சுதந்திர உணர்ச்சி இன்றும் மடியவில்லை. இன்னும் தங்கள் தனி ராஜ்யத்தை ஸ்தாபிக்க எப்பொழுது சமயம் நேரிடும் என்று எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள்.

# மாதொருபாகனர்

ஸ்ரீமதி ச. அன்னபூரணி

சிவபெருமானது திருவுருவமானது திருமுடியிலிருந்து திருவடிவரைக்கும் வலதுபாகம் ஆணும், இடதுபாகம் பெண்ணுமாக விருக்கின்றது. மாதொருபாகனை அவரை வழிபடுவதே சைவ சமயிகளின் முதற்கொள்கை யாகும். அவர்களின் சமயத்திற் தாய்மைக் கடவுளை வணங்குவது போல், ஏனைய சமயங்களிற் தாய்மைக் கடவுளைக் குறிப்பிடவில்லை. சைவ சமயிகள், கல்வி, ஆற்றல், செல்வம் முதலியவற்றிற்கு உவந்த தெய்வங்களாக முறையே கலைமகள், பராசக்தி, திருமகள் என விதிப்படுத்தி வணங்குகின்றார்கள்.

சிவனடியார்கள் சிவனைத் துதிக்கும் பொழுது பெரும்பாலும் அவரது தொன்மைக் கோலமாகிய 'மங்கைபங்கன்' திருவுருவத்தில் ஈடுபட்டு அடிக்கடி மிக்கவன்புருக அதனை விவரிக்கும் முகத்தாற்றும் பக்தியைப் புலப்படுத்துவர். மாணிக்கவாசக சுவாமிகளும் இத்திருக்கோலத்தையே கண்டானந்தித்தாரென்பது அவரது அருள்வாக்காற் பெறப்படும்.

"தோலுந் துகிலுங் குழையுஞ்
சுருள்தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும்
பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத்
தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந் தூதாய்
கோத்தும்பீ"
(திருவாசகம்)

இன்னும் திருஞானசம்பந்தமூர்த்திகள் பாலருவாயராயிருக்கும் பொழுது கண்ட காட்சியும் அம்மையப்பரே யாகும். அவர் பின்வருமாறு காண்கின்றார்.


"தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்
தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானி
வனன்றே."

தோடு எனப் பெண்பாற்குரிய அணிகலனை முதற்கண் எடுத்தோதிச் 'செவியன்' என ஆண்பால் விகுதி கொடுத்தமை யாழ் பெறப்படல் காண்க.

ஏனைய சமயங்களில் தாய்மைக் கடவுளைக் குறிப்பிடாதிருப்பவும், சைவசமயத்திற் குறிப்பிட்டு அதனை முதன்மைப் படுத்துவது, சிறப்புடைப் பொருளை முந்துறக்கிளத்தல் எனுமுறை பற்றியே போலும். தாய் இல்லையாயின் உலகமுமில்லையாகும். எனவே உலகத்திற்கு இன்றியமையாத சிறப்பினையுடைய தாயானவள் உயிர்களைப் பெற்று வளர்ப்பதில் பலவித இன்னல்களையும் அனுபவிக்க வேண்டியவளாக விருந்தும், அவளுக்கு அக்கஷ்டங்கள் சிறிதும் தோன்றாமல், ஆண்மக்கட்கு வாய்க்கமாட்டாததும், என்றும் மாறுபடாததும், எஞ்ஞான்றும் ஒரே தன்மைத்தாய்த் தலைசிறந்து விளங்கும் ஒருவகைத் தாயன்பே ஊற்றெடுத்துத் ததும்பி நிற்கும். தாய் காட்டக் கண்ட தந்தையே யாகும். பிள்ளைகளும் தாயிலேயே முதல் அன்புடையரா யிருக்கின்றனர். சிவனடியார்கள் சிவனை வணங்கும்பொழுது, "அம்மையே அப்பா ஒப்பிலாமணியே" (திருவாசகம்)' எனவும், "அம்மையப்பரே!" உல



கோலாட்டம்.



ஸ்ரீமதி லக்ஷ்மி சங்கரய்யர், எம்.எல்.ஏ.
திருநெல்வேலி கிராமப்பொதுத்
தொகுதியில் வெற்றிபெற்றவர்.



ஸ்ரீமதி அம்மன்ன ராஜா, எம்.எல்.ஏ.
எல்லூர் ஸ்திரீ தொகுதியில்
வெற்றி பெற்றவர்.



ருக் கம்மையப்ப ரென்றறிக, (திருக்களிற்றுப்படியார்) எனவும் போற்றுகின்றனர். இன்னும் சில நாயன்மாரும் புலவர்களும், தாம் ஆண் மக்களே யாயினும், கடவுள் திருமுன் பெண்மக்களாகப் படைத்து வைத்துக்கொண்டு, தம்மைக் காதலிகளாக்கிக் கூறியிருப்பது, மகளிரன்பு சிறப்புடைத்தென்பதை விளக்குகிறது.

வெளிப்பார்வைக்குக் கணவனும் மனைவியும் இருவராய்த் தோன்றுவர். உட்பார்வைக்கோ இருவருமொருவராவர். ஈருடலும் ஓருயிருமெனக் காணப்படுவதையும் கூறல் பொருந்தும். மங்கைபங்கன் வடிவத்திலோ உளத்தில் நிகழும் ஒற்றுமை உடலிலும் காணப்படுகின்றது. அகத்துத் தோன்றும் அருளொளியைப் புறத்தே புலப்படுத்துவது இவ்வழகிய அர்த்த நாரீஸ்வர வடிவமாகும்.

இனி, இவ்வடிவத்தின் புராணவரலாற்றினைச் சிறிது கவனிப்போம். பண்டொரு ஞான்று பரமனும் பார்வதியும் கயிலையங்கிரியில் வீற்றிருக்கையில், அங்கு வந்த பிருங்குமுனிவர் சிவனைமட்டும் தொழுது வலம் வந்து சென்றனர். இதனைக் கண்ணுற்ற பார்வதி, முனிவர் மீது வியப்புக் கொண்டு சிவனுக்கருகில் நெருங்கி வீற்றிருந்தாள். மறுநாளும் பிருங்குமுனிவர் வழக்கம் போல வணங்க வந்த பொழுது, பார்வதி சிவனுக்கருகில் நெருங்கி வீற்றிருந்ததைக்கண்டு, வண்டின் வடிவெடுத்து, அவர்கள் இருக்கையைப் பிரித்து, சிவனை மாத்திரம் வணங்கிச் சென்றார். அது கண்ட பார்வதியார் அதன் காரணத்தை ஐயனிடம் வினவினர். அவர், "இம்மை நலனை விழைந்தார் உன்னையும், மறுமைப் பயனை விரும்பியவர் என்னையும் வணங்குகின்றனர். பிருங்குமுனிவரும் மறுமைப் பயனை நாடி என்னை வணங்கிச் செல்லுகின்றார்" என விடையிறுத்தார். அப்பொழுது உமை, "ஐய, உமக்குளிலெனக்கும் பங்கில்லையோ" என விரங்க, சிவபெருமான் தனது உடலில் இடது பாதியை அவளுக்கீந்து, ஆணும் பெண்ணுங்கலந்த அர்த்த நாரீசுவர வடிவமானார்.

ஒன்றும் ஒன்றும் கூடின் இரண்டாகும். ஆனால் ஒன்றும் ஒன்றும் ஒன்றி ஒன்றாகும் நிலைமையே அர்த்த நாரீஸ்வர வடிவமாகும். அருவுருவ வடிவமே இது என்பாருமுளர். இவ்வடிவத்தைக் குறிப்பிடுதற்கு இவ்வளவு நீடித்த சொற்களன்றித் தமிழ் மொழியில் எளிதான சொற்களில்லையோ வெனச் சிலர் ஐயுறலாம். அவ்வையத்தைக் குமரகுருபர சுவாமிகள் அகற்றிவிட்டனர். இம்மாபெரும் புலவர் மங்கை பங்கன் திருமுன்னின்று, அவர்களிருவரையும் ஒன்று சேர்த்து வணங்குதற்குத் தமிழ் மொழியுதவாதிருப்பின் என்பாடு என்னவாகுமோ எனக் கழிவிரக்கங் கொண்டு பாடுகின்றார். இச்சொல் தரித்திரனுக்குப் பொற்குவியல் கிடைத்ததையொப்ப, சுவாமிகட்குப் பேரானந்தத்தை உண்டாக்கியது. அச்சொல் எதுவென்பதை அவர் வாய்மொழியாற் கேட்டின்புறுங்கள்.

"ஒருவனுக்"கு மொருத்திக்கு
முருவொன்றுலவ்
வுருவை யிஃதொருத்தனென்கோ
ஒருத்தியென்கோ
இருவர்க்கு முரித்தாக
வோருவனொன்றோர்
இயற்சொலிலதெனில் யான்
மற்றென் சொல்கேனே.

இன்னொருமுறை குமரகுருபர சுவாமிகள் உமா மகேசுவரவடிவத்தி லீடுபட்டு 'எம்தாயே' என்றழைப்பதா அல்லது 'எம் தந்தையே' என்றாற்றுவதா எனக் கலக்கமுற்று 'எந்தாய்' என மிகச் சாதுரியமாய் அழைத்து இக்கஷ்டத்தினின்றும் தப்பித்துக் கொள்ளுகின்றார். இச் சொல் எம்—தாய் எனவும், எம்—தந்தை எனவும் பொருள்படும். எனவே இருவரையும் ஒருங்கு விளித்த வாறாயிற்று. அடியாரின் உண்மைப் பற்றும் தமிழ் மொழியின் சிறப்பும் இச்செய்திகளால் எளிதிலுணரற்பாலன. அச்செய்யுளையும் ஈண்டுக் குறிப்பிடுகின்றோம்.

செவ்வாய்க்கருங்கட்பைந் தோகைக்கும்
வெண்மதிச் சென்னியற்கும்
ஒவ்வாத்திருவுரு ஒன்றே
யுளதவ் வுருவினைமற்
றெவ்வாக்கிய மென்றெடுத்திசைப்பே
மின்னருட் புலியூர்ப்
பைவாய்ப் பொறியரவல்கு
லெந்தாயென்று பாடுதுமே.

ஆண் வலத்திலும் பெண் இடத்திலுமிருப்பது, வலம் ஆண்களுக்குரிய வலிமையையுடையதாலும், இடம் பெண்களுக்குரிய மென்மைத் தன்மையுடையதாலுமென்க. வலக்கையானது அதிகம் அசைந்து திரிந்து சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்ய, இடக்கையானது அதற்கிசைந்து, அதிகம் அசையாமல் தன்னிடத்திலிருந்து கொண்டே மென்மையான வேலைகளைச் செய்து உதவி புரியும். சொல்லினும் செயலினும் அடக்கமும் மென்மையும் விளங்கத் தமது கடமைகளைச் செய்து முடிப்பதே பெண்மைக் கழகு.

சிவனும் சக்தி சமேதராக நின்று தொழிலியற்றுவர். இவ்வுலகமும் அதிலுள்ள சர்வ சிருஷ்டிகளும் ஒரு காலத்தில் அழியும். அவை அழிந்து ஆதி சக்தியில் ஒடுங்கும். அந்தச் சக்தியும் சுத்த சிவத்திலொடுங்கும். அப்பொழுது சிவம் யாதொரு செயலுமற்றுச் சுத்த சிவமாய் விளங்கும். இவ்வாறு அழித்தற்றொழிலினால் உயிர்கள் பிறப்பு நீங்கி ஒடுங்கி இளைப்பாறியிருக்கும் பொழுது, மீளவும் அணுகட்கு அநுக்கிரகம் செய்யும் பொருட்டுப் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யத் திருவுளங்கொண்ட அளவில், சிவன் கருணை முதலிய திருவருட் குணங்களோடு அருளே திருமேனியாகக் கொண்டு சக்தி சமேதராக விளங்குவர்.

இதனால் ஆண் பெண் ஒருவர்க்கொருவர் இன்றியமையாதவரென்றும், யாவும் பெண்களிலேயே தங்கி யிருக்கின்றதென்றும், அறியலாம். துறவியை அவர் தந்தையும் வணங்க வேண்டும் என்பது முறை யெனினும், தாயைத் துறவியும் வணங்கவேண்டு மென்பதே விதியும் சான்றோர் கூற்றுமாம். முற்றுந் துறந்த பட்டினத் தடிகளும் தமது தாயின் ஈமக் கடன்களை முடிக்கத் திருவுளங் கொண்டமையும், நைந்துருகினமையும் அவரது பாடல்களாற் பெறப்படும். தாய்மைக்கு மேற்பட்டதொன்று உண்டு சொல்? அங்ஙனமாயின் தாயைப் பங்காகவுடைய கடவுள் பெருமையை இச்சிறிய கட்டுரையில் எடுத்தியம்பல் அரிதாகும். யாரை வழிபடினும் மாதொருபாகனே எமக்குக் காட்சி யளிக்கின்றா ரென்பது, "யாதொரு தெய்வங்கண்டீர் அத்தெய்வ மாகியாங்கே, மாதொருபாகனார்தாம் ஒருவர்" எனும் அருள்வாக்கால் அறிந்தின்புறுக.



# பங்கஜம் திருந்திய விதம்

ஸ்ரீமதி பத்மா[illegible]ரி

சாமாவையர் மிக்க நற்குணமுடையவர்தான். ஆனால் அவரை ஸ்ரீதேவி அலக்ஷியம் செய்யவே வறுமைக்காளானவர். மாதம் 25 ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தாவேலையிலிருப்பவர். தங்கள் ஊரில் ஏதோ கால்வயிற்றுக் கஞ்சிக்குக் காணும்படியான பிதிரார்ஜித சொத்து சிறிது இருந்தது. அவருடைய மனைவி பங்கஜத்திற்கு இக்குடும்ப வாழ்க்கையே வெறுப்பாய் இருந்தது. அவள் இக்கால நவீன நாகரிக வாழ்விலும் ஆடம்பரவாழ்விலும் இச்சைகொண்டுள்ளவள். அவர்களுக்கு 6 வயதில் ஒரு பெண்ணும் 3 வயதில் ஒரு ஆண் குழந்தையும் இருந்தன. 25 ரூபாய் சம்பளத்தில், 4 ஜீவனும் சாப்பிட்டு வெளிக்கிளம்புவதே பிரும்மப் பிரயத்தனமாய் இருந்தது.

ஒருநாள் சாயந்திரம் சாமாவையர் வேலையிலிருந்து திரும்பி வீட்டிற்குவந்தார். ஷர்ட், கோட்டுகளை எல்லாம் கழற்றி விட்டுக் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு, சமையலறைக்குள் வந்து, "பங்கஜம், எனக்கு ஏதாவது வைத்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

உடனே பங்கஜம், ஹோட்டலிலிருந்து வாங்கி வந்த, ரவாதோசையையும் காப்பியையும் கொண்டுவந்து வைத்தாள். அதைக் கண்டவுடன் சாமாவையர், சற்று மனவருத்தத்துடன், "என்ன பங்கஜம், இவை ஹோட்டலிலிருந்தா வந்தது?" என்றார்.

பங்கஜம், "ஆமாம், சற்று முன்தான் நம்ப லலிதா தோசை வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள். ஆகையால் ஒன்றரை அணுவுக்கு மூன்று தோசைகள் வாங்கிவந்தாள். எனக்கு ஒன்று, உங்களுக்கு ஒன்று, குழந்தைகள் இரண்டுக்கும் ஒன்று," என்று மளமளவென்று கூறினாள்.

சாமாவையர், "பங்கஜம், நான் சொன்னால் கோபித்துக் கொள்ளுகிறாயே? ஒரு அணுவுக்கு ரவையும் மைதாமாவும் வாங்கி வீட்டில் தோசையை நீயே செய்தாயானால், எல்லோருக்கும் வயிறு நிரம்பவுமிருக்கும், கிலவும் சிக்கனமாகும். ஒண்ணரை அணு செலவழித்தும் வயிறும் நிரம்பாமல், செலவும்செய்வது என்ன பிரயோஜனம்!" என்று அதைச்சாப்பிட ஆரம்பித்தார். இச்சொற்களைக் கேட்ட பங்கஜத்தின்முகம் சோகத்தால் அறுந்து தொங்கியது. "எப்பொழுதும் எனக்கு விடிவுகாலம் ஏது? என்னவோ பிரமாதம் இந்தத் தோசையை வாங்கிவிட்டேனே! ஒவ்வொருவரைப்போல நான் என்ன தாட் சாப்பாடு எடுத்துக்கொண்டு வரச் சொல்லுகிறேனா என்ன! அவ்வளவிற்கெல்லாம் சுகப்பட நான் பிறந்திருக்கிறேனா என்ன! என்னமோ கழுதைஜன்மம் எடுத்துவிட்டேன். சிரமப்படாமல்தோசை தின்னுவதென்றால் எனக்கு லாயக்கா என்ன?" என்று மடமடவென்று கூறும் பொழுது அவளுடைய கண்களிலிருந்து கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருக்கினாள். கவிழ்ந்ததலை நிமிரவேயில்லை. அக்காக்ஷியைக்கண்ட சாமாவையரின் மனது இழகிற்று. உடனே, "அடி அசடே,

159943

நான் நல்லதைக் கூறப்போனால் அதைக் குற்றமாக எடுத்துக்கொண்டு விடுகிறாயே" என்று, வாடியமுகத்துடன் எழுந்து கையை அலம்பிவிட்டு, அவளையும் அழைத்துக்கொண்டு, முன் அறையில்வந்து, பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசி, மனதைமாற்ற முயன்றார். அவளும் சாதாரணமாகச் சிரித்துக்கொண்டு பேசினாளே யொழிய, அவள் மனதில் புதைந்து கிடந்த வருத்தம் மட்டும் ஒழியவில்லை யென்பதைச் செவ்வனேசாமா அறிந்தார்.

ஒரு சனிக்கிழமை மத்தியானம் ஒரு சைனாக்காரன் அனேக ஸில்க் துணிகளைக் கொண்டுவந்து அடுத்தவீட்டில் இறக்கியிருந்தான். அவ்வீட்டுக்காரி கமலம் சில நல்ல தினுசுகளாகப் பொறுக்கி எடுத்துக்கொண்டிருந்தாள். லலிதாவைத் தேடிக்கொண்டு வாயிலில்வந்த பங்கஜத்தைக் கண்ட கமலம், "அடி பங்கஜம்! இங்கே வா, இதில் எனக்கு எது நன்றாக இருக்கும் பார்!" என்று அழைத்தாள். உடனே அங்கு சென்று நல்ல தினுசாக அவளுக்கு வேண்டிய அரைடஜன் துணிகளைப் பொறுக்கி எடுத்துக்கொடுத்தாள். தனக்கு ஒன்றாவது வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற ஆவல் அதிகமாயிற்று. ஆனால் பணத்திற்கு என்னசெய்வது! 'ஆ! நாம் இப்படிப்பட்ட தரித்திரவாழ்க்கையி லிருக்கிறோமே,' என்று மனம் நொந்தாள். அத்தருணம் தன் தாயைத்தேடி வந்தசிறுமி லலிதா, அத்துணிகளைக் கண்டவுடன் தனக்கும் ஒன்று வேண்டுமென்று, அலறி அழுது ஏக கலாட்டா செய்தாள். பங்கஜம் ஒன்றும் கூறமுடியாமல் விழிப்பதைக் கண்டகமலம் "ஏண்டி! நீ வேண்டுமானால் குழந்தைக்கு வாங்கிக்கொடு. நான் பணம் கொடுக்கிறேனே. சம்பளம் வந்தபிறகு வாங்கிக் கொள்ளறேண்டீ!" என்றாள். உடனே பங்கஜத்தின் மனது சபலித்தது. "நாம் எப்பொழுதும்தான் இந்தநிலைமையில் இருக்கிறோம். ஏதோ ஆசைக்கு வாங்கிக்கொள்வோமே," என்று நினைத்துத் தனக்கொன்றும் லலிதாவுக் கொன்றுமாக மூன்று ரூபாய்க்கு இரண்டு ஸில்குகள் எடுத்துக்கொண்டு வந்துவிட்டாள்.

பிறகு சிறிதுநேரம் சென்றபிற்பாடு சாமாவையர் வீட்டிற்கு வந்தார். உடனே லலிதா ஓடிப்போய், "அப்பா! அப்பா! அம்மா நேக்கு ஸில்க்கு வாங்கியிருக்காப்பா!" என்று கட்டிக்கொண்டாள். உடனே சாமாவையருக்கு அடிவயிற்றில் இடிவிழுந்தாற்ப் போலிருந்தது. குழந்தையை வாரிஎடுத்துக்கொண்டு, ஈஸிசேரில் போய் சாய்ந்துகொண்டார். அவருடைய மனது பலவிதத்திலும் மிகுந்த குழப்பத்தை யடைந்தது. "ஆ! என்னே என் தலைவிதி! குடும்பத்தின் நிலைமையையும் புருஷனுடைய வருத்தத்தையும் அறியாத பேதையா யிருக்கின்றாளே! கொண்டவன் குறிப்பறிந்து நடப்பதல்லவா பெண்களுக்கு அழகு. நம்முடையநிலைமை தெரியாமல், அளவிற்குமீறிய ஆசையை வைத்து, என்னைப் பலவிதத்திலும் துன்பத்திற் காளாக்குகின்றாளே! ஏதாவது சொல்லப்போனால், அதைக் குற்றமாக எடுத்துக்கொண்டு கோபித்துகொண்டு விடுகின்றாள். அவள்மீதிருக்கும் உண்மையான அன்பே அதிகம் சொல்லமுடியவில்லை. அவளும் என்மீது மிகுந்த அன்பு வைத்திருப்பது தெரிகின்றது. ஆனால் அவளுடைய குணம் மட்டும் ஒரு அளவுக்குக் கட்டுப்படாமல் என்னை சஞ்சலத்





திற்குள்ளாக்குகின்றது," என்று பற்பல விதமாக சிந்தித்துக் கொண்டிருக்கும் தருணம், பங்கஜம் கையில் காப்பியை ஏந்தியவண்ணம் வந்துநின்றாள்.

உடனே, "என்ன,குழந்தை கூறியதைக் கேட்டவுடன் உங்களுக்கு மிக்கவருத்தம் உண்டாய்விட்டது போலிருக்கிறது," என்று கூறித் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். சாமாவையர், யோஜனையினின்றும் திடுக்கிட்டுவிழித்து, "ஆ! அப்படியொன்றுமில்லை. உன்னிஷ்டப்படி யெல்லாம் நானாகவே வாங்கிக்கொடுக்க நமக்கு சக்தி யில்லையே என்றுதான் யோஜனையாயிருந்தேன். நீ ஒன்று செய்துகொண்டால் அது சந்தோஷமேயொழிய எனக்கு அகங்காரமா? என்கையில் பணமில்லாத தோஷம்தான். சம்பளத்தை வாங்கி உன் கையில் 25 ரூபாயையும் கொடுத்துவிடுகின்றேன். சகல விஷயங்களையும் நீயே கவனித்துக் கொள்ளேன்," என்று கூறவே பங்கஜத்தின்முகம் மலர்ந்தது. அன்றுமுதல் சில நாட்கள்வரையிலும் தம்பதிகளுக்குள் மிகுந்த அன்னியோன்னிய வாழ்வு நடைபெற்றது. சாமாவையர், "ஆ! நம்மனைவி, உள்ளதைக்கொண்டு திருப்தியடையும் சுபாவமுடையவளாயிருந்தால், எனது எளிய குடும்பவாழ்வும் மிக்க இனியதாகவே போய்விடுமே! ஈசா, எனது மனைவியின்மனது இப்பொழுதிருக்கும் நிலைமையிலேயே எப்பொழுதும் வைப்பாய், நடுவில் ஏதாவது பேராசையைக் கிளறிவிடாமல் என்னைக் காப்பாற்றுவாய்," என்று நினைத்தவாரே வேலைக்குச் சென்றார்.

அன்றையதினம் பங்கஜத்துக்கு அவள் பிறந்தவீட்டினின்றும் மஞ்சள் தடவிய ஓர் கடிதத்தைத் தபால்காரன் கொண்டுவந்து கொடுத்தான். அதில், அவள் அண்ணன் மகளுக்கு விவாகம் என்றதைப் படித்தவுடன் மிக்க சந்தோஷித்தாள். ஆனால் நிமிஷத்தில் துயரம் குடிகொண்டது. கல்யாணத்துக்குப் போவதென்றால் காதில் கம்மல் நன்றாயில்லையே, மற்ற நகைகளாவது சுமாராய் இருக்கின்றன. முகத்திற்கழகு கம்மல் அல்லவா? எப்படியாவது கடன்பட்டாவது கம்மல் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தாள். அடுத்தவீட்டுக் கமலத்தின் மூலமாக ஒரு வியாபாரியிடமிருந்து ரங்கூன் கமலத்தில் 20 ரூபாய்க்கு ஒருதோடுவாங்கி வந்துவிட்டாள். சாயந்திரம் சாமாவையர் வந்தவுடன் என்றும் காணாத குதூகலத்துடனிருந்தாள். இதைக் கண்ட சாமாவையருக்கு இன்று ஏதோவிஷயம் நடந்திருக்கிறதென்று பட்டது. பங்கஜம் சிரித்த முகத்துடன், கல்யாணப் பத்திரிகையையும், காப்பியையும் எடுத்து வந்தாள். அவர் "என்றும் இவள்முகம் இப்படியே இருக்கக் கூடாதா?" வென்று நினைத்தார். காப்பி சாப்பிட்டானவுடன், பத்திரிகையைப் படித்து விஷயத்தையறிந்து கொண்டார். ரயில்சிலவிற்கு என்ன செய்வதென்று யோஜித்துக்கொண்டிருக்கும் பொழுது, காதுக் கம்மலை எடுத்துவந்து காண்பித்து, எப்படியாவது தனக்கு அதை வாங்கிப் போட்டாலொழிய, அண்ணன் பெண் விவாகத்துக்குப் போகமாட்டேனென்று பிடிவாதம் செய்தாள். உடனே அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. வீணில் வளர்த்துவானேன். அவள் இஷ்டப்படியே கம்மலும் வாங்கியாய்விட்டது. கல்யாணத்திற்கும் போய்விட்டு வந்தாய்விட்டது. அதுமுதல்

பங்கஜத்தின்முகம் பங்கஜத்தைப் போலவே மலர்ந்திருந்ததென்று நாம் கூற வேண்டியதில்லை.

நாட்கள் பல ஓடிச்சென்று மாதங்களும் பல ஆயின. சாமாவையர் கடன் உபத்திரவமும் பலமாகப் பெருகிற்று. ஒருநாள் அவர் இதற்கு ஓர் வழிசெய்ய வேண்டுமென்று நீண்டநேரம் ஆலோசனை செய்த பிற்பாடு கடைசியில் ஓர் முடிவிற்கு வந்தார்.

அன்றையதினம் இரவு 7மணி ஆயிற்று. வழக்கமாக மாலை 5 மணிக்கே வரும் சாமாவையர் அதுவரையிலும் வராதது அவளுக்கு மிகுந்த மனக்கவலையை உண்டாக்கியது. 8ம் அடித்தது. மனது பதறவாரம்பித்தது. 9ம் ஆகி 10 மணியும் அடித்துவிட்டது. அதற்குமேல் அவளால் பொறுக்கமுடியாத வேதனையும் பதைபதைப்பும் உண்டாகி வாயிலிற்கும் உள்ளுக்குமாக நடந்தாள். மணி 11 ஆனவுடன் சொல்லமுடியா திகிலும் குழப்பமுமாகவே, தன்னையுமறியாமல் ஓ வென்று அலற ஆரம்பித்துவிட்டாள். அவள் அழுவதைக்கண்ட குழந்தைகளும் பிரமாதமாக அலற ஆரம்பித்து விட்டார்கள். இந்த இரைச்சலைக் கேட்ட, அடுத்த வீட்டுக் கமலமும் ஓடிவந்து விஷயத்தை அறிந்துகொண்டு, தானும் கண்ணீருகுத்தாள். கமலத்தின் புருஷன் ஓடிவந்து எல்லோரையும் சமாதானம்செய்து 'நான் போய் எங்கேயாவது தேடிப்பிடித்து அழைத்துக்கொண்டு வருகிறேன்,' என்று கூறிக்கொண்டிருந்தார்.

அத்தருணம் வாசலில் ஒரு வண்டிவந்து நின்றது. அதிலிருந்து இருவர் இறங்கி சாமாவையரைத் தூக்கிக்கொண்டுவந்து, உள்ளே கட்டிலில் கிடத்தினார்கள். உடனே பங்கஜம் தன்னையுமறியாது ஓ! வென்று கதறிக்கொண்டு அவர் அருகில் ஓடினாள். உடனே, அவ்விருவரும், "அவருக் கொன்றுமில்லை யம்மா! தற்கொலை செய்துகொள்ளும்பொருட்டு, தூக்குப் போட்டுக்கொண்டார். தற்செயலாக நாங்கள் அவரைப் பார்த்தோம். உடனே தூக்கிலிருந்து அவரை விடுவித்து விட்டோம். நாங்கள் அவருடைய நண்பர்கள். இன்னும் அரைமணிநேரம் சென்றால் கண் விழித்துக்கொண்டு விடுவார்," என்று சமாதானம் கூறவே, எல்லோரும் மௌனமாக இருந்தார்கள்.

அரைமணிக்குப் பிறகு சாமாவையர் கண்விழித்தார். இவ்விருவரையும் கண்டவுடன், "ஆ! கடன்காரர்களா நீங்கள்! கடன்இம்சை பொறுக்கமுடியாமல் தான் தூக்கிலிட்டுக் கொண்டேனே! இங்கும் வந்துவிட்டீர்களா, பாவிகள்" என்று பிதற்றினார். உடனே எல்லோருக்கும் அவர் தூக்கிட்டுக்கொண்டவிஷயம் செவ்வனே விளங்கிற்று.

சீக்கிரத்தில் அவருடைய உடம்பும் குணமடைந்தது. பங்கஜம், அந்த சம்பவத்திலிருந்து, தன்னுடைய குணத்தையே மாற்றிவிட்டாள். கம்மலைவிற்றுக் கடனை அடைத்தாள். ஏற்கனவே இருந்த தனது கம்மலையும், நகைகளையும் அணிந்து திருப்தி அடைந்தாள். வரவுக்குத் தகுந்த செலவு செய்து இன்பமயமாக இல்வாழ்வை நடத்தினாள். குடும்பத்தில், இன்பமடைவதும், துன்பமடைவதும் ஸ்திரீகளால்தான் என்று கூறி ஐயர் மகிழ்ந்தார். ஆனால், "நானும் எனது நண்பர்களும் சேர்ந்து, நான் தூக்கிலிட்டுக் கொண்டதாக நடித்த பொய் நாடகத்திற்குமட்டும் என்னை மன்னித்துவிடு" என்று பங்கஜத்தை சாமாவையர் வெகுவாகக் கேட்டுக் கொண்டார். அவளும் "உங்களால்தான் நான் பெரும்புத்தியை அடைந்தேன்" என்று பணித்தாள்.



# பூஞ்சோலை

'சந்திரிகா'

தேனிறையும் நன்மலர்கள் திரளாகப் பரவிடும்
தீங்கனி நிறை சோலையில்
வானுயர ஓங்கியே வரிசையாய் அமைந்திடும்
வண்ணமலர் நன்மரங்கள்
பானுவின் ஒளியினால் பரிதவித்தேங்கியே
பரிவுடன் வந்து சேரும்
மானிடரின் அயர் வொழிய இனிய கனிகள்தனை
மகிழ்வுடன் தந்து மேலும்
மேனியின் துயர் நீங்க இனியதென்றல் தனை
மேவிலைகளால் வீசியே
கானினில் திகழும் நல் கற்பகத்தருவெனக்
கண்டோர் வியந்திடுவரே!
வானின் கீழ் வளருமிப் பரந்த நல்லுலகினில்
வாழ்கின்ற பேதை மக்காள்!
தான தருமம் பலவும் செய்து சீரோங்கிடும்
தாவரத்தை தழுவுவீர்.

# ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி

"கண்ணன்"

ஆந்திரதேசம் கலை, சிற்பம், சாஸ்திரம், வாணிபம் முதலிய எல்லாவற்றிலும் பெருமை படைத்துள்ளது. விஜயநகர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தவர்களும், அதன் பெருமையை உலகறியச் செய்ததும் ஆந்திர மக்களின் மகிமையே. இன்றும் ஆந்திரர்கள் தாங்கள் தேச பக்தியில் மற்ற மாகாணங்களுக்குச் சற்றும் பின்னடைந்தவர்களில்லை யென்பதை கிரியாம்சையில் யாவருமறியச் செய்து காட்டியிருக்கிறார்கள். ஆந்திர தேசம் பல தேச பக்த சிங்கங்களை நம் நாட்டுக்கு நல்கியிருக்கிறது. அது மட்டுமல்ல. பாரத மாதாவைப் பிணித்திருக்கும் அடிமை விலங்கை அறுக்க தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் குதூஹலத்துடன் தியாகம் செய்து சுதந்திரப் போரில் இறங்கி சர்க்காரின் தடியடிகளையும், இதர தண்டனைகளையும் புன்முறுவலோடு ஏற்று, அநுபவித்து, மென்மேலும் தேச சேவையில் ஆர்வ மிக்கவர்களாகவே இருக்கும் பல மாதுசிரோன்மணிகளையும் ஆந்திர நாடு நமக்களித்திருக்கிறது. ஆந்திர தேசிய ரத்னங்களில் ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி தலைசிறந்து விளங்குகிறார்.

## இளமை


ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதியின் இளமைப் பருவம் அவ்வளவு விசேஷங்கள் நிறைந்ததல்ல. அவரது தாய் தந்தையர் நல்ல உயர் குடியில் பிறந்தவர்கள். இருவரும், நல்லொழுக்கம், நற்சகவாசம் முதலிய நற்குணங்கள் மிகுந்து விளங்கினார்கள். குறிப்பாக ருக்மணி லக்ஷ்மிபதியினிடத்தில் பெற்றோருக்கு அதிகப் பிரியமுண்டு. "விளையும் பயிர் முளையிலே" என்பதற்கிணங்க ருக்மணி சிறுவயதிலேயே மிகுந்த புத்தி கூர்மையுள்ளவர்களாயிருந்தமையைக் கண்டு அவரது பெற்றோர்களும், சுற்றத்தார்களும், மற்றும் அவ்வூர் ஜனங்களும் ஆச்சர்யப்படுவதுண்டு. அவர் மிகுந்த அன்புடன் வளர்க்கப்பட்டு செல்லமாக வளர்ந்து வந்தார்.

காலா காலத்தில் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். பெண் கல்விக்கு இப்பொழுதே எவ்வளவோ தடைகளிருக்கின்றன. அவரது இளவயது சமயம் ஸ்திரீகளுக்கு கல்வி அவசியமே யில்லை என்று நினைக்கப்பட்டு வந்தது. நமது ருக்மணியோ கல்வியில் ஆரம்ப முதலே மிகுந்த ஆர்வமும் ஊக்கமும் காட்டி வந்தார். வகுப்புகளில் ஆண் மாணவர்களைவிட பல தடவைகளில் ருக்மணி சாமர்த்தியசாலி யென்பதை தன் கூரிய அறிவால் பரீட்சைகளில் கேள்விகளுக்குப் பதில் எழுதுவதன் மூலமும், சொல்லுவதின் மூலமும் காட்டி வந்தார். அவரது திறமையைக் கண்டு சகமாணவர்களும், உபாத்தியாயர்களும் அவரிடத்து நல்ல மதிப்பு வைத்திருந்தார்கள். தனது சிறுவயதிலேயே மெட்ரிகுலேஷன் பரீட்சையில் கௌரவமான மார்க்குகள் பெற்றுத் தேறினார்.

ஸ்ரீமதி ருக்மணிக்கு உயர்தரப்படிப்புக்குப் போகவேண்டுமென்று ரொம்பவும் அவாவாக இருந்தது. இச்சமயத்திலும் சிலர் பெண்களுக்குச் சலாசாலைக்



ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி,
(சென்னை அசெம்பிளி உபதலைவர்.)



ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்.
(இந்தியாவில் முதல் ஸ்திரீ மந்திரி இவரே. ஐக்கிய மாகாண மந்திரி சபையில் இவர் ஒருவர். பண்டித ஜவஹரின் சகோதரி.)

கல்வி கற்று அனுபவம் என்றும், பட்டதாரிப் பெண்கள் குடும்பத்துக்கு லாயக்காக மாட்டார்கள் என்றும், அவர்களது ஒழுக்கமும் குன்றிவிடும் என்று கூறி ருக்மணியை உயர்தரப்படிப்புக்கு அனுப்பக் கூடாதென்று ஆட்சேபித்தனர். ஆனால் ருக்மணியின் பிடிவாதம் இப்பேர்ப்பட்ட இடைஞ்சல்களைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. எப்படியாவது பி.ஏ., பட்டம் பெற்றுவிடுவது என்று முடிவு செய்து தன் லக்ஷியத்தையும் நிறைவேற்றி விட்டார். தனது விடாமுயற்சியினாலும், தளரா ஊக்கத்தினாலுமே அவர் பி.ஏ., பட்டம் பெற்ருர்.

## விவாஹம்

ஸ்ரீமதி ருக்மணிக்கு தனது சிறுவயது முதற்கொண்டே சமூக சீர்திருத்தத்தில் மிகுந்த ஆர்வமுண்டு. அவர் டாக்டர் லக்ஷ்மிபதி அவர்களை மனப்பூர்வமாகக் காதலித்து மணம் செய்து கொண்டார்கள். டாக்டர் அவர்களும் சிறந்த சீர்திருத்தவாதி. சமூக விஷயங்களில் மிகுந்து கிடக்கும் ஊழல்களை அறவே களைந்து எரிய வேண்டுமென்ற லக்ஷ்யத்தை டாக்டரும் பரிபூரணமாக ஆதரிப்பவர். இவர் சிறந்த ஆயுர்வேத டாக்டர். தவிர ஆவடியில் வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துவதற்காக ஒரு அழகிய "ஆஸ்ரமத்தையும்" (Sanatorium) ஏற்படுத்தி குன்மம் முதலிய வியாதியஸ்தர்களைக் குறைந்த சார்ஜில் சிறந்த வைத்திய உதவியளித்து குணப்படுத்தி வருகிருர். தேகாரோக்யத்தை விரும்புபவர்கள் ஒரு சில நாட்கள் ஆவடி ஆஸ்ரமத்தில் தங்கி இருப்பது நல்லது. டாக்டர் ஸ்ரீமதி ருக்மணிக்கு ஒத்த கணவராகவும், அவர் செய்யும் சகல பொதுக்காரியங்களுக்கும் தன்னாலியன்ற சேவையும், உதவியும், ஆதரவும் அளித்து போதிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் மனமுவந்து அளித்து வந்தார். தேசிய வேலையிலீடுபட்ட பலர் அவர் வீட்டுக்கு அடிக்கடி வந்து பலவித உதவிகள் பெற்றிருக்கிருர்கள். அவர்களுக்கு வேண்டியவைகளை டாக்டரும் ருக்மணியும் தங்களாலியன்றளவு கொடுத்து ஆதரித்து வந்திருக்கிருர்கள். இதைப்பற்றி டாக்டர் தன் மனைவியின் சுதந்திரத்தில் தலையிடுவது கிடையாது. பொருள் விரயமாகிறது என்பதாக அவர் நினைப்பதும் கிடையாது.

மேலும் டாக்டர் ஸ்திரீ புருஷர்களின் தேகப்பயிற்சியின் முன்னேற்றத்தில் அதிக கவலை காட்டி வருகிருர். தேகப் பயிற்சி மகாநாடுகள் கூட்டியிருக்கிருர். இருபாலாரும் போதிய தேகப்பயிற்சி எடுத்துக்கொள்ளுதல் மிக அவசியம் என்று எடுத்துக்காட்டி தன் இல்லத்திலும் தன் குமாரிகளும், குமாரர்களும் திடகாத்திரர்களாக இருக்கும் வழியில் பழக்கி வருகிருர். சதிபதிகள் இருவரும் மிகவும் அன்யோன்யமாய் குடும்ப வாழ்க்கையை நடத்திவருகிருர்கள். அவர்களுக்கு மூன்று புத்திரிகளும், இரு புத்திரர்களுமிருக்கிருர்கள்.

## பொது சேவை

ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதியம்மையாரின் பொதுச்சேவை பலதிறப்பட்டது. ஆதி முதலே இந்தியாவின் முன்னேற்றம் இந்நாட்டு வாலிபர்களிடம்தான் இருக்கிறது என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். சென்னையில் வாலிபர் சங்கத்தை நிருவி அதன் தலைவராகவும் இருந்து யுவ, யுவதிகளிடத்தில் சமூக சேவையின் அவசியத்

தைப் பற்றிப்பேசி அவர்களை அப்பணியில் ஈடுபடும்படி தூண்டினர். சென்னை வாலிபர் சங்கம் (Madras City Youth League) அவரது தலைமையில் சேரி முன்னேற்றத்துக்காக மெச்சத்தக்க வழியில் சேவை செய்திருக்கிறது. இவ்வேலையில் இவருக்கு ஸ்ரீமதி எல். கிருஷ்ணபாய் B.A. யும், ஸ்ரீமதி ராஜன் சரோஜினி B.A. (Hons)ம் வேண்டிய உதவியளித்து உழைத்து வந்தார்கள். சென்னையில் ஒரு வாலிபர் மஹாநாட்டையும் 1927ம் வருஷம் கூட்டிவைத்தார்கள். அதற்கு சாது வாஸ்வானி தலைமை வகித்தார். சாண்டோ ராமமூர்த்தியும் அதன் நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். சென்னை மாணவர்களிடையும், யுவ, யுவதிகளிடையும் தேசபக்தியும், பொதுநல ஊழியத்தில் ஆர்வத்தையும் உண்டாக்கிய முக்கியஸ்தர்களுள் ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதியும் ஒருவர் என்பது யாவரும் அறிந்ததே. யுவ, யுவதிகள் அவரை "தாய், தாய்" (Madam) என்றே அழைப்பார்கள். ஜாதி மத, ஏழை பணக்காரர் என்ற வித்யாசம் சிறிதுமின்றி அவர் எல்லோரிடத்திலும் மிகுந்த மரியாதையுடனும், அன்புடனும் பேசுவார்கள். கோபத்துக்கும், அகங்காரத்துக்கும் இவருக்கும் வெகு தூரம். எந்த சமயத்திலும், எல்லோருடனும் இனிமையாகவே சம்பாஷிப்பார். இதனால் இவரின் தலைமையில் வேலை செய்யும் தொண்டர்கள் தங்கள் பணியில் மிகுந்த ஊக்கம் காட்டினார்கள். தானே சாயங்காலங்களில் சேரிகளுக்குச் சென்று அங்கு வசிக்கும் ஏழைகளுக்கு சுகாதாரம் முதலிய விஷயங்களைப் பற்றி தெளிவாக எடுத்துக் கூறுவார். அவர்களுடன் கர்வம் சற்றுமின்றி பேசிப்பழகுவார்.

## இந்திய மாதர் சங்கம்

சென்னை இந்திய மாதர் சங்க வேலையிலும் ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி பங்கெடுத்துக் கொண்டார். ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டிக்கு வேண்டிய உதவிகளைத் தன்னாலியன்றமட்டும் செய்து மேற்படி சங்க வளர்ச்சியில் கவனம் செலுத்தி வந்தார். அதன் நிர்வாக சபையிலும் அங்கத்தினராகப்பல வருஷங்கள் இருந்து சேவை செய்து வந்தார். மாதர் முன்னேற்றம் அடைய பெண் கல்வி பரவ வேண்டுமென்பது இவர் கருத்து.

## அரசியல்

சமூக சேவைகளைவிட அரசியலிலேயே ருக்மணி லக்ஷ்மிபதியின் நாட்டம் அதிகம் சென்றது. முதன் முதலாக இவர் சென்னையில் 1927ம் வருஷம் நடைபெற்ற காங்கிரஸில் பகிரங்கமாகச் சேர்ந்து உழைக்க முன்வந்தார். அக் காங்கிரஸ் மகாசபை வெற்றிகரமாக நடைபெறுவதற்காக பல கமிட்டிகள் ஏற்படுத்தப் பட்டன. அவைகள் சிலவற்றில் ஸ்ரீமதி ருக்மணி அங்கம் வகித்து தனக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட வேலைகளைத் திறம்படச் செய்து சக ஊழியர்களின் நன்மதிப்பையும், தலைவர்களின் மெச்சுதலையும் அடைந்தார். காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கு சில நாட்களுக்கு முன்னும், சபை நடைபெற்ற பொழுதும் பலநாட்கள், சரியான ஆகாரமும், ஓய்வும் இன்றி பல மணி நேரங்கள் தளர்ச்சியின்றி காரியத்திலேயே கண்ணாக இருந்து உழைத்தார்.

அது முதலே காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இவரது வீரமும், தியாகப்பெருமையும் மஹாத்மா காந்தி





யடிகளால் 1930-ம் வருஷம் நடத்தப்பட்ட உப்பு சத்யாக்ரஹத்தின்போது வெளிப்பட்டன. வேதாரண்யத்தில் திரு. ஸி. ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் சத்யாக்ரஹம் நடந்தபோது ஸ்ரீமதி ருக்மணியும் அதில் சேர்ந்தார். போலீசாரின் அடக்கு முறையின் உக்ரம் அவரது ஊக்கத்தையும், தைர்யத்தையும் சற்றும் தளர்த்த முடியவில்லை. அவர் காட்டிய வீரத்தை அங்கு கண்ணாரக்கண்ட பலதொண்டர்களும், பொதுமக்களும் இன்றும் கௌரவம் அடைகிறார்கள். இந்த உப்பு சத்யாக்ரஹத்தின் நிமித்தமாக இந்தியாவிலேயே முதன் முதலாகக்கைதியாக்கப்பட்ட ஸ்திரீ ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதியே. சர்க்காரால் சட்டமீறியதற்காக ஒரு வருஷசிறை தண்டனை விதிக்கப்பட்டு அதை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார். மறுமுறையும் சிறை சென்றார். சிறைச்சாலையைத் தவச்சாலையாகவே ருக்மணி கருதினார்கள்.

பின்னர் சட்டமறுப்பு நிறுத்தப்பட்டது. ஆனால் ஸ்ரீமதி ருக்மணி துயர்ந்து காங்கிரஸ் சேவையிலீடுபட்டு வந்தார். அவரது தியாகத்தைத் தமிழ் நாடு போற்றியது. அவரிடம் ஆந்திர தமிழ் வித்தியாசம் கிடையாது. எங்கும் சேவை செய்ய வேண்டுமென்பதே அவர் நோக்கம். 'மாகாணத் தற்புகழ்ச்சி' யென்பது சற்றும் இல்லை. எனவே தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் சாதாரண அங்கத்தினராகவும், காரியக்கமிட்டி அங்கத்தினராகவும், உபகாரியதரிசி, காரியதரிசி என்ற ஹோதாவிலும், கடைசியில் அக்கிராசனராகவும் இருந்து காங்கிரஸ் தொண்டாற்றி வந்தார். தமிழ் நாட்டில் நடைபெற்ற அநேக ஜில்லா, தாலுகா, கிராம மஹாநாடுகளில் அக்கிராசனராகவும், திறப்பாளராகவும், கொடி யேற்றுபவராயும் தேர்ந்து எடுக்கப்பட்டு ஊக்கமூட்டும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி மக்களிடை தேசபக்தியை உண்டாக்கியும், அவர்களுக்குப் புத்துயிரும் அளித்து மிருக்கிறார்கள்.

## சட்டசபை


காங்கிரஸ் மஹாசபை ஸ்தலஸ்தாபனங்களையும், சட்டசபைகளையும் கைப்பற்ற வேண்டுமென்று தீர்மானித்தவுடன் சென்னைச் சட்டசபைக்கு சென்னை நகரத்தில் நடந்த உபதேர்தலில் காங்கிரஸ் சார்பாக நின்று பெரு மிதவோட்டுகள் பெற்று வெற்றி பெற்றார். சட்ட சபையில் சர்க்காரைத் தாக்கிப் பேசுவதில் சற்றும் தயங்குவதில்லை. அவர்களின் மனப்பான்மை அடியோடு மாறவேண்டுமென்று ஜஸ்டிஸ் மந்திரிகளுக்கும், சர்க்கார் நிர்வாஹ அங்கத்தினர்களுக்கும் நேருக்கு நேராக சட்டசபையில் சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போதெல்லாம் ஸ்பஷ்டமாகப் பேசி வந்தார். சர்க்காரின் தவறுதல்களை கேள்விகள், உபகேள்விகள் மூலமாயும், கண்டனத் தீர்மானங்கள், வெட்டுப் பிரேரணைகள் மூலமாயும் எடுத்துக் காட்டிவந்தார்.

சென்னை நகர சபைக்குப் புதிய சட்டப்படி தேர்தல் சென்ற வருஷம் நடைபெற்றபொழுது ஜஸ்டிஸ் கட்சியின் தூண் போன்றவரும், எழும்பூர் டிவிஷன் முடிசூடா மன்னன் என்றும் கருதப்பட்டு வந்த திரு. டி. சுந்தரராவ் நாயுடுவை முறியடித்து வெற்றி பெற்று நகரசபை அங்கத்தினராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். இத்தேர்தல் சமயத்தில் இவருக்கு உயிருக்

ருக்கூட ஆபத்து நேரிடுமோ என்று பயப்பட்டார்கள். ஆனால் ஸ்ரீமதி ருக்மணி மனமது கலங்காமல் தைர்யமாக நின்று வெற்றிக்கொடியை நாட்டினர்.

மறுபடியும் புதிய சீர்திருத்தத்தின்படி மாகாண சட்டசபைகளுக்கு இவ்வருஷம் பிப்ரவரி மாதத்தில் தேர்தல் நடை பெற்றன. சம்மாகாணத்திலும் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிட்டது. ஸ்ரீமதி ருக்மணி நகர ஸ்திரீகள் பொதுத்தொகுதிக்குக் காங்கிரஸின் சார்பாக நிறுத்தப்பட்டார். இவருக்குப் போட்டியாக ஸ்ரீமதி அலமேலு மங்கைத்தாயார் அம்மாள் நின்று தோற்றார். ருக்மணி வெற்றி பெற்றார். ஓட்டுகளும் பெருமிதமாக ருக்மணி லக்ஷ்மிபதிக்குக் கொடுக்கப்பட்டன. இதனின்றும் பொது மக்களின் அன்பை இவர் எவ்வளவு அதிகம் பெற்றிருக்கிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகிறது. சென்னை சட்டசபையின் (Madras Legislative Assembly) உப அக்கிராசனராகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார். இவரது திறமைக்கும், சேவைக்கும் இது ஒரு பிரமாதமல்ல. எந்த கௌரவமான உத்தியோகத்தையும் சாமர்த்தியமாகவும், கண்ணியமாகவும் நிர்வஹிக்கும் யோக்யதையும், புத்திசாதுர்யமும் ஸ்ரீமதி லக்ஷ்மிபதியிடத்திலிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அவரது எளிய நடை, உடை பாவனைகள் எந்த தொண்டரின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும். இவ்வளவு தேச சேவை செய்தும், உன்னத ஸ்தானங்களிலிருந்தும் சற்றுக்கூட. கர்வமில்லாதும், தற்பெருமை யில்லாதும் ஸ்ரீமதி ருக்மணி இருப்பதைக் கண்டு யார்தான் ஆச்சர்யப் படமாட்டார்கள்? யான் அவரைக்கண்டு பேசும் சமயம் "யான் என்ன செய்து விட்டேன், ஒன்றுமில்லையே, நான் என்ன பிரமாதப் பெரிய மனுஷி; செய்ய வேண்டியது எவ்வளவோ பாக்கியிருக்கிறதே" என்று கூறுகிராரென்றால் அவரது எளிய தன்மையின் தூய்மையை என்னென்று சொல்வது. தனது உடைகளிலும் சாதாரணமாகவே இருக்கிறார். எளிய வாழ்க்கையையும் உயர்ந்த நோக்கத்தையும் கடைப்பிடித்து சேவைபுரியும் உத்தம ஸ்திரீ ரத்னங்களிலொருவராகிய ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி மென்மேலும் தேச சேவை செய்யும்படி பராசக்தி அவருக்கு நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும், ஆற்றலும் அருளுவாளாக.



ரஜபுத்ர மங்கை

# ஆத்மகௌரவம்

### ஸ்ரீமதி எஸ். நாகலக்ஷ்மி

"ஸ்வஸ்தான வேஷபாஷாபி மதாஹ் சந்தஹ" என்றபடிக்கு அறிவாளிகள் தங்கள் தாய்நாட்டின்மீதும், தாய் பாஷை மீதும், சுதேச ஆடைகள்மீதும் அத்தியந்த அன்புகொண்டிருப்பார்கள். ஐரோப்பாவைப் பாருங்கள். அது ஒரு பெரிய கண்டம். அந்த பரந்த நிலத்திலுள்ள ஒரு ஐரோப்பிய மாதாவது தன் நாட்டுப் பழக்க வழக்க, ஆடை ஆபரணங்கள், பாஷைகளைவிட்டு நம் தேச ஆசாரங்களைப்பின்பற்றுகிறாளா? நம் அறிவு எங்கே? நாம்தான் யாராவது ஒருவர் நவநாகரிகம் என்று எண்ணி மேல்நாட்டு முறைகளைப் பின்பற்றினால் உடனே கண் மூடித்தனமாய் எல்லோரும் பின்பற்றுகிறோம். நம் நாட்டு நாகரிகம் மிகப்பழமையானது, பெருமையானது, உன்னதமானது என்று வானளாவப் பேசிப் புகழ்கிறோம். கூட்டத்தில்கூடி நின்று கூவிப் பிதற்றுகிறோம். ஆனால் நாட்டத்தில் கொள்வதில்லை. பேசிவிட்டு பிறதேசத்தாரின் நாகரீகத்தைக் கடைப்பிடித்து அதில் வெட்கம் அடையாமல் பெருமைவேறு அடைகிறோம். நம் இந்தியர்கள் இவ்வளவு தாழ்ந்த நிலையடைந்திருப்பதை சற்றே கவனியுங்கள்! இப்படி நாமே கண்களிருந்தும் குட்டுச்சுவரில் மோதிக்கொண்டால் எந்தத் தெய்வம் தான் நம்மைக் கைதூக்கி விடும். நாம் மெத்த அலட்சியமான வாழ்க்கை நடத்துகிறோம். குறிப்பாக ஆங்கிலக்கல்வி ஓரிருபடி ஏறிவிட்டதாக நினைக்கும் பல ஆடவர்களும், பெண்பாலர்களும் தங்களை லண்டனிலிருந்து வந்தவர்கள் போல் நினைத்துக்கொள்ளுகிறார்கள். அதைக் காணும்போது மனம் பதறுகிறது.

நாம் பலதேசமாகாண மக்களின் நடை உடை பாவனைகளைப் பின்பற்றுகிறோமே; அது நமது சுயமரியாதைக்கும், சுயகௌரவத்துக்கும் அழகா? அதிலும் நம் கற்புடைய மங்கையரைப் பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. "நம் நாட்டு மங்கையரும் அன்னிய ஆடையணிந்து, அன்னியரின் நாகரிகத்தில் அமிழ்ந்து போவதா" என்று நினைக்கும்போதே என்னெஞ்சம் குமுறுகிறது.

நாம் பரதேச உடையை பரதேச நடையில் அணிந்து கொள்வதும், பரபாஷையில் பேசுவதும் பெருமை என்று நினைத்துக் கொள்ளுகிறோம். இவைகளை மாற்றியவர்கள் ஏன் உங்கள் தாய்தந்தையரின் பேரையும், மூதாதையரின் பெயர்களையும் கூடமாற்றக்கூடாது. "அடபாவமே!" என்று சொல்லுகிறீர்கள். ஏனோ, இது செய்பவர்கள் அதையும் ஏன் செய்யமாட்டார்கள்! நாம் நம்முன்னோர்களின் நாகரிகத்தின் உண்மையான பெருமையை நன்கு உணராமல் தேங்காயில் பருப்பை விட்டெறிந்துவிட்டு செரட்டையை வைத்துக்கொண்டு கலங்கி, எது நல்லது, எது கெட்டது என்று தெரியாமல் வெள்ளாடு போல் ஒருவர் செய்தால் அதையே மற்றவரும் கண்மூடித்தனமாய் செய்து வருகிறோம். இதைப் பச்சையாய் சொல்லப் போனால் அநேகருக்குப் பிடிப்பது கிடையாது. சொல்லாமல் அவர்கள் திருந்த

வும் முடியாது. இந்த அந்நிய நாகரிகத்தை நாம் பின்பற்றுவதால் நம்தேசத்தின் பொருள் எவ்வளவு அதிகம் வெளி நாடுகளுக்குச்செல்லுகின்றது என்று உங்களுக்குத் தெரியுமா? சொக்கத்தங்கம் நாட்டை விட்டுத் தினம் தினம் பறந்து செல்லுகிறது. அதற்குப் பதிலாகக் கண்களை மயக்கும் வெறும் பகட்டுப்பொருள்கள் வருகின்றன. எவ்வளவு காலம் இந்த ஏமாற்ற வியாபாரத்தில் இளிச்சவாயர்களாய் இருக்கப்போகிறோம்?

மேல்நாட்டில் அநேகமாக உடைகளில்லாமலும் இருக்கிறார்கள். அங்கு உடையே இல்லாதவர்களும் இருக்கிறார்கள் என்று நான் சொன்னால் நீங்கள் நம்பக்கூடமாட்டீர்கள். திகைத்துவிடுவீர்கள்! புத்தி, மனம், பஞ்சேந்திரியங்களும் எப்பொழுதும் மாறிவருகின்றன. அவைகள் ஒரு நிலைப்படவில்லை. அவைகள் யஜமானனுக்கு அடங்காத குதிரைபோன்றவை. நீங்கள் அவைகளைக் கடிவாளம் போட்டு கெட்டியாய்ப்பிடித்து இழுத்து வைத்தாலும் அவைகள் தங்களிச்சைப்படியே சுற்றி வருகின்றன. எவ்வளவு கற்றறிந்தவர்களுக்கும், வேத வேதாந்த விசாரணை செய்து தேர்ந்தவர்கட்கும், மனதையும், புத்தியையும் ஒருநிலைப்படுத்தி, பஞ்சேந்திரியங்களையும் அடக்கி பகவானின் மீது கருத்தைச் செலுத்துவது வெகுகடினமாக இருக்கிறது. நம் மனமானது ஊசலாடிக்கொண்டிருக்கிறது. மனதை மாற்றவே நாம் சில மாறுதல்களைக் கைகொள்ளுகிறோம். வெளி வேஷங்களினால் உண்மையான பலன் எதுவும் உண்டாகப் போவதில்லை. வெளி வேஷங்கள் எப்படியிருந்தாலும் மனம் நல்லதாயிருக்கவேண்டும். வெளிப்பகட்டுகள் மட்டுமிருந்து உள்ளொளி மட்டுமில்லையானால் நாம் நம்மையே ஏமாற்றிக்கொண்டு ஆத்ம துரோகம் செய்தவர்களாகிறோம் என்பது முக்காலும் உண்மை. பரதேச உடையையும், நடையையும் பின்பற்றுவது மகா கேவலமானது. நம் நாட்டு உடையணிந்து, நம் தாய்பாஷையில் அன்பு கொண்டு, நடப்பதே ஆத்ம கௌரவமும், சுயமரியாதையுமாகும்.

அதை விட்டு அவமே கண்டவர்களிடம் நம் நங்கையர் கைகுலுக்குவதும், ஆடிப் பாடிப்பழகுவதுமே நாகரிகம், அவ்வாறு செய்யாவிட்டால் இதரதேசத்தார் நம்மை நாகரிக மனிதர்களாய் நினைக்கமாட்டார்கள் என்று தங்கள் சகோதரிகளையும் இந்த பகட்டான நாகரிகத்தைக் கைக்கொள்ளும்படி சிலர் தூண்டுகிறார்கள். என்ன ஆச்சர்யம்! இவர்களைப்பற்றி நினைக்கும் போது ஒரு புறம் சிரிப்பு வருகிறது; மற்றொரு பக்கம் துக்கம் பெருகுகிறது. எல்லாம் பொய்க்கல்வியின் பயன்!

ஆனால் வடநாட்டு மாகாண வாசிகள் பலர் நம்போல் அவ்வளவு சுயகௌரவத்தை இழந்துவிட வில்லை. படத்தில் காணப்படும் ரஜபுத்ரகன்னி தன் நாட்டின் மீதும், பழக்கவழக்கங்கங்களின் மீதும் இன்றும் ஒப்பற்ற அன்பு வைத்திருக்கிறாள். அவைகளையே பின்பற்றி வருகிறாள். அவள் மனமும் சாந்தியாயிருக்கிறது; முககாந்தி மாறிப்போய் விடவில்லை. இயற்கை அழகு அவளிடத்தில் குடிகொண்டுள்ளது. நாமும் ரஜபுத்ர மங்கையைப்பின்பற்றுவோம்.



# ஸ்திரீ வித்யா

ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயலக்ஷ்மி

இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவரும் கல்வி கற்பது அவசியம். கல்வி வாசனையறியாத மனிதன் விலங்குகளுக்கு சமமென்று கருதப்படுகிறது. கல்வி புருஷர்களுக்கு எவ்வளவு அவசியமானதாகக் கருதப்படுகிறதோ அதேபோல் பெண்பாலருக்கும் கல்வி அவசியமானது.

ஒரு கல்விமானுக்கு ஓர் கல்வி கற்காத மூடப்பெண் மனைவியாக வாய்த்தால், ஒரு வண்டிக்கு ஒரு எருமைக் கடாவையும், மற்றும் ஒரு குதிரையையும் சேர்த்து ஜதையாகப் பூட்டி, ஓட்டினால் அந்த வண்டி எவ்வளவு நன்றாக ஓடுமோ அதுபோலவே அவர்கள் குடும்ப காரியங்களும் நடைபெறும். ஒரு தேசத்து அரசனுக்கு, செங்கோல் புரிவதற்கு அவனுடைய அமைச்சன் எவ்வாறு உதவிமானாகவிருக்கிறானோ, அவ்வாறே குடும்பமென்னும் ராஜ்யத்தை செங்கோல் புரிவதற்கு, அதின் அரசனை மனிதனுக்கு, அவனது மனைவியே அமைச்சனுக் கொப்பாக, அவனது உதவியாளாகவிருக்கிறாள். ராஜ்ஜியத்தின் அமைச்சன் புத்திமானாகவில்லாவிடில் அவ்விராஜ்ஜியத்தின் காரியங்களனைத்தும் கெட்டழிந்து விடுவதன்றி, ராஜ்ஜியத்திற்கும் கெட்ட பெயர் வர நேரிடும். இவ்விதமே கிருஹலக்ஷ்மியானவள் புத்திசாலியாயும், கல்விக் களஞ்சியமாயும் இராவிடில் அக்குடும்பத்திற்கும் மேற்சொன்னபடியே கஷ்ட திசை ஏற்படும். ஆகையால் பெண்கள் கல்வி கற்பது மிகவும் அவசியமென்று ஏற்படுகிறதல்லவா?

நம்மவரில் சிலர் இவ்வாறு கூறுவதை நாம் பலதடவைகள் கேட்டிருக்கிறோம். "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பென்ன, படிப்பு? படித்துக்கிழித்து இவர்கள் உத்தியோகமா செய்யப்போகிறார்கள்? எவ்வளவு படித்தாலும் கடைசியில் இந்த பொட்டைக் குட்டிகள் ஒரே வேலை தான் செய்கிறதுகள். கலியாணத்தை பண்ணிக்கொண்டு குடும்பத்தை கவனிப்பதும், குழந்தைகளை பெற்று வளர்ப்பதையும் விட்டு, வேறென்ன சாதிக்கபோகிறார்கள்! இந்த மஹாகாரியத்திற்காக பணத்தை செலவழித்து வீணாக சிரமப்பட்டு இவர்களை என்னத்திற்குப் படிக்க வைக்க வேண்டும்?" என்றெல்லாம் பெண் கல்வியை இகழ்ந்து சில அஞ்ஞானிகள் கூறுவதை கேட்க என் மனம் பதறுகிறது. இவர்கள் நினைப்பதுபோல் கிருஹலக்ஷ்மியானவள் தன் கிருஹகாரியங்களை ஒழுங்காக செய்வதும், குழந்தைகளை ஆரோக்கியவந்தார்களாக வளர்த்து, அவர்களை முன்னுக்குக்கொண்டு வருவதும் எவ்வளவு கஷ்டமானதும் மற்றும், ஜவாப்தாரியான காரியமென்பதை உணர்ந்தாரில்லை. ஓர் கிரஹலக்ஷ்மியானவள் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களை சகித்துக் கொண்டு, குடும்பமென்ற சமுத்திரத்தில் எவ்வளவு சுழிகள், அலைகள், மடுவுகள்,

முதலியவைகளான கண்டங்களைக் கடந்து தப்பித்துக்கொண்டு நீந்துகிறாளென்பதை கிருஹலக்ஷ்மியாக விருக்கும் பெண்டுகளே அறிவார்களன்றி, மற்றவர் எவ்விதம் அறியக்கூடும்? கல்வியானது இவளுக்கு குடும்பகாரியம் மென்ற சமுத்திரத்தில் கிடைக்கும் 'மிதக்கும் கட்டைக்கு' சமானதாகும். எவ்விதம் சமுத்திரத்தில் தவிக்கும் மனிதனுக்கு ஓர் மிதக்கும் கட்டை பேருதவி செய்கிறதோ, அவ்விதமே கல்வியும் கிருஹலக்ஷ்மிக்கு உதவியாகிறது. பெற்றோர்களே! ஆகையால் முன்னுக்கு கிருஹலக்ஷ்மியாக விளங்கப் போகும் பெண் குழந்தைகளை நன்றாக படிக்கவைத்து கைதேர்ந்த கிருஹலக்ஷ்மிகளாக தயாரிப்பீர்களாக!

உலகில் வீரனென்றும், தீரனென்றும், கல்விமானென்றும் பெயரெடுத்து போற்றபடும் மனிதனிலிருந்து அதிமூட மதியாகவிருக்கும் மனிதன் வரையில் ஒவ்வொரு மனிதனும், முதன்முதல் தனது குழந்தை பருவத்தில் தாயால் திருத்தப்பட்டு, படிப்படியாய் பள்ளிக்கூடம், கலாசாலைகள் முதலியவைகளில் கல்வி பயின்று, முன்னுக்கு வருகிறான். ஆகையால் மனிதனின் பழ்க்கவழக்ககுணங்களே முதன் முதல் அவனது தாயாரால்தான் திருத்தப் படுகிறதென்பது வெட்ட வெளியாகிறதல்லவா? ஓர் குழந்தை முன்னுக்கு புத்திசாலியானவனுகவும் மற்றும் கல்விமானன மனிதனுகவும் விளங்கவேண்டுமென்றால் அவனது முதன் முதல் உபாத்தியாயராக பட்டவளான. தாயார் இந்த நற்குணங்களால் அமைக்கப்பட்டு வித்தியாவதியாக விளங்கவேண்டுமல்லவா?

தந்தையானவன் எப்படிப்பட்ட கல்விமானனுலுங்கூட, அவனுக் கேற்றபடி தாயாரும் கல்வி பயின்றவளாக வில்லாவிடில் குழந்தை முன்னுக்கு வருவது கஷ்டமே. ஏனென்றால் குழந்தையானது குழந்தை பருவத்தில், நாளெல்லாம் சாதாரணமாக தாயார் அருகிலேயே யிருக்கிறது. தந்தையானவனே சம்பாதிப்பதற்காக நாளில் முக்கால் பங்கு சமயத்தை வீட்டு வெளியில் சென்று வேலை செய்வதில் யிருக்கிறான். சாப்பிடுவது, தூங்குவது, குளிப்பது முதலான வேளைகளில் மட்டும் தான் அவன் வீட்டிலிருக்க முடிகிறது. அவன் இந்த அற்ப சமயத்தில் குழந்தைக்கு எந்தமட்டிலும் சிக்ஷையளிக்க முடியும்? வாசகர்களே! நீங்களே யோசித்துப் பாருங்கள்! ஆகையால் குழந்தையானது நல்லதோ, கெட்டதோ எந்த பழக்க வழக்கத்தையும் தாயாரினிடத்திலிருந்தே கற்றுக் கொள்ளுகிறது. தாயாரும் தன் குழந்தையின் பிராரம்பசிக்ஷாகர்த்தாவாக விளங்குகிறாள்.

குழந்தைகள் இளஞ் செடிகளுக்கு சமானம். "விளையும்பயிர் முளையிலே" என்னும் மொழியைப்போல், குழந்தைகளை நாம் இளம்பிராயத்திலேயே நல்ல வழிக்கு கொண்டு வரவேண்டும். அதுவுமன்றி செடியை வளைப்பது சுலபம், ஆனால் மரத்தை வளைப்பது அசாத்தியம். ஆகையால் குழந்தைகளை சிறுவயதிலிருந்தே சத்குணவந்தார்களாகவும், சத்சீலராகவும், கல்விபிரிதியர்களாகவும் தயார்செய்யவேண்டும். பெரியவர்ளான பின்பு அவர்கள் துன்மார்களாகவோ, துஷ்டர்களாகவோ விளங்கினுலுங்கூட அவர்களை சன்மார்க்கத்தில் திருப்ப முயற்சிப்பது வீண்தான்.





ஆகையால் அபயானவன் அசடு வழியாமல் புத்திசாலியாக விருப்பாளேயானால் அவளது முயற்சியால் குழந்தை புத்திசாலியாக விளங்குவான்.

இதற்கு நம் புராண இதிஹாசங்களில் கூட பல உதாரணங்கள் கிடைக்கின்றன. லட்சுமணன் தன் தாயாரான சுமித்ராதேவியிடம் சென்று ராமசந்திரர் காட்டிற்கு செல்லும்பொழுது அவருடன் தானும் செல்வதற்கு விடையளிக்க வேண்டுமென்று கேட்டபொழுது, சுமித்திராதேவியானவள் "என் சக்களத்திப் பிள்ளை எப்படியாவது போகட்டும், நீ என்னுடன் இவ்விடமே சௌக்கியமாக இரு" என்று சொல்லாமல், "சீதையே தாயென்றும், ராமனே உனது தந்தை என்றும், கானகமே அயோத்தியை என்றும் நினைத்துக்கொண்டு போய் வாப்பா" என்று அன்பு மொழிகள் மொழிந்து அனுப்பித்தாள். அவள் கல்வி கற்காவிடில் அப்படிப்பட்ட நல்ல புத்திரனை பெற்றெடுப்பாளா? அல்லது, தன் மகனுக்கு புத்திமதி கூறத்தான் அவளுக்கு தெரிந்திருக்குமா? இதைப்போலவே சீதை, சாவித்திரி, அருந்ததி முதலிய அனேக பண்டைகால இந்து பெண்களின் உதாரணங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஆகையால் பெண்கள் நன்றாக கல்வி பயின்று குணவதிகளாக விளங்கினால், அவர்களே தம் குழந்தைகளை நல்வழியில் பிரவேசிக்கச் செய்து உலகத்தை உத்தாரம் செய்வார்கள். நம்தேசத்தில் பெண் கல்வி முன்னேறினுலொழிய நம் தேசம் சுதந்திரம் பெருவதும் கடினமாகையால், தேச பக்தர்களனைவரும் பெண்கல்வி முன்னேற்றத்தைக்கருதி முதன் முதல் தொண்டு புரிவது அவசியம். இக்காரியத்தில் நம் கிருஹலக்ஷ்மி மாதப்பத்திரிகை மிகவும் சிலாக்கியமான வேலையை செய்து வருவதைக் கண்ணுற்று எனக்கு மிகவும் களிப்பேற்படுகிறது.

பெண்களுக் கென்றே தோன்றி, பெண் கல்வி முன்னேற்றத்தை முக்கிய த்யேயமாகக்கொண்டு உழைத்துவரும் இப்பத்திரிகையை நம் தமிழ் நாட்டு சகல பெண்களும் ஆதரித்து, அதினின்றும் தங்கள் ஜாதி (பெண்) யாருடைய ஆசை தோழியாகிய கிருஹலக்ஷ்மி முன்னேற்றத்திற்கு சகல விதத்திலும் உதவி புரிவார்களாக.



# வைத்தியப் பகுதி

திரு. இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை

## பாலின் சிறப்பு

### உடலுக்கு வேண்டிய சூடு

பாதுகாப்பு உணவுப் பொருள்களே யாகட்டும் சக்தி உணவுப் பொருள்களே யாகட்டும் அவைகளினால் உண்டாகக்கூடும் சூட்டளவிற்குத் தக்கதாகவே அவை பாராட்டப்படுகின்றன. ஒரு சாதாரண மனிதனுக்கு வேலையில்லாதிருக்கும் நிலைமையில் 2400 கேலரி சூடு அவசியமென்றும், மற்றப்படி வேலைக்குத் தக்கதாக மணி ஒன்றுக்கு 75 முதல் 300 கேலரிவரை அதிகச் சூடு அவசியமென்றும், வீட்டுவேலை செய்கிற ஸ்திரீக்கு நாளொன்றுக்கு 600 கேலரி அதிகச்சூடு வேண்டியிருக்கலாமென்றும் கணக்கிடப் படுகின்றன. குழந்தைகளுக்கும் அவைகளின் நிறை வயதிற்குத் தக்கதாக வேண்டிய சூடு கணக்கிடப்படுகிறது. நம் உணவில் உடல் வளர்ச்சிக்கும், குறைவைப் பூர்த்தி செய்வதற்கும் வேண்டும் சத்துக்களோ, உடல் பாதுகாப்பிற்கு வேண்டிய சத்துக்களோ இருந்தால்மட்டும் போதா; அவைகளிலிருந்து போதிய சூடும் உண்டாதல் வேண்டும். நம் உணவு மற்றப்படி போதியதாயிருந்த போதிலும் போதிய சூடு உண்டாகக்கூடிய நிலையில் இல்லாவிட்டால் சாப்பிட்ட உடனேயும் சாப்பிட்டது போல இராது; பின்னும் பசிக்கும்.

### கர்ப்பகாலக் கடமை

கர்ப்பகாலத்தில் தன்னுடலிற்குவேண்டிய உணவோடு கருவளர்தற்கான உணவும் ஒவ்வொரு கர்ப்பஸ்திரீயும் கொள்ளல் வேண்டும். அவ்வாறு கொள்ளாத போது கருவளர்ச்சிக்கு அவசியம் வேண்டிய சுண்ணாம்பு, பாஸ்பரஸ் முதலிய சத்துக்களை அவள் உடம்பிலிருந்தே எடுத்துக்கொள்வதால், பின் பிரசவ வேதனையைத் தாங்க முடியாதுபோகிறது. எலும்பும் தசைகளும் பல வீனமாவதோடு கிமிர்ந்து உட்காரவும், ஒரே மாதிரியாய் நீண்டநேரம் படுத்திருக்கவும்கூட முடியாதவளாகிறாள்; சுண்ணாம்பும் 'டி' உயிர்ச்சத்தும் சேர்க்கும்போது இந்தச் சோர்வு நீங்குகிறது. கர்ப்பமான 28-வது வாரத்திற்குப் பின்னால் கர்ப்பத்திலுள்ள சிசுவிற்கு 24 கிராம் சுண்ணாம்பும் (தினப்படி 3 கிராம்) 15 கிராம் பாஸ்பரசும் வேண்டியிருக்கின்றன. பாலிலுள்ள சுண்ணாம்பு பாஸ்பரசே உடலில் எளிதில் சேரக்கூடியன. அதில் 'டி' உயிர்ச்சத்து மிருக்கிறது. ஆகையால் தனக்காக மட்டுமன்றிக் கர்ப்பத்திலுள்ள சிசுவிற்காகவும் ஒவ்வொரு கர்ப்ப ஸ்திரீயும் பாலோ, மோரோ தாராளமாகச் சேர்த்து வரவேண்டும்.

கருவிலுள்ள சிசுவிற்கு வேண்டும் இரும்பு, 'ஐயோடைன்' சத்துக்களும்



'ஏ,' 'சி,' உயிர்ச்சத்துக்களும் ஒவ்வொரு கர்ப்பஸ்திரீயும் சேர்த்துவரவேண்டும். சூரிய வெளிச்சத்தில் தாராளமாய் நடமாடுதற்கில்லாத கர்ப்ப ஸ்திரீகள் 'டி' உயிர்ச்சத்தும் சேர்க்க வேண்டும். ஐயோடைன் 'ஏ,' 'டி' உயிர்ச்சத்துக்களுக்காக மீனெண்ணெயும் 'சி' உயிர்ச் சத்துக்காக ஆரஞ்சுபழரசமும் சேர்த்து வரலாம்.

### குழந்தை பராமரிப்பு

தாய்ப்பாலில் இரும்புச் சத்து குறைவாயிருப்பதால் குழந்தை பிறந்த 6 மாதம் வரை வேண்டியிருக்கும் உயிர்ச்சத்து அதன் கல்லீரலில் அமைக்கப்படுகிறது. அதற்குப் பின் குழந்தையின் உணவில் இரும்புச் சத்து தரும் பொருள்களைச் சேர்த்துவர வேண்டும். தமிழ் வைத்தியர்களும் தனிப்பால் போதாதென்றும் பசும்பாலோடு நல் முத்துப் பஸ்பமும் சர்க்கரையும் சேர்த்து வரவேண்டும் என்கிறார்கள். குழந்தைகளுக்குத் தக்காளி, ஆரஞ்சு, மாதுளம்பழ ரசங்கள் எப்போதும் கொடுத்துவரலாம்; ஆனால் எட்டு மாதத்திற்கு முன்சோறு கொடுக்கக் கூடாது; எட்டுமாதத்திற்குப் பின்னும் சோற்றைக் காட்டிலும் உருளைக்கிழங்கை வேகவைத்து மசித்துத் தருதலே உசிதமாகும். அதில் இரும்பும் சுண்ணாம்பும் பாஸ்பரசும் 'பி,' 'சி' உயிர்ச்சத்துக்களுமிருக்கின்றன. அதை வேகவைப்பதில் அதிலுள்ள 'சி' உயிர்ச்சத்து சிறிதே குறைகிறது. மற்றக் காய்கறிகளைப்போல அது பூராவும் கழிந்து விடுவதில்லை. சோற்றைக் கொடுத்தால் அதிகப்படியாக சுண்ணாம்புச்சத்தும் 'ஏ' 'டி' உயிர்ச்சத்துக்களும் குழந்தையின் உடலிற்குத் தேவையாகும். சோற்றிலுள்ள சுண்ணாம்பு பாஸ்பரஸ் சத்துக்கள் சில சந்தர்ப்பங்களில் எலும்பு, பல் வளர்ச்சி முதலியவற்றிற்கு உதவுவதில்லை. இப்படியாக அரிசி உணவால் சிறுவயதுமுதல் கெடுதிகளே அதிகமாக நேருகின்றன. பால் சிறிது அதிகம் சேர்த்தாலும் அதிக நன்மையே யன்றி வேறில்லை. அதனால் எடையும், பருமனும், வளர்ச்சியும், திடமும், சுகமும் அதிகமாவதைக்காணலாம்.

### அவசிய உணவு

அவரவர் வருவாய்க்குத்தக்கதாகவே உணவைப் போதிய சத்துக்களடங்கியதாய்ப் பல்வேறுவிதமாய் அமைத்துக் கொள்ளலாம்; பல பொருள்கள் சேரும் போது இது எளிதிலும் சாத்யமாகும். பாலோ மோரோ தாராளமாகச் சேர்த்தும், அவசியம் நிலக்கடலை, கீரை முதலியன சேர்த்தும் பாதுகாப்புச் சத்துக்கள் தாராளமா யிருக்கும்படியாய்க் கவனித்துக் கொள்ளவேண்டுவது அவசியம். உடலில் சூரியவெளிச்சம் படும்படியாக இருப்பவர்களுக்கு 'டி' உயிர்ச்சத்தைப் பற்றிக் கவலையே வேண்டாம்; அதற்காகப் பணம் செலவழிக்க வேண்டியதில்லை; அது நம் உணவிலிருக்கும் சுண்ணாம்பு, பாஸ்பரஸ் சத்துக்களை, அதுவும் நம் உணவில் அவைகள் தாராளமாயிருக்குமானால், எளிதாகவும் நம் உடம்போடு சேர்க்கிறது; அவற்றை உடம்பில் நிறுத்தியும் வைக்கிறது. அதனால் எலும்பு முதலியன அதிக உறுதியும் திடமும் பெறுகின்றன. இப்படியாகச் சூரிய வெளிச்சமும் காற்றைப்போல் நமக்கு நல்ல பலனை இலவசமாய்த் தருகிறது.

# விடுகதை விருந்து

**திரு. வி. எஸ். ஜகதீச சுந்தரம்**

1. ஏருத மரத்திலே ஏண்ணூறிரங்காய்.
2. இணற்றைச் சுற்றிப் புல்.
3. சின்ன வீட்டு நிறையச் சிறு.
4. ஊருக்கெல்லாம் ஒரே துப்பட்டி.
5. சின்ன வெங்காரம் வீடெல்லாம் சிங்காரம்.
6. தச்சன் இழைக்காத மரம் என்ன மரம்?
7. ஒரு பொறி பறக்க ஊரெல்லாம் பொறி.
8. கொக்கு நிற்க நிற்க குளம் வற்ற வற்ற.
9. அள்ளுவான் கிள்ளமாட்டான்.
10. இரண்டு வீட்டுக்கு ஒரு தூலம்.
11. ஒரு புட்டியில் இரண்டு தைலம்.
12. முள்ளில்லா மீன் என்ன மீன்?
13. வட்டக்குருவிக்கு முழம் வால்.
14. காட்டிலே துளி ரத்தம்.
15. ஜன்னல் பின்னல் கயிறு, ஜாதிலிங்கக் கயிறு, எண்ணெய் படாத கயிறு என்ன கயிறு.
16. வட்ட வட்ட சிங்கண்ணு, வாலில்லாத சிங்கண்ணு, என்னை வந்து எழுப்பண்ணு.
17. இவ்வளவுண்டு சிற்றூண்டி வயிற்றைப் பிதுக்கிண்டு செத்தாண்டி.
18. முள்ளு முள்ளுக்குள்ளே முந்திரித் தோப்புக்குள்ளே வைக்கோற்போருக்குள்ளே கண்டெடுத்தேன் வயிரமணி.
19. அந்தரத்தில் பறந்திடும் பருந்தேயல்ல, அழகான வாலுண்டு அநுமாரல்ல, வித்தையுடன் கட்டுண்ணுங்கட்டுமல்ல, வேந்தரது திருநாமம் அவர்க்கேயுண்டு.
20. மதுரமான் ஏரியிலே மான் வந்து நிற்கிறது கட்டடா பிடியடா கள்ளக் கயிறு போட்டடா, இந்த விடியை விடுப்பவர்க்கு நூறு வெற்றிலை நூறு பாக்கு சுண்டு விரலிலே சுண்டக்காய் சுண்ணாம்பு.
21. கனதனத்தாளை கடையிலே கண்டேன், கண்டவுடனே கொண்டேன், கொண்டவுடனே அடித்தேன், அடித்தவுடனே சிரித்தாள், சிரித்தவுடனே கடித்தேன்.
22. சந்தனம் புனுகுபோல் மிதித்த கதை சொல்லவா, தகப்பனுரோடிவந்து அடித்தகதை சொல்லவா, செங்காடு தீப்பட்டு வெந்தகதை சொல்லவா, தேசமெங்கும் ஒரு புரமாய் மாண்டகதை சொல்லவா.
23. சின்ன பையனும் சின்ன சிறுக்கியும் சிரித்துக்கட்டின தாலி சிக்கில்லாமல் அவிழ்ப்பவர்க்கு சென்னைப் பட்டினம் இனும்.
24. அருணகிரி திருணகிரிமேடை, அறுனாற்றைக் காதவழி கருப்பூரவாடை, இதை விடிப்பவர்க்கு பூவினுல் மாலை.
25. கூட்டிலே இருக்குமது கிளியுமல்ல, கொழுந்தோடி இருக்குமது இரை தின்னுது, காட்டிலே விட்டுவிட்டால் பறந்தே போகும், கனத்த மன்னர் வாசலிலே காவலாகும், ஈட்டிக்கத்தி பிடித்தவர்க்கு எதிரே நிற்கும், இக்கதையை சொல்லுகிறேன் பூவையர்க்கு, நாட்டினிலிக் கதையை யுரைப்பாரானுல் நாம் அவரை குருவெனவே வணங்கலாமே.

---


1. கேழ்வரகு, 2. கண் இரப்பை, 3. பல், 4. ஆகாயம், 5. விளக்கு, 6. துடைப்பம், 7. விளக்கு, 8. விளக்கு, 9. தண்ணீர், 10. மூக்கு, 11. முட்டை, 12. முட்டை, 13. அகப்பை, 14. குண்டுமணி, 15. பாம்பு, 16. மூட்டுப்பூச்சி, 17. நெல், 18. பலாப்பழம், 19. காற்றூடி, 20. ஸ்டீமர், 21. தேங்காய், 22. சட்டிபானை, 23. தூக்கணாங் குருவி, 24, தவனம், 25. அம்பு.



ஸ்ரீமதி கடிஜா யாகூப் ஹசன், எம்.எல்.ஏ.
(சென்னை நகர முனிஸிபல் கௌன்ஸில் பிரதிநிதி.)



ஸ்ரீமதி ஜெரூன்ஸ்மமன், எம்.எல்.ஸி.
(சென்னை உயர்தர சபைக்கு சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்.)



அந்திவேளை

# தஞ்சாவூர்

திரு. எஸ். ஆர். வெங்கோபராவ்

தேன்போன்ற காவேரிநதி யோடும் பிரதேசத்தில் 'பொன் விதைத் தால் பொன் விளையும்' எனக் கருதப் படும் பூமி தஞ்சாவூர் ஜில்லாவைச்சார்ந்த தாகும். அந்த ஜில்லாவின் முக்கியப் பட்டினமே தஞ்சாவூர். அந்த ஜில்லாவின் நீர்ப்பாய்ச்சல் முன்பு மிகவும் நன்றாயிருந்த தாயினும், இப்பொழுது புதிதாக சில வருடங்களுக்கு முன் கட்டி முடிக்கப் பட்ட உலகத்திலேயே முதன்மை ஸ்தானத்தை வகிக்கும் மேட்டூரணைக் கட்டினால், மேன்மேலும் நற்கியாதி பெற்று விளங்குகிறது.

தமிழ்நாடு முன்காலத்தில் முக்கியமாய் சோழ, சேர, பாண்டிய நாடுகள் என மூன்று பாகமாய்ப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு அரசனால் ஆளப் பட்டு வந்ததென்பது சரித்திரங்களி னின்றும் நாம் அறிகிறோம். தஞ்சாவூர் சோழ அரசர்களுக்கு முக்கியப்பட்டினமா யிருந்தது. சோழ அரசர்களில் முதல்வன் கரிகால் சோழன். அவ்வரசர்களுக்குப் பிறகு அநேக சோழமன்னர்கள் ஆண்டு வந்தன ராயினும் மிகவும் பேரும் புகழும் பெற்று விளங்கியவர்கள் ராஜ ராஜ சோழனும், கங்கைகொண்ட சோழனுமே யாவர். அரசர்களிட மிருக்கவேண்டிய உயர் குணங்களும், தெய்வபக்தியும் அவர் கள் ஆபரணங்களாய்த் திகழ்ந்தன.

தஞ்சைமாநகர் முன்பு சோழ மன்னர் களுக்கும், அப்பால் சிவாஜி மன்னனினத் தாருக்கும் தற்பொழுது ஆங்கிலேயருக்கும் சேர்ந்தது. இந்நகரானது மிகவும் பழைமையானதென்பது மேற்கூறிய சம்பவங்களால் தென்படுகின்றது.

தஞ்சையிலுள்ள முக்கியமான தேவா லயம் ஸ்ரீ பிருகதீஸ்வரரின் தேவாலய மாகும். இக்கோயில் மிகவும் பிரம்மாண்ட மானது. கோபுரவாயிலினின்று நேரே சென்றால் ஸ்ரீ பிருகதீஸ்வரர் தேவாலயம் உள்ளது. இங்குள்ள எம்பிரானின் லிங் கம் மிகவும் பிரம்மாண்டமானது. ஈஸ்வர ரின்மேல் கட்டப்பட்டுள்ள கோபுரம் மிகவும் உயரமானதாய், அநேக வேலைப் பாடுகளமைந்ததாய், பல வேறு பதுமை களை யுடையனவாய் ஜகஜ்ஜோதியாய் எப்பொழுதும் பிரகாசிக்கின்றது. இக் கோயிலின் முக்கியமான விசேஷம் யாதெனில் கோபுரத்தின் மேலுள்ள வேலைப் படுப்பாடுகள் யாவும் வைஷ்ணவ சம்பிரதாயத்தைத் தழுவியிருந்தும், கோயிலிலுள்ள பிரானின் விக்ரஹம் சிவ னுடையதா யிருத்தலேயாம். மேலே கூறியவற்றால் அக்காலமன்னன் ராஜராஜ சோழனும் ஜாதிமத வித்தியாச மற்றவ னென்பது நன்கு விளங்கின்றதன்றோ!

பிரகதீஸ்வரரின் விக்ரஹத்திற்கு நேராக மிகவும் பெரிய நந்தி யிருக்கின்றது. இதன் நீளம் சுமார் 16 அடி, உயரம் சுமார் 12 அடி. இந்நந்தி ஒரே கல்லில் செதுக்கப்பட் டது. இது சுமார் நானூறுமைல் தூரத்தி னின்றும் கொண்டுவரப்பட்டு, செதுக்கப் பட்டதென்று கூறப்படுகின்றது. நந்தி மிகவும் அழகாய் செதுக்கப்பட்டிருக் கிறது. மழமழவென்று எண்ணெயால் பூசபட்டு கரும் வண்டு நிற முடையது.

பிரகதீஸ்வரரின் கோயிலிலிருந்து வெளியே வந்தால் இடது கை பாகத்தில் ஸ்ரீ பிருகதேஸ்வரி ஜகன்மாதா சன்னதி உள்ளது. அவ்வம்மையைத் தரிசித்து பிராகாரத்தைச் சுற்றிவந்தால் விநாயகர் சன்னதியும், கருவூரார் சன்னதியும், ஸ்ரீ சுப்ரமணிய ஸ்வாமி சன்னதியும் முறையே ஸ்ரீ பிருகதீஸ்வரின் கோவிலுக்குப் பின் பாகத்தில் அமைந்துள்ளன. இவைகளுள் மிகவும் அழகான வேலைப்பாடுகள் செய்யப்பட்டது ஸ்ரீ சுப்ரமணியரின் சன்னதியாகும். இச்சன்னதிகளைக் கடந்து, மற்றும் இரண்டு சிறு சன்னதிகளைக் கடந்துவந்தால் முன் புறப்பட்ட ஈஸ்வரியின் சன்னதிக்கெதிரே வந்து சேருகிறோம்.

பிருதீஸ்வரரின் கோயிலின் கோபுரத்தின் உயரம் சுமார் 200 அடி யிருக்கும். ஈஸ்வரனின் மேலேயுள்ள கோபுரம் ஒரே கல்லால் செதுக்கப்பட்டது. ராஜ ராஜ சோழன் கட்டுவித்ததால் இக்கோயிலுக்கு ராஜராஜன் கோயில் எனப் புனைப்பெயருண்டு. இதன் நிழல் எந்த சமயத்திலும் பூமியில் விழுவதில்லையென்று சொல்லப்படுகிறது.

ராஜ ராஜ சோழனின் அரசாட்சி சுமார் 28 ஆண்டுகள் நீடித்திருந்தது. இம்மன்னன் ஜாதி மதவித்யாசம் பாராட்டாது வந்ததால் குடிமக்கள் அரசன்பாலன்பு பூண்டு அவனுக்கு "சிவபாதசேகரன்," "ஸ்ரீ ராஜ ராஜ சிவபாதசேகரன்" எனப் பலவிருதுக்களைக் கொடுத்தனர்.

"தஞ்சாவூர் கோயிலின் வேலைப்பாடுகள் சிதம்பரத்தின் வேலைப்பாடுகள் போன்றன." இக்கோயிலிலுள்ள சாசனங்களினால் இக்கோயில் சுமார் கி.பி. 1005ல் கட்டப்பட்டதாகத் தெரிகின்றது. அதுவுமன்றி தனக்குக் கடவுள்பாலுள்ள பக்தியால் தனக்குக் கிடைத்த ஏராளமான திரவியத்தைக் கோவிலுக்கு மானியமாக அளித்திருப்பதாகத் தெரிகிறது. கோயிலிலுள்ள சாஸனத்தால் ராஜ ராஜ சோழனே நேரில் இக்கோயில் கட்டுவித்ததாகத்தெரிகின்றது. இவன் தளகர்த்தன் கிருஷ்ணன்ராமன் என்பவன் இக்கோவில் கட்டுவதில் உதவிபுரிந்தானென்பது கல்வெட்டுகளிலிருந்து நமக்குத் தெரிகின்றது. "மஹாராஷ்ர மன்னர் சரபோஜி" என்பவனால் கி.பி. 1802ம் ஆண்டில் பிருகந்நாயகி, சபாபதி, கணபதி முதலிய சன்னதிகள் பழுதுபார்க்கப்பட்டதாக அங்கிருக்கும் கல் வெட்டுகளால் தெரிகிறது.

இந்நகருக்கு மத்தியில் சிவாஜி யாண்ட காலத்திலிருந்த அரண்மனை உள்ளது. சிம்மாசனம் வைத்திருந்த யிடமும் அங்கே தான். இவ்வரண்மனையை யொட்டி கோவிலுக்கருகில் சுமார் ஏழடுக்குள்ள ஒரு மாடமாளிகை யுள்ளது.

திருவையாறு என்னும் திவ்யஸ்தலம் இங்கிருந்து 7 மைல் தூரத்தி லிருக்கிறது. இங்கு காவேரியின் 5 பிரிவுகள் ஓடுவதாக கூறப்படுகிறது. அப்பர் ஸ்வாமிகள் முக்தி பெற்றயிடமும், பூலோக கைலாசமும் இதுவேயாகும். இங்கு ஒரு சம்ஸ்கிருத கலாசாலை யுள்ளது.

இக்கோவிலிலுள்ள குளத்தின் தீர்த்தம் பருவதற்கு மிகவும் ருசியா யிருக்கிறது. அதில் ஸ்நானம் செய்து எம்பிரானைத் தரிசிப்பவர்களுக்கு மிகப் புண்ணியமுண்டு.



# ஜநாபாய்

'மைதிலி'

பிறவி என்னும் இப்பெருங்கடலைக் கடந்து பெருமானினடி சேர்ந்து இன்புறுவதற்கு ஏற்பட்டுள்ள சிறந்தவழி கடவுள்பால் கழியாவன்பு பூணுதலேயாம். காடு சேர்ந்து, கந்தமூலமுண்டு, கடுந்தவம் புரிவதினும், கடவுள்பால் குறையாவன்பு கொண்டு, கீதையில் கூறியவாறு தன் தொழிலாலே அவனை ஆராதித்து, அவனன்பர்களுக்கு வேண்டியவைகளை எல்லாம் அளித்துப் 'பகவத் பக்தி', 'பாகவத பக்தி' இவ்விரண்டையும் மேற்கொண்டு, தன் வாழ்க்கையை நடத்துபவரே ஐயனருளுக்குப் பாத்திரராவார். இம்முறையை மேற்கொண்டு மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தைப் பெற்ற பெண்மணிகளுளொருவள் ஜநாபாய்.

உள்ளும் புறமும் குளிர்ந்து விளங்கச் செய்யும் மாதங்களில் சிறந்த மார்கழியில், பார்புகழும் பண்டரிபுரத்தில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. நகரமெங்கும் சாதுக்களின் கூட்டமும், பஜனை கோஷ்டிகளும் நிறைந்தன. புண்டரீகவரதனைத் தரிசிப்பதற்கு வந்தவர் பலருள் ஒருவர் மகா உத்தமரான ஓர் அந்தணர். தன் மனைவியுடனும், ஒரே பெண்குழந்தையுடனும் கண்ணனின் திவ்ய உருவத்தைத் தரிசிக்க விழைந்தார். சர்வபாப நிவாரணியாகிய சந்திரபாகா நதியில் மூழ்கி முகுந்தனைத் தரிசித்துத் தங்கள் கிராமத்துக்குச் செல்லப் புறப்பட்டார்கள். ஆனால் குழந்தையோ தகப்பனுடன் திரும்பிச் செல்ல மறுத்தது. "நான் ஆலயத்தை விட்டு வரமாட்டேன். அச்சுதனின் அருகிலேயே இருப்பேன்," என்று அவ்விளங்குழந்தை பிடிவாதம் செய்தது. என்ன ஆச்சரியம்! சிறு குழந்தைகளுக்குக் கடவுள் பக்தி ஏற்பட்டிருப்பது சகஜமே யானாலும், இளமனதில், இத்துணை அன்பு பெருகி நிற்பது ஓர் அதிசயமேயாம். பெற்றோர்கள் என்ன செய்வார்கள்? குழந்தையைக் கண்ணன்பால் ஒப்புவித்துவிட்டுத் தங்களூருக்குச் சென்றார்கள்.

மழலைப் பருவத்திலேயே மாயோன்பால் மங்காவன்புபூண்ட இச்சிறுமியின் பக்தியின் பிரபாவம் ஊரெங்கும் பரவிற்று. ஆலயத்தையே இல்லமாகவும், தேவகி தனயனையே தந்தையாகவும் கருதி, வாழ்ந்துவரும் சிறுமி ஜநாவின் சிறப்பை அறிந்தார் கண்ணனுக்குக் கண்போன்ற நாமதேவர். ஜநாவைத் தன்னில்லத்திற்கு அழைத்துச் சென்றார். சிறுமியின் சிறப்பை உத்தமியாம் தன்னன்னைக்குக் கூறினார். ஜநாவைத் தன்னுடன் இருக்கும்படி பணித்தாள் நாமதேவரின் நற்றாய். ஜநாவும் நாமதேவரில்லத்தில் அவருடைய கிழத்தாயாருக்கு உதவியாக வீட்டுவேலைகளைச் செய்துகொண்டு, பகவானின் பாத கமலங்களையே சதா சிந்தித்து வந்தாள்.

ஒருநாள், நகரெங்கும் விடாது மழை பெய்தது. நாமதேவரின் வீடு மிகவும் பழமையானதால், நீர் ஒழுக ஆரம்பித்தது. அன்பருக்கன்பான மெய்யனாம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, நாமதேவர் துயருறச் சகியானாய் அவரில்லம் சேர்ந்து வெளிப்பக்கத்தில் பிளவுபட்டுள்ள இடங்களையெல்லாம்

அடைத்துக் கொண்டிருந்தான். அச்சமயம் தற்செயலாக வெளியில்வந்த நாமதேவர், கண்ணன் கருணையுடன் செய்யும் பணியைக் கண்டு வியந்து, அவனன்பைப் போற்றியும், தன்பொருட்டு அவனடைந்த துயருக்காக வருந்தியும், அவனைப் பூஜித்து உள்ளே அழைத்துச் சென்றார். இதனினும் அதிசயம் வேறெது? பனியிலும் வெயிலிலும் உறைந்து, காய்ந்து, தவம் புரியும் முனிவர்களுக்கும் தன் வடிவைத் தோற்றுவிக்காத அடைதற்கரிய அமலன், அன்பே பிரதானமாகக்கொண்டு 'அவனன்றி' வேறொன்றையும் எண்ணாது வாழும் நாமதேவரோடு அவர் குடும்பத்தில் ஒருவனாக நடந்துகொண்டானெனில், அன்பின் சக்தியை என்னென்று சொல்வது? அன்பர் பணியும், அன்பு பூணுதலுமே ஆயர்குல திலகனடியைச் சேர்ந்து களிப்படைவதற்குச் சிறந்த முறையாம்.

நாமதேவர் கண்ணனை வீட்டிற்குள் அழைத்துச்சென்று தாயாரிடம் அருள் அளி அமுதசுரபியாம் அமலனின் செயலை அறிவித்தார். குணாபாய் என்னும் குணக் குன்றாகிய அம்மாது கண்ணனடி வீழ்ந்து பணிந்து அவனுக்கு உள்ளன்போடு உபசாரம் புரிந்தாள். கண்ணனும் அவர்களோடு அமர்ந்து அளவளாவியிருந்தான். ஐயனின் விளையாட்டை அருகில் நின்று கண்டு களித்தாள் ஜனா. சர்வேச்வரன் தனக்குச் சமமாக அமர்ந்து சொந்த நண்பன்போல் இன்புற அளவளாவியிருப்பதற்கு நாமதேவர் எத்தகைய தவம் புரிந்திருக்கவேண்டும்? அத்தவம் அன்பெனும் தவமே யாகும். அன்பெனும் இழையினால் அவனைப் பிணைத்துத் தன்பால் இழுத்துக் கொண்டவர்களுக்கு பெறற்கரிய பதவி சித்திக்கும். சீதை தன்னுயகனைக் குறித்துக் கூறுவதுபோல் நாமும் 'இனி யார் எனக்கு என்னினும் இனியார்?' என்று கூறுமாறு குறையாவருளை நமக்கு வரையாது அளிப்பவன். உள்ளன்பும் பரிபவமும் துறவினும் சீரிய. மெய்த்தவம் அன்பே. அன்பையன்றி சிறந்த தவம் வேறெதுவுமில்லை.

ஐயனுக்கமுதிட விழைந்தார் நாமதேவர். யாவரும் ஒன்றாய் அமர்ந்து ஜனா பரிமாறவும், பந்திக்கதிபனாய் சர்வலோகாதிபன் வீற்றிருக்கவும், போஜனம் நன்கு நடைபெற்றது. கண்ணனே தனக்கென்றிடப்பட்ட வமுதை உண்ணாது வைத்திருந்து யாவரும் உண்டெழுந்தபின் ஜனாவினிடம் சென்று அவளுக்களித்தார். பக்திபெருகும் உள்ளத்தினளாய் அச்சிறுமி சனகாதிகளுக்கும் கிடைத்தற்கரிய ஐயனின் உச்சிஷ்டத்தை உண்டாள். குணாபாயும், நாமதேவரும் ஜனாவிற்குக் கிடைத்த பாக்கியத்தை வியந்து அவளுடைய பக்தியை மெச்சினார்கள்.

நடுநிசி வேளையானதால் யாவரும் உறங்கச் சென்றனர். கார்கடலில் அருந்துயில் கொள்ளும் அமலனும், நாமதேவர் வீட்டிலேயே சயனங் கொண்டான். சிறிது போழ்தானபின் கண்ணன் எழுந்து சென்று, உறங்கிக்கொண்டிருக்கும் ஜனாவை எழுப்பி, "ஜனா, உன்னினிய பாடலைக் கேட்டானந்திக்க விரும்புகின்றேன். நாமிருவரும் மாவரைக்கலாம். நீ பாடு" என்றார். கனிந்த வருளைப் பொழியும் கரங்களையுடைய ஐயன் இவ்வாறு கூற, ஜனாவும் இயந்திரத்தை எடுத்து வைத்துக்கொண்டு பாடிக்கொண்டே கண்ணனுடன் மாவரைத்தாள். கேவலம் ஓர் மானிடஸ்திரீயோடு மாமுனிவர்களுக்கும் கிட்டாத மகேஸ்வரன் இயந்திரம் அரைப்பதென்றால், அன்பின் சிறப்பினையும், அவ்வன்பினால் பிணைக்கப்பட்ட ஐயனின் கருணையையும் என்னென்று சொல்வது! ஜனாவின் உள்ளம் ஆனந்தத்தினால் பொங்கிற்று. உள்ளத்தே பெருகும் உயரிய உணர்ச்சிகளைத் தன் பாடல்களில் வெளியிட்டாள்.





பொழுது விடியுந் தருணம் கண்ணன் நாமதேவரகத்தினின்று ஆலயத்திற்குப் புறப்பட்டார். போகும்பொழுது தன்னுடைய பீதாம்பரத்தையும் கங்கணத்தையும் ஜனாவிற்குத் தெரியாமலேயே அவளிடம் வைத்து விட்டுப் போய்விட்டார். காலையில் கோயில் குருக்கள் சன்னிதியைத் திறந்து பார்க்கையில் புண்டரீகன் பீதாம்பரமற்று நிற்பதை அறிந்தார்கள். மிகவும் கலக்கமும், கவலையும் கொண்டவர்களாய் என்ன செய்வதென்றறியாமல் திகைத்தனர். பிறகு தீர விசாரித்ததில் கமலக் கண்ணன் நாமதேவரில்லத்திற்கு எழுந்தருளியதைப் பற்றி யறிந்தார்கள். மறுக்கணமே அவர்கள் நாமதேவரின் வீட்டை அடைந்தார்கள்.

நாமதேவர் கண்ணனடியார் தன் வீடு வந்த காரணத்தை அறிந்தார். வீடு முழுவதும் தேடியும் அவருக்குப் பீதாம்பரமும் கங்கணமும் அகப்படவில்லை. குணாபாய் 'கண்ணன் ஜனாவோடு நேற்று மாவரைத்தார். அங்கு எங்கேனும் அதைப் போட்டிருப்பாரோ என்ற சந்தேகம் எனக்குத் தோன்றுகிறது' என்றாள். உடனே யாவரும் ஜனாவிடம் சென்று, நடந்ததைக் கூறிப் பீதாம்பரத்தைப் பற்றிக் கேட்டார்கள். 'பெரியோர்களே, யானொன்றும் அறியேன். அவர் என்னிடமொன்று மளிக்கவில்லை' என்று ஜனா மிகுந்த பீதியுடன் கூறினாள். திரும்பத் திரும்பக் கேட்டாலும் இவ்வாறு கூறுவதால், அவர்கள் அவளறை முழுவதும் ஆராய்ந்தார்கள். அங்கு ஓர் மூலையில் பீதாம்பரமும் கங்கணமும் இருக்கக் கண்டார்கள். உடனே, ஜனாவைப் பிடித்துக் கட்டி அவ்வூர் நியாயாதிபதியிடம் கொண்டு சென்றார்கள். அவன் அவள் மேல் திருட்டுக் குற்றம் சாட்டி அவளைக் கழுவேற்ற உத்தரவிட்டான். என்னே, இம்மடையர்களின் மதி! மயோனின் திருவிளையாடல்களை நன்குணராது அவனடியாளுக்கு இன்னல் புரியத் துணிந்தனர்.

ஜனாவைக் கழுமரத்திற்கருகில் கொண்டு சென்றார்கள். அவள் கண்ணனை மனமாறத் துதித்தாள்.

"பாரரசர் துகிலுரியப் பரிதவிக்கு
மொரு தெரிவை
சீர்துவரை நகர்கருதிச் சிதை
வொழிந்தாளென வுரைப்பர்
ஆர்துணையு மறவிருக்கு
மறிவிலியானழைப்பதற்குன்
ஊர்தெரியே னயிடினுமுறுதிதர
லுனக்குரித்தே.
(மனோன்மணியம்)

அவளுடைய கஷ்டத்தைக் காணச்சகியாராய்க்கண்ணன் அக்கழுமரத்தை சாம்பாராகும்படி செய்தார். உத்தமி ஜனாவின் உயரிய அன்பைக்கண்டு யாவரும் வியந்தனர். கண்ணனருளைப் பரிபூரணமாக அடைந்த அந்நங்கை நல்லாள், நாளுக்கு நாள் கண்ணன்பால் பக்தி பெருக, அழியாப் புகழ் பெற்று, அடைதற்கரிய அச்சாயுச்சிய பதவியை அடைந்தாள்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

# செய்தித்திரட்டு

## காதலருக்கு வின்ட்சர் உதவி

வியன்னு யுனிவர்ஸிடியில் சமீபத்தில் தன் படிப்பை முடித்த டாக்டர் நார்பெர்ட் என்பவர் ஸ்தானிஸ்லாவோவைச் சேர்ந்த ஒரு அழகிய வனிதையின் மீது அளவிலாக்காதல் கொண்டு மணம்புரிய ஆசை கொண்டார். ஆனல் இருவரும் பரம ஏழைகள். தங்களுக்கு ஏதாவது பண உதவி யளிக்குமாறு வின்ட்சர் கோமகனுக்கு அவர்கள் எழுதினர்கள். கோமகனர் அவர்களுக்கு மாறு பெயரில் 100 பவுன் உடனே மணியார்டர் செய்திருக்கிறர். அவர்களும் பேரின்பம் அடைந்தார்கள்.

... ... ...

## தாமா மா கின்

தாமா மா கின் பர்மா மாதர் சபைக் காரியதரிசி. இவர் ஒரு பட்டதாரி. உபாத்தியாயர் வேலை செய்கிறர். ரெங்கூன் கார்பொரேஷன் கல்வி அதிகாரியின் மனைவி. பொதுநல ஊழியர். இவருக்கு அமெரிக்காவுக்குச் சென்று "குழந்தை வளர்ச்சி சாஸ்திரம்" பயின்று வருவதற்காக சர்க்கார் உதவிச் சம்பளம் கொடுத்திருக்கிறர்கள். தாமா அமெரிக்காவுக்குப்போய் திரும்பும்போது இங்கிலாந்தில் 'கிண்டர் கார்டன்' பயிற்சியும் பெற்று வருவார்.

## கல்கத்தா ஸ்திரீ பட்டதாரிகள்

வங்காள மாகாணம் பெண்கல்வியில் முன்னணியில் இருக்கிறது. இவ்வருஷம் 177 பெண்கள் பி. ஏ., பி. எஸ்ஸி பரீட்சைகளில் தேறியிருக்கிறர்கள். அதில் 39 பேர்கள் ஆனர்ஸில் பாஸ் பண்ணியிருக்கிறர்கள். 31 பேர் கௌரவமளிக்கத்தக்க அதிகப்படியான மார்க்குகள் பெற்று பாசாயிருக்கிறர்கள்.

... ... ...

## டைப்ரைட்டிங் மெஷின்

இன்று எல்லா தேசங்களிலும் முக்கிய ஆபீஸ்களில் சர்வ சாதாரணமாக உபயோகப்படுத்தப்படும் டைப்ரைட்டிங் மெஷின் முதன் முதலில் 1867ம் வருஷம் தான் உபயோகப் படுத்தப்பட்டது.

... ... ...

## அழகுக்கு பலி

யூகோஸ்லேவியா தேசத்தில் சராஜீவோ நகருக்குச் சமீபமாயுள்ள கிச்சிச்சிமா என்ற கிராமத்தில் அழகிய இரு சகோதரிகள் இருந்தார்கள். அந்த ஜில்லாவிலேயே அவ்வளவு வனப்பு மிக்க மங்கையர்கள் கிடையாது. அவர்கள் பெயர் அஞ்சிலீஷா, மிலீஷா என்பன. அந்த ஜில்லாவிலுள்ள யுவர்கள், மணமானவர்கள், ஆகாதவர்கள் எல்லோரும் அவர்களின் எழிலில் ஈடுபட்டு தங்கள் மனைவியரை அலட்சியம் செய்தார்கள். இதனல் பொறுமைப்பட்ட ஸ்திரீகள் சதி செய்து ஒரு நாள் இரு சகோதரிகளும் சர்ச்சுக்குப் போகும்போது கொலை செய்து விட்டனர்.

... ... ...



## ஸ்திரீ ஆகாய விமான தலைவி

ஜெர்மனியில் ஹன்ன ரீஸ் என்பவள் பிரபல விமானி. அவளை ஜெர்மனி யுத்த மந்திரி ஜெனரல் கோயரிங் ஆகாய விமானப்படையில் கேப்டனக நியமித்திருக்கிறர். அந்த உயர்ந்த பதவியை வகிக்கும் முதல் ஜெர்மானியமாது ஹன்னவே.

... ... ...

## பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பரப்பளவு பதின்மூன்று கோடியே தொண்ணூருலட்சத்து ஒன்பதினயிரத்து எழுநூற்று எண்பத்திரண்டு சதுரமைல்கள். அதிலடங்கிய ஜனத்தொகை 493,370,000. உலகத்தின் பரப்பில் நான்கில் ஒருபாகம் பிரிட்டிஷாரின் வசம் இருக்கிறது. உலக ஜனத்தொகையில் நான்கிலொருபாகம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குட்பட்டிருக்கிறது.

.... .... ....

## பெண் மோட்டார் ஓட்டிகள்

இந்தியாவில் இன்றும் ஸ்திரீகள் மோட்டாரோ அல்லது சைக்கிளோ ஓட்டிக்கொண்டு போவது ஆச்சர்யமாகக் கருதப்படுகிறது. ஆனல் இங்கிலாந்து முதலிய மேற்றிசை நாடுகளில் இது சர்வ சாதாரணமாக இருக்கிறது. பிரிட்டனில் கொடுக்கப்படும் மோட்டார் லைசென்ஸ் எண்ணிக்கையில் நூற்றுக்குப் பன்னிரண்டு ஸ்திரீகள் பெறுகிறர்கள்,

## ஸ்திரீ புனர் விவாஹ சங்கம்

நரசாப்பூரில் புதிதாக ஸ்திரீ புனர் விவாஹ சகாய சங்கம் என்று ஒரு ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது விதவா விவாஹம் செய்ய முன் வருபவர்களுக்கு உதவிபுரியும். இதன் தலைவர் ஸ்ரீமதி சத்யாவதி தேவி; காரியதரிசி திரு. வி. கே. ராவ்.

... ... ...

## காணமற்போன பெண்கள்

பிரிட்டனில் பிரதி வருஷமும் நாற்பதினயிரம் நங்கையர்கள் தங்கள் உற்றர் உறவினருக்குச் சொல்லிக்கொள்ளாமல் காணமல் ஓடிவிடுகிறர்கள் என்று புகார் செய்யப்படுகிறதாம். என்ன காரணமோ?

... ... ...

## சிறு புஸ்தகம்

மியூனிச் நகரில் குண்டாலடிபட்ட ஒரு போர்வீரன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும்பொழுது தபால் ஸ்டாம்புக்கும் பாதியளவில் ஒரு புஸ்தகத்தைத் தயார் செய்தான். அதில் 19,809 வார்த்தைகளும், 21 எண்களும் இருக்கின்றனவாம்.

... ... ...

## விலை உயர்ந்த கெடிகாரம்

உலகத்திலேயே விலை உயர்ந்த கெடியாரம் ரோமாபுரியிலிருக்கும் கத்தோலிக் கிறிஸ்தவ மத குருவாகிய போப்புக்குச் சொந்தமானது என்று சொல்லப்படுகிறது. அது வெகு அழகாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதன் மதிப்பு சுமார் 60,000 பவுன்களாம்.

# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

## மாப்பிள்ளை சந்தை

மௌரான் என்ற நகரத்தில் மாப்பிள்ளைச் சந்தை நடக்கிறது. அங்கு ஒவ்வொரு வருஷமும் ஜூன்மாதம் 7உ மாப்பிள்ளைச் சந்தை ஒன்று கூடும். அச்சந்தைக்கு வெளியூரிலிருந்து பலர் வேடிக்கை பார்க்க வருகின்றனர். மணத்தை விரும்பும் யுவர்கள் தங்களை வெகு அழகாக சிங்காரித்துக்கொண்டு சந்தையில் நிற்கின்றார்கள். கல்யாணம் செய்துகொள்ள விருப்பமுடைய பெண்களும் அங்கு வந்து கூடுகிறார்கள். எந்த யுவதிக்கு எந்த வாலிபனை மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறதோ அவனைக் கைப் பற்றிக் கூப்பிடுவாள். பின்னர் ஒரு விருந்து நடைபெறுகிறது. அவ்விருந்தின் செலவை மணமகளே ஏற்றுக்கொள்ளுகிறாள். இரவில் ஒரு நடனக் கச்சேரி நடைபெறும். அப்பொழுது எவள் எவள் எவரெவரை மணந்து கொண்டாள் என்ற விஷயம் பகிரங்கமாய் அறிவிக்கப்படும்.

... ... ...

## 83 வருஷ உத்தியோகம்

அமெரிக்காவில் ஜான் ஹோரான் என்று ஒருவரிருக்கிறார். அவருக்கு இப்பொழுது வயது 99. அவர் எஞ்சின் பாய்லர் இன்ஸ்பெக்டராக இப்பவும் வேலை பார்த்து வருகிறார். வேலையை வெகு திறமையாகச் செய்கிறார். அதே கம்பெனியில் அவர் 83 வருஷம் சேர்ந்தாற்போல் உத்தியோகம் செய்து வருகிறார். அவருடைய தற்சமய யஜமான் அவரை ஒய்வு எடுத்துக்கொள்ளச் சொன்ன பொழுது அவர் தான் அவன் பிறக்கு முன்பே வேலைக்கு வந்ததாகவும், தன் குமாரன் ஒருவன், 66 வயதுள்ளவன், அக்கம்பெனியிலேயே வேலை பார்க்கிறான் என்றும் ஆகையால் 99 வயதில் தனக்கு ஓய்வெடுத்துக் கொள்ள இஷ்டமில்லை யென்றும் சொன்னாராம்!

... ... ...

## இரு நாக்கு—ஊமை

சைனாவிலுள்ள ஹோனன் மாகாணத்தின் தலை நகரமாகிய செங்சௌ என்ற ஊரில் ஒரு இருநாக்குடைய யுவதி இருக்கிறாள். இருநாக்குகள் இருந்தும் பேசும் சக்தி கிடையாது. ஆனால் அவளைப் பார்க்க வருபவர்கள் அவளுக்கு ஏராளமான பணம் கொடுக்கிறார்கள்.

... ... ...

## பெரிய பூ

சுமத்திரா தீவில் ஒரு பூச்செடி இருக்கிறது. பூவின் எடை பதினைந்து பவுண்டு (சுமார் நான்கு வீசை) இப்பூவின் மத்தியிலுள்ள காலியான பாகத்தில் 1½ காலன் ஜலம் ஊற்றலாம். இது நல்ல மணம் கொடுக்கவில்லை. துர்நாற்றத்தையே உண்டாக்குகிறது.

... ... ...

## 40 வயதில் 30 குழந்தைகள்

ஹங்கேரியிலுள்ள நாற்பது வயதுள்ள ஸ்திரீ ஒருவளுக்கு முப்பது குழந்தைகள் இருக்கின்றனவாம். இவளுக்குப் பத்தாவது வயதில் முதல் குழந்தை பிறந்தது. இவள் இதுவரை ஆறு இரட்டைக் குழந்தைகளைப் பெற்றிருக்கிறாள்.



## 28 வயதில் பாட்டி

ஹங்கேரியிலுள்ள பொஜாலா என்ற நகரின் தலைவர் ஸ்ரீமதி ஜானேஸ் மில்ஹரிக்ஸ் என்பவருக்கு வயது இப்பொழுது இருபத்தெட்டுதான் ஆகிறது. ஆனால் ஜானேஸ் அதற்குள் பாட்டியாய் விட்டாள். அவளுக்குப் பதின்மூன்று வயதில் மணம் நடந்தது. பதினாலாவது வயதிலேயே ஒரு பெண்ணைப் பெற்றாள். அப்பெண்ணுக்கும் பதின்மூன்று வயதில் கல்யாணம் செய்து வைத்தாள். அப்புதல்வியும் பதினான்காவது வயதில் ஒரு பெண் குழந்தையைப் பெற்றிருக்கிறாள். ஜானேஸுக்கு நாற்பது வயதுக்குள் கொள்ளுப்பேரன் எடுத்துவிடவேண்டுமென்ற ஆசையாம்.

... ... ...

## செயற்கை மழை

ரஷ்யாதேசத்தில் செயற்கை மழை பெய்யும்படி செய்கிறார்கள். 4,000,000 ஏக்கர் சாகுபடி நிலத்தில் செயற்கை மழை வருஷிக்கச் செய்து அதன் பலாபலன்களை அறிய ரஷ்ய விவசாய சாஸ்திர சங்கத்தார் ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். பீட்ரூட், பருத்தி, தானியங்கள் இவைகள் விளையும் நிலங்களில் செயற்கை மழை நல்ல பலன் கொடுத்திருக்கிறது. விளைவு இரண்டு மூன்று பங்கு அதிகம் கண்டிருக்கிறது. செயற்கை மழையினுதவியால் சாகுபடி செய்யப்படாத பூமியை விட இம்முறையில் சாகுபடி செய்த நிலம் பீட்ரூட் ஐந்து மடங்கு அதிகம் கொடுக்கிறது. விவசாயத்துக்கு இது ஒரு புத்துயிர் அளிக்கும் முறையாகும்.

## மணந்ததற்கு அபராதம்

கோலாலம்பூரைச்சார்ந்த மலே ஒருவன் சமீபத்தில் தான் சென்ற வருடம் தள்ளி வைத்த மனைவியையே மறுபடியும் மணந்து கொண்டதற்காக மூன்று பவுன் அபராதம் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டான். அபராதம் செலுத்தத் தவறினால் இருவாரம் சிறைதண்டனை. முகமதிய சட்டப்படியே தண்டனை விதிக்கப்பட்டது.

... ... ...

## நதிக்கு அடியில் மோட்டார் ரோட்

ஹாலந்து தேசத்தில் மியூஸ் என்று ஒரு நதி இருக்கிறது. அந்த நதிக்கு அடியில் குறுக்கே மோட்டார், சைகிள், மனிதர் போக்கு வரவுக்கென்று ஒரு ரோட் அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போடுவதற்கு சுமார் எழுபத்தைந்து லக்ஷம் டாலர்கள் செலவாயிற்று.

... ... ...

## பெட்டைக்கோழி சேவலாயிற்று

கோலாலம்பூரில் ஒரு பெட்டைக்கோழி முட்டையிடுவதில் ரொம்பப்பேர் போனதாயிருந்தது. திடீரென்று அதன் தன்மை மாறிவிட்டது. சேவல் நடந்து கொள்வது போல் இப்பொழுது நடந்து வருகிறது.

... ... ...

## முள் இல்லா ரோஜா

நமக்கு ரோஜாச் செடியுடன் முள் ஞாபகமும் வரும். ஆனால் நியூயார்க் நகரத்தில் ஒருவர் முள்ளே இல்லாத ரோஜாச் செடியைக் கண்டுபிடித்தார். முதலில் தான் கண்டு பிடித்த செடியின் உதவியால் முள்ளில்லா ரோஜா நந்தவனம் ஒன்று பயிராக்கிவிட்டார்.

# கதம்பம்

## கிழட்டுத்தாயும் பெண்ணும்

கீழ் எகிப்தில் ஜாஜி நகருக்கருகில் உள்ள ஒரு கிராமத்தில் இரு குடுகுடு கிழவிகள் இருக்கிறார்கள். அவர்கள் வீடு ஒரு சிறிய மண் குடிசை. ஒரு கிழவி அம்மாள்; மற்றொருத்தி மகள். இருவரும் முகமதியர்கள். தாயின் பெயர் ரபிய்யா அஸ்ஸயீது; வயது 157. குமாரியின் பெயர் முஷாரபாஹாஷிம்; வயது 107. தசரத குமாரிகள் போலும்!

... ... ...

## மன்னருக்கு மாம்பழம்

காசி மகாராஜா, ஆறாவது ஜார்ஜ் மன்னருக்கு ஆகாயவிமானத் தபால் மூலம் ஐக்கிய மாகாணத்தில் பேர்போன லங்கிரா ஜாதி மாம்பழங்கள் 20 சேர் ஜூலை மாதம் 2ந்தேதி அனுப்பினார். லண்டன் போக மூன்று தினங்கள் பிடித்தது. இதற்கு பார்சல் சார்ஜ் 136 ரூபாய். என்ன ராஜ விஸ்வாசம்!

... ... ...

## பிரம்மச்சாரிகள் சங்கம்

பீட்டர்ஸன் என்ற பிரம்மச்சாரி உலக பிரம்மச்சாரிகளை எல்லாம் ஒன்று சேர்க்க ஒரு சங்கம் ஸ்தாபிக்கத் தீர்மானித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து வருகிறார். தன் செல்வாக்கினால் "உலக பிரம்மச்சாரிகள் தினம்" என்று ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்று உலகம் பூராவும் அந்நாளைக் கொண்டாடும்படி செய்வாராம். அந்த தினத்தில் எந்தப் பெண்ணும் பிரம்மச்சாரிகளைத் தொட்டக்கூடாதாம். பார்க்கலாம்!

## மூளையில்லாக் குழந்தை

நியூயார்க் ஆஸ்பத்திரி ஒன்றில் ஒரு குழந்தை பிறந்தது. அதற்குப் பசியெடுப்பது தெரியாது. வேறு ஒருவித உணர்ச்சியுமில்லை. அது 27 நாட்களில் இறந்து போயிற்று. டாக்டர்கள் அதை பரிசோதித்துப் பார்த்ததில் குழந்தைக்கு மூளையில்லையென்று தெரியவந்தது. மூளைக்குப் பதிலாக நீர் போன்ற ஒரு வஸ்து காணப்பட்டது. இது ஒரு புதுமையே!

... ... ...

## 15,000 பவுன் கழுத்துசங்கிலி

லண்டனில் சமீபத்தில், பிரஞ்சு புரட்சி சமயத்தில் சக்கிரவர்த்தியாக இருந்த லூயி XIV மனைவி மேரி அன்டாயினட்டின் கழுத்துச் சங்கிலி (வைரமாலை) ஏலம் போடப்பட்டது. அதை தர்பங்கா மஹாராஜா 15,000 பவுனுக்கு வாங்கினார். யார் பணம்!

... ... ...

## சொத்துக்காரர்

உலகில் பெரும்பாலோர் உழைத்துண்ணும் ஏழை மக்கள். மிகச் சிறுபான்மையோரே சொத்துக்காரர்கள். இங்கிலாந்து ஜனத்தொகையில் பத்தில் ஒரு பங்கு மக்கள் தேசத்தின் மொத்த சொத்தில் பத்தில் ஒன்பது பங்கை உடையவர்களாக இருக்கிறார்கள். அதைவிட அநியாயம் அமெரிக்காவில். ஜனத்தொகையில் நூற்றுக்கு ஒரு பாகத்தவர் மொத்த சொத்தில் கிட்டத்தட்ட பாதியை வைத்து ஆண்டு அனுபவித்து வருகின்றனர். தெய்வத்துக்கு அடுக்குமா?



## பாலிலிருந்து பட்டு

ஜெர்மனி தேசத்தைச் சேர்ந்த திரு. பெஞ்சமின் ரூஸ் என்பவர் இங்கிலாந்தில் இருந்துகொண்டு சில நூதன ஆராய்ச்சிகளில் இறங்கியிருக்கிறார். பாலிலிருந்து பட்டு செய்யும் வழியைக் கண்டு பிடிக்கப் பாடுபட்டு வருகிறார். அதில் வெற்றியும் அடைந்து விட்டார். தான் பாலினின்றும் உற்பத்தி செய்த பட்டைப் பெர்லின் நகரத்துக்கு பரிசோதனைக்கு அனுப்பினார். அதைப்பரிசீலனை செய்த நிபுணர்கள் இயற்கைப் பட்டுக்கும் இதற்கும் வித்தியாசம் இல்லையென்று கூறுகிறார்கள். விலைமட்டும் அதிகமாகும். விஞ்ஞானிகள் கல்லிலிருந்தும் நார் உரிப்பார்கள்! மணலையும் கயிறாய்த்திரிப்பார்கள்!!

... ... ...

## 2½ அடி உருளைக்கிழங்கு

பயிர் செய்யும் விதங்களில் புத்தம் புதிய ஆராய்ச்சிகள் செய்வதிலும், நல்ல நல்ல உரங்களை உபயோகிப்பதிலும் அமெரிக்கர்கள் சமர்த்தர்கள். அங்கு சமீபத்தில் 31 அங்குல நீளமுள்ள உருளைக்கிழங்கு அகப்பட்டது; அதன் சுற்றளவு 16 அங்குலம்; இடை 23 பவுண்டு. அதை நாம் 'உருளைக்காய்' என்று கூறவேண்டியதுதான்!

... ... ...

## குழந்தைகளுக்கு சூடு

வான்கோவர் ஜெனரல் ஆஸ்பத்திரி நிர்வாஹஸ்தர்கள் குழந்தைகள் பிறந்தவுடன் ஒருவித ஒளியின் உதவியால் அக்குழந்தைகளின் முதுகில் சூடுபோட்டாற் போல் அதன் அதன் பெயரை எழுத ஏற்பாடு செய்திருக்கிறார்கள். குழந்தைகள் வேறு தாயார்களிடம் மாறிப் போகாமலிருப்பதாக இந்தச் சூடு போடப்படுமாம். இந்த அடையாளம் 6 மாதத்துக்கு இருக்கும். நல்ல யோசனைதான்!

... ... ...

## கரடிப் பெண்

ஒலிம்பஸ் மலைப்பிரதேசத்திலுள்ள வேடர்கள் ஒன்பது வயதுப்பெண் ஒருத்தியைப் பிடித்து வந்திருக்கிறார்கள். அவள் குழந்தைப் பிராயமுதலே பெண் கரடிகளால் பாலூட்டி வளர்க்கப்பட்டு வந்தாளென்று தெரிகிறது. அவள் இப்பொழுது கரடி மாதிரியே நடந்து கொள்ளுகிறாள். இவள் 1928-ம் வருஷம் புரூசா என்ற கிராமத்தில் 3 மாதக்குழந்தையாக இருக்கும் போது கரடியால் தூக்கிச் செல்லப்பட்டாள். சகுந்தலையின் சகோதரி!

... ... ...

## என்னகருணை!

பிரான்ஸில் சென்ற உலகயுத்தத்தில் மடிந்து போன பிரிட்டிஷ் சிப்பாய்களின் பிரேதங்களை இன்னமும் தேடுகிறார்களாம். வேலையற்ற வேலையா? என்ன கருணை பிணங்கள் மீது!

... ... ...

## பெண்கள் இருதயம்

ஸ்திரீகள் கர்ப்பமாயிருக்கும் பொழுது அவர்களுடைய இருதயம் சமயத்துக்குத் தகுந்தபடி விரிந்து கொடுத்துக்கொள்ளுகிறது என்று பிரபலவைத்திய மேதாவிகள் சொல்லிவந்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அமெரிக்காவில் இரண்டு டாக்டர்கள் கிளம்பி அந்தக் கொள்கைக்கு ஆதாரமே யில்லையென்று பறை சாற்றுகிறார்கள். யாரைத்தான் நம்புவது? மூளை அதிகமானால்!

# சினிமா செய்திகள்

### "நந்தகுமார்"

பெங்களூர் பிரகிருதி பிக்சர்ஸார் "நந்தகுமார்" என்னும் தமிழ் படத்தைப் பிடிக்க ஏற்பாடு செய்துள்ளனர். ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி யசோதையாக நடிப்பாரென்று தெரிகிறது.

### பாலயோகினி

சென்னை யுனைட்டெட் ஆர்ட்டிஸ்ட்ஸ் கார்பொரேஷனின் 'பாலயோகினி' தெலுங்கிலும், ஹிந்தியிலும் எடுக்கவேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இவைகளிலும் குழந்தை சரோஜாவும் நடிப்பாள். மற்ற நடிகர்கள் வேறு. மோஷன் பிக்சர்ஸ் ப்ரொடியூஸர்ஸ் கம்பைன்ஸாரின் உயர்தர ஸ்டூடியோவில் படங்கள் எடுக்கப்படும். மிஸ். எஸ். டி. சுப்புலக்ஷ்மி நடிக்கப்போகும் மற்றொரு சமூகக்கதையும் தயாராய் விட்டது. கூடியவிரைவில் அதுவும் படமாகத்தயாரிக்கப்படும்.

### எம். எஸ். சுப்புலக்ஷ்மி

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி நடிக்கும் ஒரு சமூகக்கதை தயாராய் வருகிறது. இதுவும் மோஷன் பிக்சர் ப்ரொடியூஸர்ஸ் ஸ்டூடியோவிலேயே பிடிக்கப்படும். முன்னர் 'விப்ரநாராயண'வில் எம். எஸ். சுப்புலக்ஷ்மி நடிக்கப்போவதாக இருந்தது கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### வேதாள உலகம்

சேலம் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சக்லஸ் பிக்சர்ஸார் 'வேதாள உலகம்' என்ற திரு. சம்பந்த முதலியாரின் கதையைத் தமிழ் படமாக எடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டார்கள். படமும் சென்னையிலுள்ள ஒரு ஸ்டூடியோவிலேயே தயாரிக்கப்படும் என்று தெரிகிறது.

### ஸ்ரீரெங்கா பிலிம்ஸ் லிமிடெட்

மேற்படி பெயர்கொண்ட ஒரு புதிய சினிமாக் கம்பெனி சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கூடிய விரைவில் தமிழ் படங்கள் எடுப்பார்கள். அவர்களது முதல் படத்தில் பிரபல வித்வான் சித்தூர் சுப்ரமண்ய பிள்ளை பிரதம நடிகராகத் தோன்றுவார் எனக்கூறப்படுகிறது.

### ராஜேந்திரா பிலிம்ஸ் லிமிடெட்

இக்கம்பெனியார் "என் ஜீவியம்" (My life) என்ற சமூகக்கதையை தமிழ் சினிமாப்படமாகத் தயாரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இதில் பெரும்பாலும் அமெச்சூர் நடிகர்களே நடிக்கிறார்கள். படம் கல்கத்தா ஈஸ்ட் இந்தியா பிலிம்ஸ் ஸ்டூடியோவில் எடுக்கப்படும் எனத் தெரிகிறது.

### ராஜம் புஷ்பவனம்

சென்னை சவுண்டு ஸிடியில் மதுரை மீனாக்ஷி ஸினிடோன் கம்பெனியாருக்காக டைரக்டர் பிரகாஷ் அவர்களால் தயாரிக்கப்பட்டு வரும் "ராஜசேகரன்" என்ற படத்தில் ஸ்ரீமதி ராஜம் புஷ்பவனம் பாட்டுக் கச்சேரி செய்யும் ஒரு காட்சியும் சேர்க்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர் குறிப்புகள்

### கிழவன் குமரி மணம்

நம் நாட்டில் வயது முதிர்ந்த படுகிழவர்களுக்கு சிறு வயது கன்னிகைகளைத் திருமணம் செய்து கொடுக்கும் கொடுமையான பழக்கம் இன்னும் ஒழிந்தபாடில்லை. சில பெற்றோர்கள் சொத்துக்காக தங்கள் அருமைப்புதல்விகளை விற்று வருகிறார்கள். அக்கன்னிகைகளுக் கிஷ்டமில்லாத வயோதிகருக்கு வற்புறுத்தி மணம் செய்து அவர்களைத் துன்பப்படு குழியில் ஆழ்த்துகிறார்கள். இது சம்பந்தமாக சமீபத்தில் தீவாஸ் (ஸீனியர்) சமஸ்தானத்தில் ஒரு சம்பவம் நடந்தது குறிப்பிடத்தக்கது. 50 வயது கிழவன் ஒருவன் சிறு கன்னி ஒருவளை மணக்க ஏற்பாடுகள் செய்திருந்தான். அச்சிறுமி போர்வால் ஜைன வகுப்பைச் சேர்ந்தவள். அவள் தந்தை கிழவனிடமிருந்து பெண்ணுக்கு ஸ்திரீ சுல்கமாக (பெண்விலை) 15000 ரூபாய் பெற்றுக்கொண்டு அவ்விளமங்கையின் இஷ்டத்துக்கு விரோதமாக அக்கிழவனுக்கு கல்யாணம் செய்து கொடுக்கச் சம்மதித்தார். இதை நல்ல சமயத்தில் ஒஸ்வால் ஜைன யுவர்கள் தடுத்தார்கள். அவர்கள் விஷயத்தை சமஸ்தான அதிகாரிகளுக்குத் தக்கசமயத்தில் தெரிவித்தார்கள். அதிகாரிகள் கண்மூடி தர்பார் செய்துகொண்டு தூங்கவில்லை. "தேவடியாள் சிங்காரிப்பதற்குள் தேர் நிலைக்குப் போய்விடும்" என்ற பழமொழிக்கொப்ப அதிகாரிகள் நத்தை வேகத்தில் நடவடிக்கை எடுக்காது, துரிதமாகவே கவனித்து மணத்தைத் தடைசெய்ததுமன்றி பெண்ணின் தந்தை வயது வராத தன் புத்திரியை இதுபோல் இனிமேலும் விற்காமலிருப்பதற்காக 1000 ரூபாய் ஜாமீன் தொகையும் வாங்கினார்கள். சமஸ்தான அதிகாரிகளின் செயல் மாதருலகத்தால் பெரிதும் போற்றத்தக்கது. நம் பிரிட்டிஷ் இந்தியாவிலும் இம்மாதிரியான அக்கிரமங்களைத் தடுக்க தகுந்த சட்டங்களை இயற்றுவது சமூக சீர்திருத்தவாதிகளின் கடமையாகும். முக்கியமாக சட்டசபைகளில் ஸ்திரீகளின் பிரதிநிதிகளாக வீற்றிருக்கும் மாதுசிரோன்மணிகள் இது போன்ற விஷயங்களில் போதிய சிரத்தை காட்டுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

... .... ....

### மாதரும் இன்ஷூரன்சும்

எதிர்கால நன்மைக்காகவும், திடீரென்று நேரிடும் ஆபத்துக்களுக்காகவும் இன்சூர் செய்து கொள்கிறோம். இது விஷயத்தில் இன்ஷூர் கம்பெனிகள் ஸ்திரீகளுக்கென சில தனி நிபந்தனைகள் ஏற்படுத்தியிருக்கின்றன. அவர்கள் கட்ட வேண்டிய பிரீமியக் கட்டணம் ஆண்களை விட சற்று அதிகமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது போதாதென்றால் ஒரு தகுந்த டாக்டரால் பரிசோதிக்கப்பட்டு சர்ட்டிபை செய்யப்பட்ட பின்னும், அவளது பாலிஸி கம்பெனியாரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னும், யாதொரு முகாந்திரமுமின்றி சில வருஷங்கள் அந்த பாலிஸி அங்கீகாரம் நிபந்தனைக்குட்பட்டதாகவே இருக்கிறது. அதாவது அப்பேர்வழியின் தேகாரோக்கியம் அந்த குறிப்பிட்ட காலத்தில் 'சோதனை'யிலிருக்கிறது. அந்த "சோதனை காலத்தில்" மரணம் ஏற்பட்டால் கம்பெனியார் இன்சூர் செய்யப்பட்ட தொகை கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அந்தக் காலத்தையும் தாண்டி பாலிஸி பரிபூரணமாக ஒத்துக்கொள்ளப்பட்டதென்று வைத்துக் கொள்ளுவோம். பின்னும் கம்பெனியின் பொறுப்பு கட்டுப்பட்டதாகவே இருக்கிறது. அதாவது பிரசவத்தினாலோ அல்

லது அதை யொட்டிய நேர்முகமான அல்லது மறைமுகமான காரணங்களினாலோ பாலிஸி கட்டிய பெண் இறந்தால் அப்பொழுதும் கம்பெனியின் பொறுப்பு குறைந்துவிடுகிறது. இந்த நிபந்தனை எவ்வளவு விரிவானதென்பதைப் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. தவிர சில கம்பெனிகள் சுய சம்பாத்யம் இல்லாத பெண்களுக்கு இன்ஷூரன்ஸ் செய்து கொள்ள இடமளிப்பதில்லை. ஆண்களுக்கு இவ்வித வித்தியாசம் கிடையாது. இவ்வாறு ஸ்திரீகளுக்கு பலவித தடைகள் இருந்து வருவதை அகற்றவேண்டியது அவசியம். எவ்வளவு தடைகளை தங்களுக்கும் நஷ்டமின்றி அகற்ற முடியுமோ அவ்வளவையும் கம்பெனிகள் நீக்குவதால் தாங்கள் லாபமடைவது மன்னியில் ஸ்திரீகளுக்கும் நன்மை செய்யும். இன்ஷூரன்ஸ் சட்டத்தில் வேண்டிய திருத்தங்களை விரைவில் செய்ய வேண்டிய முயற்சிகளை கம்பெனிகளும், ஸ்திரீ சமூக சேவையாளர்களும் செய்ய முன்வருமாறு கோருகிறோம்.

... ... ...

## உபாத்தியாயினி உத்தியோகம்

சமீபத்தில் சென்னை சர்க்கார் ஸ்திரீ உபாத்தியாயினிகள் நியமன சம்பந்தமாக ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதன் சாராம்சம், இனி ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்கு நியமிக்கப்படும் உபாத்தியாயினிகள் கூடிய மட்டும் கன்னியர்களாக இருக்கவேண்டும், அல்லது விதவைகளாக இருக்க வேண்டுமென்பதே. அதாவது அந்த உத்தியோகங்களுக்கு கல்யாணமான பெண்களைவிட விதவைகளுக்கும், கன்னிப் பெண்களுக்கும் அதிக சலுகைகாட்ட வேண்டும் என்று சர்க்கார் கருதுகிறார்கள். இக்கருத்தை நிறைவேற்றும்படி ஸ்தலஸ்தாபனங்களுக்கு மாகாண சர்க்கார் சுற்றறிக்கையும் விடுத்துள்ளார்கள். இதன் நோக்கம் கல்யாணமானவர்கள் தங்கள் கணவன்மாரிடம் [illegible]லும், ஆதரவிலும் ஜீவிக்க முடியும், கன்னியரும் விதவையரும் யாருமற்றவர்கள் என்றும், எனவே அவர்களுக்கே சர்க்கார் உதவியளிக்கவேண்டு மென்பதாகவே இருக்க வேண்டு மென்று நாம் நம்புகிறோம். பத்திரிகைகளில் இந்த உத்தரவைப்பற்றி பூரா விவரங்கள் வராததால் இதுதான் சர்க்காரின் நோக்கம் என்று எண்ணவேண்டியிருக்கிறது. சர்க்கார் கன்னியருக்கும், விதவைகளுக்கும் உதவி செய்யமுன் வருவதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால் மணமுடிந்தவர்களுடைய வேலையைப் பிடுங்கியும், அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாமல் பெண்களிடையே பிரிவினை உண்டாக்கி ஒரு பிரிவைமட்டும் சர்க்கார் ஆதரிப்பது என்பது விரும்பத்தக்க விஷயமல்ல. மணமானவர்களுக்குப் பணம் அவசியமில்லை என்று சர்க்கார் நினைக்கிறார்களா? அது தப்பு. கணவன் மார்கள் வேலையற்றவர்களாக இருக்கலாம்; அல்லது குழந்தை குட்டிகள் குடும்பத்தில் அதிகமாக இருக்கலாம். அவர்களுக்கு வேலை கொடுப்பது பாவமா? அல்லது பாதுகாப்புடைய கன்னியரும், விதவையரும் இல்லையென்று அர்த்தமா? எல்லாவிதவைகளும், கன்னியரும் பாதுகாப்பு இல்லாமலில்லை, எல்லாமணமான பெண்களும் சகலதேவைகளையும் தங்கள் கணவன் மாரிடமிருந்து பெற்றுக்கொள்ளவு மில்லை. இந்த உத்தரவில் பலவித மாறுதல்கள் இருக்கவேண்டும். விலக்கு விதிகள் (exceptions) விநோ மணமானவர்கள் மணமான 'குற்றத்துக்காக' கஷ்டப்படாதபடி செய்யவேண்டும். பொதுவாக படித்த எல்லா ஸ்திரீகளும் விரும்பினால் வேலைக்குப்போக சௌகர்யமளிக்க வேண்டும். பெண்கல்விக்கு ஒருசரியான திட்டம் வகுத்தால் இப்பொழுது பெண்களிடமிருந்து வரும் வேலையில்லாத்திண்டாட்டம் மறைந்து போகும். காங்கிரஸ் சர்க்கார் சரியான வழியைப் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறோம்.



ஆவணக்காப்பக
சென்னை-600 00

# பஞ்சாங்கம்


| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1937ஞு ஆகஸ்டுமீ ஈசுவரஞு ஆடி - ஆவணிமீ.<br>திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| 1 | 17 | ஞாய | நவ 7-36, * 34-18, தி 6-13, கிருத்திகா, மூர்த்தி. |
| 2 | 18 | திங் | தச 1-34, உப 53-37, ரோ 30-5, தி 11-29, ரா 11-38. |
| 3 | 19 | செவ் | துவா 48-37, மிரு 25-35, ரா 13-37, வைஷ்ணவை. |
| 4 | 20 | புத | திர 42-8, ஆரு 20-58, ரா 17-26, பிரதோ, சிவரா. |
| 5 | 21 | வியா | சதி 35-56, புந 16-37, ரா 4-1, ஸ்ரீவில்லிபுத்தூர் கருடன். |
| 6 | 22 | வெ | ● 30-21, பூச 12-49, ரா 11-57. |
| 7 | ஆடிமீ 23 | சனி | பிர 25-48, ஆயி 9-54, ரா 7-46, ஸ்ரீரவணசுத்தம். |
| 8 | 24 | ஞாய | துவி 22-34, மக 8-14, தி 28-9. |
| 9 | 25 | திங் | திரி 20-56, பூர 8-0, தி 26-27. |
| 10 | 26 | செவ் | சது 21-7, உத் 9-29, ரா 0-22, கருட-நாக- பஞ்சமி. |
| 11 | 27 | புத | பஞ் 23-7, ஹஸ் 12-47, ரா 3-13, பஞ்சமி திதி. |
| 12 | 28 | வியா | ஷஷ் 26-50, சித் 17-48, ரா 2-6, சூரிய ஷஷ்டி. |
| 13 | 29 | வெ | ஸப் 31-59, ஸ்வா 24-15, ரா 8-47, பக்ஷிராஜர். |
| ஆகஸ்டுமீ 14 | 30 | சனி | அஷ் 38-4, விசா 31-37, ரா 11-45, அஷ்டமி திதி. |
| 15 | 31 | ஞாய | நவ 44-22, அநு 39-19, ரா 23-54, ஆடிபண்டிகை. |
| 16 | 1 | திங் | தச 50-15, கே 46-41, ஸிம்மரவி 5-13, கொல்லமாண். |
| 17 | 2 | செவ் | ஏகா 55-16, மூல 53-10, ரா 17-38, ஸர்வைகாதசி. |
| 18 | 3 | புத | துவா 58-54, பூரா 58-20, தி 19-51, காளஹஸ்திரதம். |
| 19 | 4 | வியா | திர 60-0, உரா 60-0, தி 19-23, பிரதோஷம். |
| 20 | 5 | வெ | திர 1-0, உரா 2-1, தி 12-23, வரலக்ஷ்மி விரதம், ருக்<br>உபாகர்மம், ஓணம், வராஹஜயந்தி. |
| 21 | 6 | சனி | சதி 1-30, ஸ்ரீவ 4-10, தி 14-17, யஜுருபாகர்மம். |
| 22 | 7 | ஞாய | ○ 0-31, உப 57-44, அவி 4-52, தி 22-42. |
| 23 | ஆவணிமீ 8 | திங் | துவி 55-0, சத 4-19, தி 19-55, ராகவேந்திரர். |
| 24 | 9 | செவ் | திரி 50-56, பூட் 2-49, தி 25-55, கரிநாள். |
| 25 | 10 | புத | சது 46-22, உட் 0-33, உப 57-16, தி 29-10. |
| 26 | 11 | வியா | பஞ் 41-25, அசு 54-44, ரா 14-24. |
| 27 | 12 | வெ | ஷஷ் 36-19, பர 51-30, தி 17-26, ஹலஷஷ்டி. |
| 28 | 13 | சனி | ஸப் 31-6, * 48-11, தி 19-50, கோகுலாஷ்டமி. |
| 29 | 14 | ஞாய | அஷ் 25-51, ரோ 44-52, தி 25-58, அஷ்டமி திதி. |
| 30 | 15 | திங் | நவ 20-40, மிரு 41-36, சே 2-6, திதிதுவயம். |
| 31 | 16 | செவ் | தச 15-31, ஆரு 38-27, தி 1-30, ஏகாதசி திதி. |

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரி 1ல் கர்ப்பம் கொண்டவள் அக்டோபர் 8ல் குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்ப்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 33 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

Printed and Published by Dr. K. N. Kesari at the Lodhra Press, Egmore, Madras.



# வாஜீகர

(REGD.)

## ஓர் வரப்பிரசாதம்

ஆச்சரியமாக சீக்கிரத்தில் யௌவனம் தரும்.

இதற்கு நிகர் வேறொன்றில்லை.

பெரிய புட்டி 1க்கு ரூ. 5. சிறிய புட்டி 1க்கு ரூ. 2-8-0.

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ், 107, பிராட்வே, சென்னை.**

---

Trade Mark

Regd. No. 1983

விலை தோடு சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா எட்டு

விலை பேசரி சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா ஆறு

ஒரிஜினல்

## கல்ச்சர் வைரங்கள்

கல்ச்சர் வைரம் எங்களிடம் தவிர வேறு இடங்களில் கிடையாது.

கேட்லாக் இனாம்!

சொ. அருணசலம் செட்டி,

மு. ராமசாமி செட்டி,

ஷுருப்பு வியாபாரம், திருச்சினாப்பள்ளி.

---




எம். எஸ். எம். ரயில்வே, பிரபல பிலிம் கம்பெனிகள், கிராமபோன் வியாபாரிகள், புஸ்தக பிரசுரகர்த்தர்கள் முதலியவர்களுக்கு நாங்களே ஆப்டோன், லயன், கலர் பிளாக்குகள் அழகாகவும் நேர்த்தியாகவும் செய்து கொடுக்கிறோம். விவரங்களுக்கு எழுதவும்:

**கே. ரத்னம் அண்டு கோ.,**


*(Late of Klein & Peyrol),*

291, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

---




---



சுவை மிகுந்த

**உண்டிகள் — பானங்கள்.**

இணையற்ற ரகம்—வகையான உபசாரம்—

உல்லாசமான இடம்—நல்ல காற்றோட்டம்

முதல் தரமான வசதி.

# சாஸ்திரி ஹோட்டல்

**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**



# டோங்ரேயின் பாலாமிருதம் என்றால் என்ன?

1. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளுக்கு மேன்மையான டானிக்.
2. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளின் கனச்சூட்டையும், பலஹீனத்தையும் குணப்படுத்தும்.
3. டோங்ரேயின் பாலாமிருதம் எலும்பை வளர்க்கும் சக்தியைக் கொடுக்கிறது.
4. டோங்ரேயின் பாலாமிருதம் ஜீரணசக்திக்கு உதவுகிறது.
5. டோங்ரேயின் பாலாமிருதம் பலத்தைத் தந்து சுகத்தைக் கொடுக்கிறது.
6. டோங்ரேயின் பாலாமிருதம் அநேக நாட்களாய் கஷ்டப்படுத்தும் இருமலையும் சாதா ஜுரத்தையும் போக்கும்.
7. டோங்ரேயின் பாலாமிருதம் தித்திப்பானதால் குழந்தைகளால் சந்தோஷத்துடன் சாப்பிடப்படுகிறது.
8. எவ்விதத்திலும் "டோங்ரேயின் பாலாமிருதமே" வளரும் குழந்தைகளுக்கு சரியானதாக யிருக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்




# ஜுரங்களுக்கு

ரோகங்களில் முதன்மையானது ஜுரம். பலவித ஜுரங்களினல் நாம் தாக்கப்படுகிறோம். வாதஜுரம், பித்தஜுரம், கபஜுரம் முதலிய எல்லாவித ஜுரங்களையும் ஆச்சர்யமாய் நிவர்த்தி செய்வதில் முதன்மையானது.

# அர்க்கா

இந்த **அர்க்கா**வை கடந்த இருபத்தைந்து வருஷங்களாய் ரோகிகளும், வைத்தியர்களும் உபயோகித்து இதன் குணவிசேஷத்தை நன்கு உணர்ந்து புகழ்ந்திருக்கின்றார்கள். இளங் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். இவ்வுண்மைகளை [illegible].

[illegible] இதை எடுத்து[illegible].

இதன் விலை 6 அவுன்ஸ் புட்டி ரூ. 2 8 0
,, 3 ,, ,, 1 8 0
,, 1 ,, 0 8 0

கேஸரி குடீரம் - எழும்பூர் - மதராஸ்.

# QUEEN OF TONICS




லோத்ரா




| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |